# வைகறை

## (சிறுகதைகள்)





திியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்

# வைகறை

(சிறுகதைகள்)

Jaffna Central College Library

தியத்தலாவ எச்.எஃப். ரிஸ்னா

JAFFNA CENTRAL COLLEGE LIBRARY

| A/C. No | CLASS. No |
| --- | --- |
| 11586 | |


வெளியீடு

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்

## பதிவுத் தரவுகள்


நூல் : வைகறை (சிறுகதைகள்)

நூலாசிரியர் : தியத்தலாவ எச்.எ∴ப். ரிஸ்னா

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்

கணினி : வெலிகம ரிம்ஸா முஹம்மத்

முதல் பதிப்பு : 2012 நவம்பர்

விலை : ரூபா 300.00


## BIBILIOGRAPHICAL DATA


Title : Vaiharai (Short Stories)

Author : Diyatalawa H.F. Rizna

Copy Right : Author

Publication : Ceylon Progressive Art & Literary Association

Layout : Weligama Rimza Mohamed

First Edition : 2012 November

Price : Rs 300.00

I.S.B.N. : ISBN 978-955-52975-0-9

# பதிப்புரை

இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் ஈழத்து தமிழ் நவீன இலக்கியத்தை செழுமைப்படுத்தும் நோக்குடன் பல்வேறு இலக்கியச் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

இலக்கியக் கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், நூல் வெளியீடுகள், நூல் விமர்சன அரங்குகள் போன்ற பல்துறை கலை இலக்கியச் செயல்பாடுகளைத் தொடர்ச்சியாக செய்து வருகின்றது எமது மன்றம். குறிப்பாக எமது மன்றம் இலக்கியச் நூல்களை வெளியிடுவதில் கவனம் செலுத்தி வருகின்றது.

கலை இலக்கிய நூல்களை வெளியிடுவதற்கும் அப்பால் சென்று சமூக, அரசியல், பொருளாதார நூல்களை வியாபார நோக்கின்றி வெளியிட்டு வருகின்றது.

வைகறை என்ற இந்தச் சிறுகதைத் தொகுதி ரிஸ்னாவின் இரண்டாவது நூல் வெளியீடாகும். இவர் ஏற்கனவே இன்னும் உன் குரல் கேட்கிறது என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். செல்வி எச்.எ.்.ப். ரிஸ்னா எதிர்காலத்தில் சிறந்த பெண் படைப்பாளியாக வருவார் என்ற நம்பிக்கையுண்டு.

மேலும் இளம் எழுத்தாளர்களை இனங்கண்டு, அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களது நூல்களையும் வெளியிட்டு வருகின்றோம். இதன் பிரகாரம் எமது மன்றம் ஏற்கனவே வெலிகம ரிம்ஸா முஹம்மத் என்ற இளம் எழுத்தாளரது தென்றலின் வேகம் என்ற கவிதைத் தொகுதியை தனது 19 ஆவது நூலாக 2010 இல் மன்றம் வெளியிட்டு வைத்தது. அதனைத் தொடர்ந்து திருமதி சுமதி குகதாசனின் தளிர்களின் சுமைகள் என்ற கவிதைத் தொகுதியை 2012 இல் வெளியிட்டு வைத்தது. அதே போல் செல்வி தியத்தலாவ எச்.எ.்.ப். ரிஸ்னாவின் சிறுகதை நூலையும் எமது மன்றம் தனது 27 ஆவது நூலாக வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

**பதிப்பாசிரியர்**
**இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்**

# அணிந்துரை

சிறுகதை, இலக்கியத்தின் இளையது, கடைக்குட்டி. கடைக்குட்டி எப்பொழுதும் காரமானதாகவும் வீச்சானதாகவும் இருக்கும்.

எழுத்து இலக்கியத்தில் முதன்முதலாக ஜனித்தது கவிதை. மனிதன் தனது உள்ளுணர்வுகளை கவிதை மூலந்தான் வெளிப்படுத்தினான். இக்கால கட்டத்தில் பழம்பெரும் காப்பியங்கள் புனையப்பட்டன. ஹோமரின் 'இலியட்', 'ஒடிசி', மில்ரனின் 'இழந்த சொர்க்கம்', 'மீண்ட சொர்க்கம்' போன்றவை படைக்கப்பட்டன. தமிழில் உன்னத காப்பியங்களான கம்பராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை தோன்றின. இப்படைப்புக்கள் ஆயிரம் பக்கங்களுக்கு மேலாக எழுதப்பட்டன. இச் சகாப்தத்தில் மனிதருக்குப் போதிய கால அவகாசம் இருந்தது. எனவே இப்படைப்புக்களை அவர்கள் நீண்டநேரத்தைச் செலவழித்துச் சுவைத்தார்கள்.

கவிதையை அடுத்து நாவல் இலக்கியம் தோன்றியது. இக்காலகட்டம், 'மறுமலர்ச்சிக் காலம்' என்று அழைக்கப்பட்டது. இச் சகாப்தத்தில் விக்ரர் ஹியூகோ, எமிலி ஜோலோ, சார்ல்ஸ் டிக்கின்ஸ், தோமஸ் ஹாடி, றொமெயின் றோலன்ட் முதலிய பிரபல நாவலாசிரியர்கள் உன்னத படைப்புக்களைப் புனைந்தார்கள். இப்படைப்புக்களும் ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்டவையாக இருந்தன.

மறுமலர்ச்சிச் சகாப்தத்தைத் தொடர்ந்து கைத்தொழிற் புரட்சிக் காலம் தோன்றியது. இக்கால கட்டத்தில் மக்கள் இயந்திர வேகத்தில் உழைக்க வேண்டிய அவசியமிருந்தது. எனவே குறுகிய நேரத்தில் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இக்கால கட்டத்திலேயே சிறுகதை இலக்கியம் தோன்றி வளர்ந்தது.

கதைகளில் பலவிதம். நாட்டார் கதைகள், பாட்டிக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், திகிலூட்டும் கதைகள், தேவதைக் கதைகள், தென்னாலிராமன், முல்லா, ஈசாப்பு போன்றவர்களின் விகடக் கதைகள் முதலிய பலவகைக் கதைகளுண்டு. ஆனால் இவை அனைத்தையும் விட உருவத்திலும், உள்ளடக்கத்திலும் முற்றிலும் வேறுபட்டதாகவே சிறுகதையின் வடிவம் அமைந்துள்ளது. இவ்வடிவம் முதலில் ஐரோப்பாவில்தான் தோன்றியது. பின்னர் தமிழுக்கு வந்து சேர்ந்தது. இந்தவகையில் தமிழ்ச் சிறுகதையின் தந்தையாக தமிழ் நாட்டைச் சேர்ந்த புதுமைப்பித்தன் உருவாகிறார்.

சிறுகதை என்பது எதுவித நீதியையோ, தர்மத்தையோ போதிப்பதில்லை. அது நாவலைப் போல ஒரு மனிதனின் காலகட்டத்தையோ, சகாப்தத்தையோ உள்ளடக்குவதில்லை. சிறுகதை என்பது, ஒரு சிறு சம்பவத்தை அல்லது

செயலைக் கூறுவதாகவும், குறுகிய நேரத்துக்குள் நடந்து முடிந்ததாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

சிறுகதையைப் பொறுத்தவரை, கதையின் கரு, உரு, கதையை நகர்த்திச் செல்லும் உத்தி, பாத்திர வார்ப்பு, கதையின் ஆரம்பமும் முடிவும், களம், காலம் ஆகியவற்றில் போதிய கவனம் வெலுத்த வேண்டும். இவை ஒன்றிணைகையிலேயே ஒரு சிறந்த படைப்பு உருவாகும்.

சிறுகதை என்றால் என்ன? அதற்கு ஒரு குறிப்பிட்ட வரைவிலக்கணம் கிடையாது. ஆனால் சில எழுத்தாளர்கள் தமக்கேயுரிய பாணியில் சிறுகதை பற்றிக் கூறுகின்றார்கள்.

சிறுகதைக்குத் தொடக்கமோ முடிவோ இருத்தல் கூடாது, அது வாழ்வின் ஒரு பகுதி அல்லது துண்டாக அமைய வேண்டும் என்று அன்ரன் செக்கோவ் கூறுகிறார்.

சிறுகதை முடிவிலியானதாகவும் பத்துப் பதினைந்து நிமிடங்களில் உரத்து வாசித்து முடிக்கக் கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டும் என்கிறார் எம்.ஈ. பாற்ஸ் (BATS).

ஒரு குறிப்பிட்ட சம்பவத்தில் மனித மனம் படும்பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறையைக் குறிப்பதுவே சிறுகதை என்கின்றார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

சிறுகதை ஒரு குதிரைப் பந்தயம். தொடக்கமும் முடிவுமே மிக முக்கியம் என்கின்றார், எறிக் செச்விக் என்பவர்.

எட்கார் அலன்போவும், ஹர்தோனும் சொல்திறத்தையும், வினைப் பயனையும் வலியுறுத்துகின்றனர்.

சிறந்ததோர் சிறுகதையில் ஓர் உணர்வு அல்லது உணர்வுகள், தொடர் என்பன குறித்ததோர் சுற்றுச்சார்பு நிலையில் கூறப்பட வேண்டும். வாழ்வின் உச்ச நிலைகளை மிகச்சிறந்த எல்லைக்குள் செறிவாக்கி வழங்கல் அவசியம்.

சிறந்த சிறுகதையில் ஒரு பாத்திரத்தின் பரிமாணத்தை அல்லது முப்பரிமாணத்தை அல்லது அதன் வளர்ச்சியைக் காணமுடியாது. பாத்திரத்தைச் சந்திப்பது மிகச்சில நிமிடங்களே. அத்துடன் அதன் உறவுநிலை, தொடர்பு, சுற்றுச் சூழல், பின்புலம் என்பன வரம்புக்கு உட்பட்டனவாகவே அமையும்.

பாத்திரங்களின் எண்ணிக்கை, கதையின் அளவு என்பன மாறுபட்டாலும்

சம்பவம் ஒன்றாகத்தானிருக்க வேண்டும். நிகழுமிடமும் காலநேரமும் ஒரு வரையறைக்கு உட்பட்டிருக்க வேண்டும். உதாரணத்திற்கு எம். ஸ்டேன்லி என்ற ஆங்கில எழுத்தாளர், உலகின் அதிநவீனச் சிறுகதை ஒன்றைப் புனைந்துள்ளார். 'கரடி வேஷம் போட்டவன் வாழ்வில் ஒருநாள்' என்பது அதன் தலைப்பு. 'என்னைச் சுடாதே' - என்ற இரண்டே இரண்டு வார்த்தைகளை மட்டுமே கொண்டது இச்சிறுகதை.

றிச்சாட் பிராட்டிங்கன் என்ற ஆங்கில சிறுகதை ஆசிரியன் 'கொடுமை' என்ற மகுடத்தில் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கதை இது. "வயலின் கற்றுக் கொண்டிருக்கும் ஒரு மனிதனுடன் சான் ஜோஸ் நகரிலுள்ள ஓர் அறையில் வாழ்வது என்பது மிகக் கடினம் என்று குண்டுகள் பயன்படுத்திய பிறகான துப்பாக்கியை பொலீசிடம் ஒப்படைத்த அவன் சொன்னான்".

அகஸ்டோ மான்டிலோ என்ற சிறுகதை ஆசிரியர் ஸ்பானிஷ் மொழியில் உலகத்து அதிநவீன சிறுகதையைப் புனைந்துள்ளார் அத்தலைப்பு 'டைனோசர்'. கதை - 'அவன் விழித்தெழுந்த போது அந்த டைனோசர் இன்னமும் அங்கே இருந்தது'. ஒன்றரை வரிகளை மாத்திரம் தான் இந்தக் கதை கொண்டுள்ளது.

புதுமைப்பித்தன் என்ற தமிழ் சிறுகதை மன்னன் இருபத்தாறு பக்கங்களைக் கொண்ட துன்பக்கேணி, மூன்று பக்கங்களைக் கொண்ட 'பொன்னகரம்', இரண்டரைப் பக்கங்களைக் கொண்ட 'கட்டில் பேசுகிறது' என்று பல்வேறு அளவுகளிலான உன்னதமான தமிழ் சிறுகதைகளைச் சிருஷ்டித்துள்ளார்.

சிறுகதையின் பாத்திரங்கள் ஒன்றாகவோ, இரண்டாகவோ அல்லது மூன்றாகவோ இருக்கலாம். ஆனால் பிரதானமானதாக ஒரு பாத்திரம் மட்டும் இருப்பதே நன்று. ஏனைய துணைப் பாத்திரங்களும் உயிர்த்துடிப்புடன் இருக்க வேண்டும்.

சிறுகதையை வீச்சாக நகர்த்திச் செல்வதற்கு மொழிவளம் அவசியம். புதுமைப்பித்தனுடைய நடையை 'தவளைப் பாய்ச்சல் நடை' என்பார்கள். கதையுடன் வாசகனை இழுத்துச் செல்லும் ஆற்றல், கதை முடிவில் வாசகனைச் சிந்திக்கத் தூண்டும் தன்மை என்பன நல்ல சிறுகதையின் இயல்புகள். கதையின் முடிவு வேறு ஒரு கதையின் தொடக்கமாக இருப்பதும் நல்ல சிறுகதையின் அம்சம்.

சிறுகதை ஆசிரியனுக்கு ஆழமான, தொடர்ச்சியான வாசிப்பு அவசியம். அத்துடன் அவனுக்கு இடைவிடாத தேடலும் இருக்க வேண்டும். பரந்த அனுபவமும் அவசியம். அந்த அனுபவ அருட்டலில் நல்ல உயிர்த்துடிப்புள்ள படைப்பு ஜனிக்கிறது.

'எனக்கு எழுதுவதில் எதுவித சிரமமும் இல்லை. ஏனென்றால் நான் எனக்குத் தெரியாதன பற்றி எழுதுவதில்லை. தெரிந்தவற்றைத்தான் நான் எழுதுகிறேன்' என்று மார்க்சிம் கார்க்கி கூறுகின்றார். எனவே, ஒவ்வொரு எழுத்தாளனும் தனது அனுபவங்களின் உந்துதலால் எழுதினால் அவை சிறந்த படைப்புகளாக, ஜீவத் துடிப்புள்ளவையாக அமையும், நிலைத்து நிற்கும்.

ஈழத்தில் நவீன எழுத்தாளரில் பெண் படைப்பாளிகள் குறைவு. மூத்த தலைமுறை எழுத்தாளர்களாக, குறமகள், பவானி ஆழ்வாப்பிள்ளை, சசிதேவி ஆள்வாப்பிள்ளை, அன்னலட்சுமி இராசதுரை ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களில் சிலர் ஒரு சிறுகதைத் தொகுதியுடன் தமது படைப்பாற்றலுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றனர். இரண்டாம் தலைமுறை எழுத்தாளர்களாக தாமரைச் செல்வி, மண்டூர் அசோகா, பவானி சிவகுமாரன், பவானி முகுந்தன், ஔவை, மதுபாஷினி, அனார், பத்மா சோமகாந்தன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கெக்கிராவ சஹானா போன்றோர் எழுதி வருகிறார்கள். மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த தாட்சாயணி, சாரங்கா, சந்திரகாந்தா முருகானந்தன், மாதுமை சிவசுப்பிரமணியம், பிரமீளா செல்வராசா, வெலிகம ரிம்ஸா முஹம்மத், கார்த்திகாயினி சுபேஸ், வசந்தி தயாபரன் போன்றோர் தரமான ஆக்கங்களை எழுதி வருகின்றனர். அவர்களுடன் தியத்தலாவ. எச்.எ்.ப். ரிஸ்னாவும் இணைகிறார்.

முஸ்லீம் பெண் படைப்பாளிகளில் பலர், ஒருசில சிறுகதைகள் அல்லது கவிதைத் தொகுதிகளுடன் படைப்புத் துறையிலிருந்து காணாமல் போய்விடுகின்றனர். குறிப்பாக, இவர்களில் பெரும்பான்மையானோர் தமது திருமணத்திற்குப்பின் படைப்புலகிலிருந்து மறைந்துவிடுகின்றமை துரதிஷ்டமாகும். தியத்தலாவ ரிஸ்னா, இந்த வரிசையிலிருந்து தப்பிப் பிழைத்துவிடுவார் என நம்புகிறோம்.

இயற்கை வளமும், வனப்பும் அலைபாயும் தியத்தலாவையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ரிஸ்னா. பச்சைப்பசேலென்ற தேயிலைச் செடிகள் அடர்ந்த குன்றுகள், வானத்தைத் தாங்கி நிற்கின்ற மலைத்தொடர்கள், சலசலத்து ஓடுகின்ற குளிர்ந்த நீரோடைகளும் அருவிகளும், ரிஸ்னாவின் கற்பனைத் திறனுக்குக் கைகொடுக்கும் இயற்கை அன்னை. மாடாய் உழைத்து ஓடாய்த் தேயும் மலையகத் தோட்டத்தொழிலாளர்கள், அவர் தம் உழைப்பை உறிஞ்சும் முதலாளித்துவப் பெருச்சாளிகள், ஒரு சில பணக்கார முஸ்லீம்களும், ஏழை முஸ்லீம்களும் எனப் பலரை உள்ளடக்கிய தியத்தலாவைப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்தவர், செல்வி எச்.எ்.ப். ரிஸ்னா. இவரது படைப்புலகிற்கு செழுமையான அனுபவத்தைப் பெறக்கூடிய பின்புலத்தில் வாழ்கின்றார். இந்தக்களத்தில் நின்று தான் இவர் தமது கவிதைகளையும், சிறுகதைகளையும் புனைந்துள்ளார்.

செல்வி ரிஸ்னாவின் சிறுகதைகளில் பெரும்பாலானவை கற்பனா உலகிலிருந்து ஆக்கப்பட்டவை. ஒரு பகுதி ஆக்கங்கள், அவரது

அனுபவங்களின் அருட்டலால் புனையப்பட்டவை. இவற்றில் பெரும்பாலானவை ஏற்கனவே பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமானவை. இச்சிறுகதைகள் வாசகர்கள் இலகுவாகப் படித்து இரசிக்கக் கூடியனவாக இருக்கின்றன. இவற்றில் அநேகமானவை கற்பனாரசக் கதைகள். செல்வி ரிஸ்னா தனது கதைகளை இலாவகமாக நகர்த்திச் செல்கின்றார். இதற்கு அவரது மொழிவளம் துணைபுரிகின்றது. இவரது பாத்திரப் படைப்பு இயல்பாக உள்ளது. பாத்திரங்கள் கதைசொல்லல், ஆசிரியர் கதைகூறல், பின்னோக்கிக் கதைநகர்த்தல் போன்ற உத்திகளைக் கையாண்டு கதைகூறுகிறார்.

செல்வி ரிஸ்னாவின் 'வைகறை' என்ற இந்தத் தொகுப்பில் காதல்கதைகளும், முஸ்லீம் சமூகம் சார்ந்த கதைகளும், மலையகம் சார்ந்த சில கதைகளும் அடங்கியுள்ளன. மலையகத்தின் முதுகெலும்பாகத் திகழும் தோட்டத் தொழிலாளர்களின் அவலநிலை சார்ந்த ஒருசில கதைகளாவது இத்தொகுதியில் உள்ளடக்கப்படாதது ஏனோ? மலையகப் பிரதேச மொழிநடை ஆசிரியரால் தவிர்க்கப்பட்டுள்ளது. ஏனைய பிரதேச வாசகர்களும் இக்கதைகளை இலகுவாகப் படித்து இரசிக்கட்டும் என்ற நோக்கத்திலா?

இத்தொகுதியிலுள்ள முதல்கதை அழகன். இரண்டே இரண்டு பக்கங்களை மாத்திரமே இக்கதை கொண்டுள்ளது. சிறுகதைக்குரிய கட்டமைப்பைக் கொண்டதாக, தொடக்கமும் முடிவும் ஒரு நல்ல சிறுகதைக்கேற்றபடி அமைந்துள்ளன. மூன்று பாத்திரங்களைக் கொண்ட இக்கதையில் சிறுவன் ஒருவனே கதாநாயகன். இப்பாத்திரப் படைப்பு அற்புதமானது. செல்வி ரிஸ்னா எதிர்காலத்தில் சிறந்ததொரு சிறுகதைப் படைப்பாளியாக வளர்ந்து வருவார் எனக் கட்டியங் கூறுவது, இக்கதை.

உறவுகள், தவிப்பு, தொலைந்த கவிதை, சிட்டுக்குருவி, ஓயாத நினைவலைகள் ஆகிய கதைகள் மனதைத் தொடும் ஆக்கங்களாக உள்ளன.

ஆசிரியரிடம் மொழிவளம், கதையை இலாவகமாக நகர்த்தும் ஆற்றல், பாத்திரப் படைப்பு போன்ற சிறுகதைக்குரிய பண்புகளுண்டு. இவற்றை இன்னும் செழுமைப்படுத்தி, ஒரு சிறந்த சிறுகதைப் படைப்பாளியாக வளர்வதற்கு ஏற்ற சிரத்தையை மேற்கொள்வார் ரிஸ்னா என எதிர்பார்க்கிறோம்!!!

**நீர்வை பொன்னையன்**

# என்னுரை

எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் புகழ்ந்தவளாகவும், அவன் தூதர் நபிக்கு ஸலாம் கூறியவளாகவும்...

இன்னும் உன் குரல் கேட்கிறது என்ற கவிதைத் தொகுதியை அடுத்து வைகறை என்ற எனது இந்த சிறுகதைத் தொகுதியினூடாக உங்களை சந்திப்பதில் மகிழ்வடைகிறேன்.

அன்றாடம் நான் பார்த்த அல்லது கேட்ட சில விடயங்கள் என் மனதைக் குத்திக் கீறி ரணப்படுத்தின. அவ்வாறான சமூக அவலங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வரும் நோக்கில் சிறுகதைகளை யாத்தேன். எனது சிறுகதைகளில் நான் கையாண்டிருக்கும் பிரச்சனைகளின் கருவானது, என்னோடு இருப்பவர்கள் அனுபவித்த துன்பங்களின் மறுவடிவம் என்றும் கூறலாம். ஆகவே அந்த நிலையில் இருக்கும் வாசகர்கள் குறிப்பிட்ட என் சிறுகதைகளை வாசித்து ஆறுதல் அடைவார்களேயானால், அந்த ஆறுதலைத்தான் என் சிறுகதைகளினூடாக நான் காணும் வெற்றியாக கருதுகிறேன்.

எனது ஆக்கங்களைப் பிரசுரித்து உதவிய அனைத்து பத்திரிகைகள், சஞ்சிகைகள், வலைத்தளங்கள், என் முன்னேற்றத்தில் அக்கறை காட்டிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், சிரமம் பாராது எனக்கு அழகிய முன்னுரையை எழுதித் தந்த திரு. நீர்வை பொன்னையன் அவர்களுக்கும், முற்போக்கு கலை இலக்கிய மன்ற உறுப்பினர்கள் யாவருக்கும், பின்னட்டைக் குறிப்பை எழுதித்தந்த டாக்டர் எம்.கே. முருகானந்தன் அவர்களுக்கும், அட்டைப்படம் மற்றும் கணினி வடிவமைப்பை செய்து தந்த சகோதரி வெலிகம ரிம்ஸா முஹம்மத் அவர்களுக்கும் என் மன நதியில் ஊற்றெடுக்கும் வற்றாத நன்றிகளை நவில்கிறேன்.

இந்தத் தொகுதியில் உள்ள
நிறைகள் யாவும் இறைவனைச் சாரும்
குறைகள் எல்லாம் என்னைச் சாரும்.

இனி உங்கள் விமர்சனங்களுக்காய் காத்திருக்கிறேன்!!!

**முகவரி** - **எச்.எ஼ப். ரிஸ்னா**
**21 ஈ, ஸ்ரீ தர்மபால வீதி, கல்கிசை, இலங்கை.**
**தொலைபேசி** - **0775009222, 0719200580.**
**ஈமெயில்** - **riznahalal@gmail.com**
**வலைத்தளம்** - **www.storyrizna.blogspot.com**

# உள்ளடக்கம்


01. அழகன்
02. பயணங்கள்
03. காதல் கல்வெட்டு
04. விதி
05. தோல்வி
06. மாற்றம்
07. வரம்
08. உறவுகள்
09. சிதைவு
10. வேதனை
11. தவிப்பு
12. வாக்குறுதிகள்
13. தொலைந்த கவிதை
14. கண்ணீர
15. சொந்தம்
16. சிட்டுக்குருவி
17. தெளிந்த வானம்
18. என்னை அறிந்த போது
19. கனவுகள்
20. ஓயாத நினைவலைகள்
21. கானல் நீர்

# 01 அழகன்

அன்று சந்தியாவால் அலுவலகத்தில் வேலை செய்யவே முடியவில்லை. அந்த இனிய காலைப்பொழுதில் தனது வசீகரமான தோற்றத்தை மேலும் மெருகூட்டும் விதத்தில் முதன் முதலாக சேலையில் வந்திருந்தாள். அதுவே மனதில் ரம்மியத்தையும், சந்தோஷத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

காலையில் அவன் சந்தியாவின் கண்ணில்பட்டு அவள் இதயத்தில் சலனமூட்டி ஆனந்த பரவசத்தைத் தந்தான். இன்னும் ஒருமுறை அவனைப் பார்க்க வேண்டுமே! மனது சொல்லியவண்ணமே இருந்தது. அவனாவது அவளை விட்டு வைத்தானா? வைத்த கண்வாங்காமல் அவளை விழிகளாலேயே உண்டுவிட்டானே!

அன்று காலை சற்று நேரத்தில் டீசலை உண்டுவிட்டு ஏப்பமிடுவது போல 'ப்ரேக்' சத்தத்துடனும், பயணிகளை சாபமிடுவது போல தூசியைக்கிளறி புகையுடனும் வந்து நின்றது பஸ். ஏறிய சந்தியாவின் மான் விழியில் முதலில் அவன் உருவமே பட்டுத் தெறித்தது. சுருளான கேசம், நீண்ட நாசி, நேர் வரிசைப்பற்களில் ஒன்று விலகியதாலே அமைந்த அழகான சிரிப்பு. இப்படி சகலவற்றிலுமே அழகாயிருந்தான்.

அவளது அதிஷ்டமோ என்னவோ அவனது அம்மாவின் பக்கத்திலேயே இடம் கிடைத்ததால் அவள் மனம் மகிழ்ந்தது. அவளது காந்த விழிகள் அவனை மேய்ந்த வண்ணமே இருக்க அவனும் அவளைப் பார்த்து சிரிப்பதுவும் ஏன் தொடுவதுமாக இருந்தான். அடச்...சீ ஒரு பருவ வயதழகியை அவன் அம்மா முன்னிலையிலேயே இப்படி கிண்டல் பண்ணுவதா என அவள் நினைக்கவில்லை. அதுவே அவளுக்கு சுகமாயிருந்தது.

'எங்கம்மா வேலைக்கிப் போறியா...? ஊரெது, தொழில் என்ன, பேர் என்ன...?' என்று அவனது அம்மாவின் அடுக்கு கேள்விகளுக்கு பதில் கூறியே இருவரும் புது உறவை ஏற்படுத்திக்கொள்ள தயாராயிருப்பதை சிரித்து ரசித்தான் அவன்.

சில நிமிடங்களில் தன் கெமரா போன் மூலமாக திருட்டுத் தனமாக அவனை அதில் பதிவு செய்த சந்தியா கனத்த இதயத்துடன் விடை பெற்று இறங்கி அலுவலகம் வந்துவிட்டாள். வழக்கத்துக்கு

மாறாக யாருடனும் பேசாமலும், இன்னும் வீட்டுக்குப் போகாமலும் யோசித்துக் கொண்டிருந்த சந்தியாவைப் பார்த்து ஆச்சரியமடைந்தாள் நண்பி.

'எனக்கும் வேண்டும் இப்படியொரு...' என்று தனக்குத்தானே உளறிக் கொண்டிருந்தாள் சந்தியா.

அவளைப் பார்த்து 'ஏய் சந்தியா ஆபீஸ் விட்டாச்சி. நீ வீட்டுக்குப் போகலியா?' என்று கேட்டவாறு அருகில் வந்து போட்டோவைப் பார்த்துவிட்டாள் சந்தியாவின் தோழி. ஒரு கிண்டல் சிரிப்பை அவள் உதிர்க்க, கற்பனை கலைந்த அவ்வேளையிலும் சந்தியாவின் முகம் செக்கச்சிவந்து உதடு துடித்தது.

வீட்டில் போய் தனது அறையைக்குச் சென்று கதவைத் தாழிடாமல் அவன் போட்டோவை ஆற அமர, ஆசை தீர ரசித்துவிட்டு எதேச்சையாக திரும்பினாள். திரும்பியவள் மூச்சுத்திணறி அதிர்ந்தாள். எதிரே பெற்றோர்.

'யாரவன், யார் பிள்ளை?' என வினா தொடுக்க நிதானமாய் எல்லாவற்றையும் கூறி முடித்தாள். விபரம் அறிந்த பெற்றோர் கேள்விகளை விட்டுவிட்டு புன்னகை பூத்தூவ சந்தியாவி ன் மகிழ்ச்சி இரட்டிப்பானது.

நடந்த அனைத்தையும் பார்த்தவாறு போட்டோவில் அழகாக சிரித்தவாறு அவனிருந்தான். ஆமாம் சரியாக மூன்று வயது கூட நிரம்பாத அவனைப் பார்த்து, அவன் அழகை ரசித்து சந்தியா மீண்டும் தனக்குத் தானே கூறிக் கொண்டாள்.

'எனக்கும் வேண்டும் இப்படி ஒரு அழகான பிள்ளை'!!!

# 02 பயணங்கள்

ஸாதிக் ஹாஜியார் வழமைக்கு மாற்றமாக அதிக நேரம் பள்ளியில் கழித்தது பற்றி எல்லோருக்கும் ஆச்சரியம். தொழுது முடிய ஸலாம் கொடுத்தவுடன் எழுந்து கடைக்குப் போய்விடும் அவரை இப்படி பள்ளியில் பார்த்தால் ஆச்சரியம் இல்லாமல் இருக்குமா?

கொட்டிக்கிடக்கும் பணத்தில் ஒரு சின்ன பகுதியை வெறும் புகழுக்காக செலவழித்துவிட்டு, தான் ஹாஜியார் என்று முத்திரை குத்திக்கொள்ளாத குறையாக பெருமையாக பேசித் திரிபவர் அவர்.

இப்போது இந்த இரண்டு நாட்களாக அவரது நடவடிக்கையில் பெருத்த மாற்றம் இருந்தது. தான் அந்த ஏழைக் கன்னி பஸீனாவுக்கு செய்த அநியாயமே தற்போது தன் மகளுக்கு வந்து மு(வி)டிந்திருக்கிறது என்று எண்ணம் வரும் போதெல்லாம் வலது கையால் இடது நெஞ்சைத் தடவி சமாதானம் தேடிக்கொண்டிருந்தார்.

**********

உயர்தர வகுப்பு டியூஷனுக்கு போகும் போதெல்லாம் பஸீனாவின் சிறந்த குணத்தை அறிந்து அவளுடன் நெருங்கிப்பழக முயன்று கொண்டிருந்தான் சமீர். வீட்டுக்குக் கட்டுப்பட்டு ஒழுக்கமாக வளர்ந்த பஸீனாவுக்கு சமீரின் நடவடிக்கைகள் எரிச்சலையூட்டின. அவனது போக்குக்கு அவள் அடிமையாகவில்லை.

ஏ.எல் முடித்து கௌரவமான தொழில் ஒன்றில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதே தற்போது அவளது தேவையாக இருந்தது. அதற்கு அப்பாற்பட்ட விடயங்களை அவள் நினைத்தும் பார்க்கவில்லை. உழைத்து ஓடாய் தேய்ந்து போன வாப்பா இனியும் உழைத்து தன்னையும் தனது தங்கையரையும் கரை சேர்ப்பது சாத்தியமில்லை என்பது அவளது அறிவுக்கு புலப்படாமல் இல்லை.

ஆகவே அவள் படித்து உழைத்துத்தான் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பு அவள் விரும்பியோ விரும்பாமலோ அவளுக்கு சுமத்தப்பட்டிருந்தது. ஆண் பிள்ளையை பெற்றுக்கொள்ளாமல் இருந்தது பற்றி அவளது பெற்றோர் நடு இரவொன்றில் அழுததை தலையணையில் முகம் புதைத்தவாறு

கேட்டுக் கொண்டிருந்ததன் தாக்கமே அவள் சமீரை ஏறெடுத்தும் பார்க்காதது.

சமீரும் அவளை எல்லோரும் போல் பார்க்கவில்லை. அவன் உண்மையிலேயே அவளை நேசித்தான். அவளும் அவளையறியாமல் தன்னை நேசிப்பது சமீருக்கும் தெரிந்திருந்தது. ஆனாலும் பள்ளி செல்லும் மாணவியிடம் திருமணம் பற்றி பேசுவது அழகல்ல என்பதால் இரண்டு வருடங்களை அவளுக்காகவே காத்திருப்பதாய் நினைத்து உழைக்கவென்று வெளிநாடு புறப்பட்டான்.

அவனது உண்மையான அன்பைப் புரிந்தாலும்கூட தற்போதைக்கு பஸீனாவால் எதுவும் சொல்ல முடியாது என்பதால் காலத்தை கடத்தி வந்தாள். சமீர் தன்னை விட்டு விட்டுப்போனதாகவே அவள் எண்ணினாள். ஆனால் துளியும் வருத்தப்படவில்லை. கழாகத்ர் (விதி) படியே எல்லாம் நடக்கும் என்று எண்ணி தன் வேலைகளில் மும்முரமாய் ஈடுபட்டாள்.

காலம் யாருக்காகவும் காத்திருக்காதே. வருடங்கள் இரண்டு முடிய சமீர் ஊருக்கு வந்திருந்தான். அவன் சற்று கொழுத்து, மிகவும் அழகாய் இருப்பதாக கேள்விப்பட்ட போதும் அவனைப் பார்க்க வேண்டும் என்று மனசு கிடந்து துடிக்கவில்லை. அவளது ஆசைகள் சிறகடிக்கவில்லை. காரணம் பணக்கார வாலிபர்கள் அனைவரையும் அவள் ஒரே மாதிரி எடைபோட்டிருந்தமையே.

அவன் பஸீனாவைப்பற்றி அவளது தோழி சுலைஹாவிடம் விசாரித்த போது பஸீனா ஆசிரியையாக தொழில் புரிவது பற்றி அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவளது இலட்சியங்களை அறிந்திருந்தவனுக்கு அவளது ஆசைப்படியே கௌரவமான தொழில் கிடைத்ததையிட்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினான்.

வெளிநாட்டிலிருந்தபோது ஒருநாள் ஸாதிக் ஹாஜியார் மகன் சமீருடன் தொலைபேசியில் பேசினார். அப்போது சமீரின் தங்கைக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும் அதனால் சமீரை திருமணத்துக்கு ஒப்புக்கொள்ளும் படியும் கூறினார்.

'தங்கச்சிக்கு கல்யாணம் பண்ணி வைக்கலாம் வாப்பா. என்னை எதுக்கு வற்புறுத்துறீங்க?'

'அட நீ வேறப்பா. முதல்ல சிலோனுக்கு வா. அப்புறம் எல்லாத்தயும் வெவரமா சொல்றேன்' என்றுவிட்டு போனை வைத்தார்.

இது நினைவு வர சமீர ஒரு நாள் தன் வாப்பா ஸாதிக் ஹாஜியாரிடம் இது பற்றிக் கதைத்தான்.

மகனிடம் எப்படி தொடங்குவது என்றிருந்த ஸாதிக் ஹாஜியார் இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக்கொண்டார்.

'அதொன்டுமில்ல மகன். கண்டீல ஒரு பார்ட்டி. நல்ல சல்லிக்காரங்க. உன்ட தங்கச்சிய கெம்பஸில பாத்துட்டு அந்தப் பொடியன் விரும்பீட்டானாம். உன்ட தங்கச்சிக்கும் அவன் மேல ஆச இருப்பதாய் தெரியுது. அவன் நண்பன் மூலமா தன் வாப்பாட்ட செல்லீக்கியான். அவரு விசாரிச்சுப் பாத்ததில என்ட மகள்னு தெரிஞ்சீக்கி. கரீம் ஹாஜி என் நல்ல கூட்டாளி'

இதற்கும் நான் கல்யாணம் முடிக்கிறதுக்கும் என்ன சம்பந்தம் என்று சமீர் நினைத்த போது அவரே பேச்சை மறுபடியும் தொடங்கினார்.

'விசயம் என்னன்டா சமீரு.... அவன்ட தங்கச்சிய நீ முடிக்கோணும். அப்போ எல்லா சொத்தும் நமக்கு வந்த மாதிரித்தான். உங்களிருவரயும் நல்ல இடத்தில் கரசேத்த திருப்தியோட நானும் மௌத்தாகிடுவன். பொடியனுக்கு உன் தங்கச்சியும், அவன்ட தங்கச்சிக்கு உன்னையும் மாத்தி செய்றதா வாக்கு கொடுத்திட்டன்'

'வாக்கு கொடுத்தீங்களா? என்னை ஒரு வார்த்தை கேட்காமல் என் வாழ்க்கையை தீர்மானிக்கிறீங்களே வாப்பா? என் மனசில் இருக்கும் ஆசை தெரியுமா? நான் விரும்பும் என் தேவதை யார் என்று தெரியுமா? உங்களிடம் இவ்வளவு பணமிருந்தும் நான் ஏன் வெளிநாடு போய் உழைத்து வந்தேன் தெரியுமா? எல்லாம் பணத்துக்காக வாப்பா. பஸீனா ஏழைனு தெரிஞ்சா நீங்க கட்டாயமா ஒத்துக்க மாட்டீங்க. அதனாலதான் நானே ஒழச்சி அந்தப் பணத்தையெல்லாம் அவ மூலமா ஒங்களுக்கு தர வச்சிருந்தன்'

உடைந்து சிதறிய வார்த்தைகளை கஷ்டப்பட்டு கோர்த்து அவன் அவருக்கு சொல்லிக்கொண்டிருந்தான். சொல்லி முடியுமுன்பே அவனுக்கு தலைசுற்றுவது போலிருந்தது. அதிர்ச்சி நீங்கி நிதானித்து பார்த்தபோது அவனது சிவந்த கன்னத்தில் ஹாஜியாரின் கை அச்சு உக்கிரமாய் பதிந்திருந்தது. அதற்குப்பிறகு இது பற்றி அவனும் பேசவில்லை. அவரும் பேசவில்லை. அவன் மிகவும் நொந்து போயிருந்தான். பெண்களுக்கு மட்டும்தான் மனசிருக்கிறதா?

அப்படியில்லையே. இதோ இன்று பஸீனாவை எண்ணி என் மனம் படுகிற வேதனையை அறிந்த நாயனே எனக்கு நல்ல வழியொன்றை காட்டித்தா என்று சமீர் புலம்பிக்கொண்டிருந்தான்.

அவனது பிரச்சனைகளை தன் தாயிடமும் சொல்லியழ முடியாத சோகம் அவனுக்கு. வாப்பாவின் கத்தலுக்கே சுவரோடு ஒடுங்கிப்போகும் ரகம் அவனது உம்மா. வாப்பாவை எதிர்த்து பேசும்படி உம்மாவை தூண்டிவிட்டு அதன் பிறகு தன் உம்மா கண்கலங்குவதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியாது.

அது தவிர, தன் தங்கையின் நிலைமையையும் நினைத்து உருகினான் சமீர். தான் அந்த கண்டி ஹாஜியாரின் மகளை மணமுடிக்க ஒத்துக்கொள்ளாவிட்டால் தன் தங்கையின் ஆசைகள், கனவுகள் என்னாவது? அவனுக்குள் பெரும் போராட்டமாய் இருந்தது. மகனது நடிவடிக்கைகளில் எவ்வித மாற்றத்தையும் அறியாத ஹாஜியார் அடுத்தகட்ட காரியமாக பஸீனாவின் வீட்டை நோக்கி புறப்பட்டார்.

ஒரு நாளும் இல்லாமல் முக்கிய விடயமொன்றைக்கூற வந்திருந்த தோழி சுலைஹாவுடன் பேசிக்கொண்டிருந்தாள் பஸீனா. எதிரே முற்றத்தில் திடீரென வந்து நின்ற காரிலிருந்து இறங்கி வேகமாய் வந்து கொண்டிருந்த ஸாதிக் ஹாஜியாரைப் பார்க்க இருவருக்கும் பயமெடுத்தது. சுலைஹா விடயத்தை ஓரளவு உணர்ந்து கொண்டாள்.

‘ஏய் தாவூத் வெளில வா. மாசச் சம்பளத்த வாங்குறத்துக்கு முதலாளிக்கிட்ட கையேந்தி நிக்கிற கூட்டத்தைச் சேர்ந்தவன் நீ. உன் புள்ளக்கி என்ட மகன் கேக்குதாமா? வசதியான பையன வளைச்சு போட சொல்லிக்கொடுத்தியா? எல்லா வினையும் இதோ.. உன் மகளால தான். இன்று அவன் என் பேச்சை கேட்காமல் இவள் வேணும்னுகிட்டு இருக்கான். எல்லாத்தயும் மரியாதயா விட்டிரச் சொல்லு. அப்புறம் போலீசுல நாய் படாத பாடு படுவே’

நரம்பில்லாத நாக்கால் குத்தலாய் பேசி அடிக்கடி பஸீனாவை பார்த்து முறைத்துக்கொண்டிருந்தார் ஹாஜியார். அவரது கதைகளைக்கேட்டு காதை பொத்தியவாறு அழுது கொண்டிருந்தாள் பஸீனா.

நான் சமீரை விரும்புறேனாமா? வாப்பாவை எப்படி கீழ்த்தரமாய் பேசிவிட்டார் இந்தப் பெரிய மனுசன்? இவரெல்லாம் அஞ்சு நேரம் அல்லாவ தொழுறவங்க தானா? இன்னும் என்னென்னமோ ஹாஜியார்

சொல்லிக்கொண்டிருக்க, சுவரில் அடித்த ஆணியாய் பஸீனாவின் உம்மாவும் வாப்பாவும் பேச திராணியற்று மௌனமாக இருந்தார்கள்.

ஹாஜியார் தன் கொடூர பேச்சை முடித்துவிட்டு செல்ல, தன் மீது படியும் பெற்றோரின் பார்வையை ஒருமாதிரியாக உணர்ந்தாள் பஸீனா. ஆனால் அந்தப் பெற்றோருக்கு தம் வளர்ப்பின் மீது நம்பிக்கையிருந்தது. அதை விட பஸீனா மேல் அதிகம் நம்பிக்கை இருந்தது. அதனால் அவர்கள் பஸீனாவை சமாதானப்படுத்த, அவள் நெஞ்சுருகி தன் தாயின் தோளில் சாய்ந்து அழுதாள்.

சுலைஹாவின் முன் இப்படி அவமானப்பட்டதாக எண்ணிக்கொண்டிருந்த போது, சமீர் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த பின் ஒருநாள் தன்னிடம் பஸீனா பற்றி விசாரித்ததாகவும், அதை சொல்லவே இன்று வந்ததாகவும் கூறிச் சென்றாள் சுலைஹா.

பஸீனாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. சமீர் இன்னமும் என்னை நெனச்சிக்கிட்டு இருக்காரா? ஆனால் அவருக்கு மனைவியாக வாழுற பாக்கியம் எனக்கில்லையே. ஸாதிக் ஹாஜியார் வந்து பேசிவிட்டுப் போன பேச்சுக்கள் கொஞ்சநஞ்சமா? உண்மையில் நேசித்திருந்தாலும் விட்டுவிட வேண்டிய நிலைமையல்லவா இது?

பெற்றோரிடமிருந்து பிள்ளையை பிரிக்கும் கல்நெஞ்சம் கொண்டவள் அல்லவே பஸீனா. எல்லாம் அல்லாஹ் விட்ட வழி என்று தன் மனசை திசை திருப்பினாள். ஆறேழு மாதங்கள் கடந்த நிலையில் பஸீனா வேறொருவரை மணமுடித்து சந்தோஷமாய் சென்றாள். அவளது வாழ்க்கை மிகச்சிறப்பாய் இருந்தது. அவளை கரம்பற்றியவரும் அதிர்ஷ்டசாலி.

ஆனால் சமீர் இன்று உருக்குலைந்து, தானும் வேலையும் என்று காலம் கடத்துகிறான்.

ஹாஜியாருடன் மொத்தமாக அவன் பேசவில்லை. இதெல்லாம் ஹாஜியாருக்கு மன வருத்தத்தைக் கொடுக்கவில்லை. பஸீனா என்ற தொல்லை கழிந்தது. இனி சமீரை சம்மதிக்க வைத்து விடலாம் என்று எண்ணியிருந்த போதே அவரது தலையில் இடி விழுந்தது.

அதாவது கண்டியிலுள்ள கரீம் ஹாஜியார். ஸாதிக் ஹாஜிக்கு ஒரு மடல் அனுப்பியிருந்தார்.

அன்பின் நண்பருக்கு,

அல்லாஹ்வுக்காக மன்னிக்கவும். உங்கள் பிள்ளைகள் நன்றாயிருக்க வேண்டும் என்ற ஆசையில் பெரும் பணக்காரர்களான மணமக்களையே எதிர்பார்த்தீர்கள். என் மகனும் உங்கள் மகளைத்தான் இன்னமும் விரும்பிக்கொண்டிருக்கிறான். அதற்கு என்ன செய்ய? நானும் உங்களைப்போல ஒரு தகப்பன்தானே? என் பிள்ளைகள் நன்றாயிருக்க வேண்டும் என்றுதானே நினைப்பேன். ஆதலால் உங்களை விட மிகவும் வசதியான ஒருவரின் மகளுக்கு என் மகனை மணமுடித்து வைக்க ஏற்பாடு நடந்துவிட்டது. வஸ்ஸலாம்.

இப்படிக்கு
கரீம் ஹாஜியார்.

தனது பிள்ளைகள் நன்றாயிருக்க வேண்டும் என்ற பெயரில், தான் பேராசைப்பட்டதை எண்ணி மனசு வெடித்தார் ஸாதிக் ஹாஜி. தன் மகளின் கனவுகள், தன் மகனின் ஆசைகள் எல்லாம் தன்னால் எரிக்கப்பட்டு விட்டதாய் உணர்ந்தார். அன்று அவர் பஸீனாவுக்கு செய்த அநியாயத்தால் வந்த பாவத்தைக் கழிக்கவே இப்போதெல்லாம் அதிக நேரத்தை பள்ளிவாசலில் கழிக்கிறாரோ என்னவோ!!!

# 03 காதல் கல்வெட்டு

வசீகரன் காரை ஸ்டார்ட் செய்தான். வழி நெடுகிலும் அவனுக்கு வலி தரும் காட்சிகளையே கண்டான். ஆங்காங்கே குடைக்குள்ளும் சீமேந்து கட்டுகளிலும் காதலர்கள் இவ்வுலகை மறந்து தத்தமக்குரிய தனிமையான, இனிமையான உலகத்துக்குள் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். இந்த இரண்டு வருடங்கள் எவ்வளவு சீக்கிரம் ஓடி விட்டன. ஓ நிஷ்மிதா! வசீகரன் வாய்விட்டு அழுதான். அந்த சந்தோஷமும் பாதிதானே?

**********

பி.கொம் முடித்துவிட்டு தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கும் வசீகரனிடம் அதிகாலைகளில் வோக்கிங் செல்லும் பழக்கம் அவனது பதினொரு வயது தொடக்கம் கடமை போன்றே ஆகிவிட்டிருந்தது. வழமையாக அவன் வோக்கிங் போகும் பாதையில் வானை முட்டுமளவுக்கு உயரமாக கட்டப்பட்டுள்ள அந்த கட்டிடத்தை எண்ணி பிரமித்து ஒவ்வொரு தட்டாக எண்ணினான்.

ஒரு நிமிடம் கடவுளே!

அகோர ஒலி எழுப்பிய அவன், லிப்ட் இருப்பதையும் மறந்து மாடிப்படி வழியாக விரைந்து ஓடிப்போய் பார்த்தான். இன்னும் ஒரே ஒரு செக்கனை வீணாக்கினாலும் அவ்வளவுதான். துரிதமாக செயல்பட்டு அவளைப்பிடித்து பின்னால் இழுத்து ஓங்கி ஒரு அறைவிட்டான். எதிர்பாராத இந்தத் தாக்குதலினால் அதிர்ச்சியடைந்த அவள் அவனை மிரட்சியுடன் நோக்கினாள்.

'ஏய் யாரு நீ? எதுக்கு தற்கொலைக்கு முயற்சி பண்ணினே?'

அவள் மௌனமாயிருந்தாள்.

'என்ன காதல் தோல்வியா? இல்லேன்னா எவன்கிட்டயாவது...?' அவன் முடிக்கு முன்னே அவள் சீறினாள்.

'ஏய் மிஸ்டர்! நீங்க என்ன நினைச்சுட்டு இருக்கீங்க? எதுக்காக என்னை காப்பாத்தினீங்க?'

வசீகரன் தயங்கிய படி அவளிடம் மன்னிப்பு கேட்டான். அவன் அப்படி இரங்கி வந்து தன்னிடம் பேசிய போது அவளுக்கு என்னவோ போல் இருந்தது. தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். ஏனோ வசீகரனுக்கும் மீண்டும் அவளிடம் காரணம் கேட்க வெட்கமாக இருந்தது.

நிஷ்மிதாவுக்கு வாழ்வே வெறுத்தது. இந்த சமூகம் இப்படித்தான். நல்லாயிருந்தால் வாழவும் விடாது. கெட்டுப்போனால் சாகவும் விடாது. இப்போது கத்தி அழ வேண்டும் போல் இருந்தது. தன் கையாலாகாத நிலைமையை எப்படி போக்குவது என்று அறியாமல் கண்ணீரை துணைக்கழைத்தபடி அவள் தூங்கிப்போனாள். காலையில் அவள் தன் தோழியின் ஞாபகமாக எடுத்து வந்த ரோஜாவை ரசித்துக்கொண்டிருந்தாள்.

‘இந்த ரோஜாப்பூ கூட எத்தனை அழகானது. என் வாழ்வில் மட்டும் ஏன்...?’ அவளது மனதுக்குள் வெறுமை நிறைந்து மூச்செடுக்க தடை செய்தது. மாதங்கள் கழிந்தன.

நிஷ்மி குட்டிக்கு என்ன வாங்கலாம்? காதலர் தின வாழ்த்து அட்டை, உயிருள்ள பூனைக்குட்டி, நகைகள்... எதை வாங்குவதென்று அங்கே தவித்துக் கொண்டிருந்தான் வசீகரன். ‘இவ என் காதலை ஏத்துக்கணுமே... ஏத்துக்குவாளா?.

அடுத்த நாள் காலை ஒரு பார்சலை அவளுக்கு கொடுத்துவிட்டு அவள் கண்களில் தன் உருவம் பார்த்தான். பிறகு தன் இதயத்தை அவளுக்கு தர இருப்பதாக சாடைமாடையாக காதலைக் கூறினான். அவனுடைய காதல் இப்படி அவளது கண்ணீரில் மிதக்கும் என்று நினைத்திருப்பானா? அவனது பார்சலை அவனிடமே திருப்பிக்கொடுத்துவிட்டு அழுதுகொண்டே சென்றாள் நிஷ்மிதா.

அப்படி ' முகத்திலடித்தாட்போல வந்தது நிஷ்மியின் மனதில் நெருடிக்கொண்டே இருந்தது. அவளும் அவனைக் காதலிக்கிறாளா? வெளிமனம் ஆனந்தத்தால் துள்ளிப் பாய்ந்தாலும் ஆழ்மனம் எச்சரித்து அவஸ்தைப்படுத்தியது. உண்மையைச் சொன்னால் அவன் தாங்குவானா? அவளால் உண்மையைச் சொல்ல முடியுமா?

வசீகரனின் அன்புத் தொல்லை வாழ்நாள் பூராக வேண்டும்போல் இருந்தது. இரண்டு நாட்கள் கழித்து இருவரும் சந்திக்க நேர்ந்தது. சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பாத நிஷ்மிதா அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன. அதை வசீகரன்

புரிந்து கொண்டானோ என்னவோ? அவள் சொல்லப் போவது தனக்குத் தெரியும் என்று கூறிவிட்டு அனைத்தையும் கூறி சரிதானே என்றான். சிலையாகி நின்ற நிஷ்மிதாவை தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டான். விதியின் கைகள் இத்தனை வலிமையானதா? என நொந்து கொண்டாள் நிஷ்மிதா.

'சொரி நிஷ்மி உன் அனுமதி இல்லாமல் உன் மெடிக்கல் ரிப்போட்ஸ் பார்த்துட்டேன்' என்று கூறி தலையைக் கவிழ்த்துக் கொண்டான். இந்த ஒரு வாக்கியம் போதுமே... அவள் அழவில்லை. மனசு கல்லாகியிருந்தது. அவன் தான் அழுதான். பின் சமாதானம் கூறினான்.

'வசீ.. என்னை மறந்துருடா. நான் உனக்கேத்த பொண்ணில்ல'

'வாயைமூடு. கொஞ்சம் உன் கழுத்தை அறுக்குறேன். வலியைப் பொறுத்துக்க என்பதுபோலதானே நீ பேசுறே. உனக்காக எதையும் செய்கிறேன் நிஷ்மி. ஆனால் உன்னை இழக்கமாட்டேன்'.

இரண்டு வருஷம் கழிச்சி நீ இதே இடத்துக்கு வர்ரே. நீ வர்ரப்ப உன் மனசு கண்டிப்பா மாறி இருக்கும். அப்பயும் மாறலேன்னா உன்னோடு எனக்கு திருமணம். என்னை நம்புப்பா.

பார்க்கலாம் நிஷ்மி. ரெண்டு வருஷம்கிறது அதிக காலம்தான். ஆனால் என் காதலை நிரூபிக்கிறேன். எனக்காக காத்திரு என்று கூறி விடைபெற்றான்.

**********

வசீகரன் இப்போது காரை மிக வேகமாக செலுத்தினான். நிஷ்மிதா சொன்ன அந்த நாள் இன்று தானே என்று எண்ணினான். அந்த கட்டிடம் அப்படியே கம்பீரமாக காட்சி தந்தது. ஆனால் அதன் வர்ணம் மங்கியிருந்தது. அதை நெருங்க நெருங்கத்தான் அவன் உள்ளத்தில் கொந்தளிப்பு. மெதுவாக காரை விட்டு இறங்கி மாடிப்படி ஏறி....

'யாரங்கே என் நிஷ்மிதாவா?' அவள் தான். சந்தேகமேயில்லை. வாழ்க்கையையே வெறுத்தவள் போல் வெளிறிக் காணப்பட்டாள்.

அவனுக்கு கண்ணீர் பீறிட்டது. பெருமூச்சுடனே அவளருகே உட்கார்ந்தவனை அதிசயமாகப் பார்த்தாள் நிஷ்மி. அவளுக்கு என்ன பேசுவது எதைச்சொல்வது என்று தெரியவில்லை.

சொன்னபடியே முழுசாய் வந்து நிற்கிறானே என்று ஆச்சரியமடைந்தாள்.

'நீ எனக்குரியவள் மட்டும் தான்டா. உன் கர்ப்பப் பையில உள்ள குறையால நம்ம காதல எதுவும் பண்ணேலாதுடா. எனக்கு நீ, உனக்கு நான் குழந்தையா இருக்கலாம்'

தன் தெரிவு சரியானதாக இருப்பதாய் அவள் பெருமைப்பட்டாலும் அவனது வம்சம் துளிர்விட்டு வளர தன்னில் குறையிருக்கும் எண்ணம் அவளது சந்தோஷத்தை வெட்டிப்போட்டது.

'நீ எதுவும் யோசிக்காத. எனக்கு வாரிசு தர முடியாமல் போயிடும்னுதானே தயங்குற. எனக்கு நீ குழந்தையடி. அது போதும். வா கார்ல ஏறு' என்ற படி அவளை படியிறக்கி கூட்டிச்சென்றான்.

அவனது அதீத பாசத்தால் அவளில் பழைய உற்சாகம் ஒட்டிக்கொண்டது. அவனுடன் அவனது வீட்டுக்குச் சென்றாள். அவன் வாங்கித்தந்த நகைகள், சல்வார் செட், மியூசிக் கார்ட், சொக்லேட் என அனைத்தையும் பரப்பி ரசித்தாள். முப்பது நிமிடங்கள் கழிந்து அவன் மஞ்சட் கயிறைக் கொண்டு வந்தான். காதலை சாட்சியாக வைத்து மூன்று முடிச்சுகளை இட்டான். மெதுவாக அவளை இழுத்தணைத்தான். அவள் கண்களை மூடிக்கொண்டாள்!!!

# 04 விதி

'சாப்பாட்டுல உப்ப கூட்டிப் போட்டதுமில்லாம எரும மாட்டப்போல பாத்துக்கிட்டு நிக்கிறா. அடியே ஒனக்கு அப்படி என்ன யோசன?'

பரமசிவம் கர்ஜிக்க வேலைக்காரி வனிதாவுக்கு விழியோரத்தில் நீர் கசிந்தது. உப்பு அளவாகத்தானே இருந்தது? ஒருவேளை குழந்தை அழும்போது ஏற்பட்ட பரபரப்பால் உப்பு கூடிவிட்டதோ? இல்லையே. இன்று அவள் சமைக்கும்போது குழந்தை ராணியிடம்தானே இருந்தது.

இவர் இப்படித்தான். மனைவியிடம் அவருக்கிருந்த பயம் காரணமாக ஏதாவதொன்றென்றால் வனிதாவிடம் எரிந்து விழுவார். அதுவும் சாப்பாட்டு நேரம் என்றால் உப்பு கூடியிருக்கும் அல்லது காரம் குறைந்திருக்கும். இதைத் தவிர அவருக்கு வேறொன்றும் விளங்காது. இந்த திட்டுதல் புதிதல்லவே. பழகிப்போய் புளித்துவிட்ட விடயம். வனிதா தரையைப் பார்த்தவாறு நின்றிருந்தாள். மேசையில் அமர்ந்திருந்த பரமசிவத்தின் மனைவி ராணியும் அதற்கு உடன்பட்டாற்போல

'சனியன். செய்றதையும் செஞ்சிட்டு நிக்கிறா பாரு. இன்னக்கி பகலக்கி உனக்கு சாப்பாடு இல்ல. இதுதான் தண்டனை. அப்பதான் நீ சரியா வருவே'

வார்த்தைகளை கத்தியாக்கி வீசினாள். வனிதாவின் மனம் அனலிடையே அகப்பட்ட புழுபோல துடித்தது. அப்போது பார்த்து உள்ளே குழந்தை அழும் சத்தம் கேட்டது.

'கொழந்த அழுவுறது காதுல விழல? மசமசன்னு நிக்காம போயி கொழந்தய தூக்கிட்டு வாடி கறுப்பி' மீண்டும் பரமசிவம்தான் அதட்டினார். மழையில் நனைந்த கோழிக்குஞ்சுபோல ஒடுங்கி அறைக்குச் சென்றாள் வனிதா.

வனிதா பதினாறு வயதை அடைந்தவள். மலையகத்திலிருந்து வேலைக்காக கொழும்புக்கு இதுவே முதல்தடவை வந்திருக்கிறாள். அவளது அப்பா அவளுடைய சின்ன வயதிலேயே இறந்துவிட்டார். தாய் பாக்கியமும் தேயிலைத் தோட்டத்தில் வெயில் மழை பாராமல் கொழுந்தெடுப்பாள். வனிதாவுக்கு இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும்

இருக்கின்றனர். ஒத்தாசையாக தாத்தா இருக்கிறார். பாக்கியம் இரண்டாவது பிள்ளை கிடைப்பதற்கு கர்ப்பிணியாக இருந்த காலத்தில் மாதத்துக்கு ஒரு தடவை டவுன் ஆஸ்பத்திரிக்கு கிளினிக் போய் பார்க்க வேண்டும் என்று சிலர் சொல்லிக்கொடுத்தார்கள்.

ஆனால் அதை புரிந்துகொள்ளுமளவுக்கு பாக்கியத்தின் அறிவு இடம்கொடுக்கவில்லை. தன்போக்கில் இருந்தாள். இடையில் காய்ச்சலால் அவதிப்பட்டாலும் கொத்தமல்லி தண்ணீரை குடித்தே சமாளித்துவிடுவாள். அதன் விளைவு பாவம் இரண்டாவது பிள்ளை. போலியோவினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் இன்றுவரை வீட்டோடே இருக்கிறாள். வீட்டில் இருக்கும்போது வனிதாவே தங்கையின் அனைத்து வேலைகளையும் கவனித்து வந்தாள்.

நான்காம் தரம் வரைக்குமே வனிதா பாடசாலைக்குப் போயிருக்கிறாள். வறுமைக்கோட்டுக்குள் வாழ்ந்த அவளால் பாடசாலை சட்டத்திட்டங்களுக்கு அடிபணிய முடியவில்லை. கருப்பு சப்பாத்தும், அயன் களையாத உடையுடனும் இருக்கும் மாணவர்களுக்கு மத்தியில், தான் தாழ்த்தபட்டவளாக வனிதா உணர்வாள். தாயின் கஷ்டம் அறிந்திருந்தபடியால் ஆசிரியர்களிடம் கைநீட்டி அடிவாங்க மட்டுமே அவளால் முடியுமாயிருந்தது.

அவள் சுமாராக படித்தாலும்கூட பாடசாலையைவிட்டு விலகும்போது அதைத்தடுக்க யாருக்கும் தோன்றவில்லை. இதையெல்லாம் வனிதா யோசித்துக்கொண்டிந்தபோது அவள் சின்ன வயதில் வேலைக்கிருந்த வீட்டின் எஜமான், எஜமானியைப்பற்றி நினைவு வந்தது. எவ்வளவு நல்லவர்கள். இறைவா அவர்களுக்கு எதுவும் ஆபத்துக்கள் நேரக்கூடாது. உள்ளம் உருகி மன்றாடினாள் வனிதா.

**********

ஆம். அவளது தாத்தா வனிதாவிடம் ஒருநாள்

'வனிதாம்மா. நாம அயலூரில் இருக்கும் ஓம் மாமா வீட்டுக்கு போயி வருவமா?' என்றார்.

ஒன்பது வயதுச் சிறுமியான வனிதா 'சரி தாத்தா' என்று ஆசையோடு புறப்பட்டாள். அவள் தாத்தாவுடன் பயணம்போகும்போது அம்மா அவளை உச்சிமோர்ந்து போய்வாடி செல்லம் என்று கூறியே எப்போதும் அனுப்பிவைப்பாள். ஆனால் அன்று வழமைக்கு மாற்றமாக தன் சேலையால் வாயைப்பொத்தியவாறு அழுதுகொண்டிருந்த

அம்மாவைப் பார்க்க வனிதாவுக்கு ஆச்சரியமாகவும் கவலையாகவும் இருந்தது.

'ஏம்மா அழுவுற. மாமா வீட்டுக்குத்தானே போறேன். சீக்கிரம் வந்துடுறேம்மா. தாத்தா என்ன கூட்டியாந்துரும். ஏம்மா நான் போவ வேணாமா?'

அவள் பேசிக்கொண்டிருந்தபோது பாக்கியம் காதுகளை அடைத்துக்கொண்டாள்.

பாக்கியம் பெரியவரை திரும்பிப் பார்த்து 'அப்பா இவ இங்கயே இருதுரட்டும்பா. நாஞ் செத்தாலும் பரவாயில்ல. இதுகள அனுப்பப்படாதுப்பா' என்று மன்றாடினாள்.

செத்தாலும் பரவாயில்லையா? அம்மா என்ன சொல்கிறாள்? மாமா வீட்டுக்கு போறேன்னு சொன்னதுக்கு இவ்ளோ அழணுமா? வனிதாவின் பிஞ்சு மனம் யோசித்தது.

'நீ சும்மா இரும்மா. சின்னதுகளை வச்சுக்கிட்டு நீ படுறபாடு எனக்குத் தெரியும். நானும் வயசாளி. நோய்க்காரன் வேற. இவ அங்கிருந்தான்னா மாசா மாசம் காசும் கிடைக்கும். அதவச்சி சின்னதுக வயித்த காயப்போடாம இருக்கலாம். அத்தோடு அவளும் வயிறு நெரம்ப சாப்பிட்டு ஊட்டுப் புள்ளயாட்டம் இருப்பா. நீ ஒன்டும் யோசிக்காத தாயி. அந்த வீட்டுக்காரங்க ரொம்ப நல்லவங்க'

நல்ல நேரம். தாத்தா சொன்னது எதுவும் வனிதாவின் காதில் விழவில்லை. அவள் தாத்தாவுடன் பயணமானாள்.

அந்த வீடு லயத்து காம்பறா போல் இல்லாமல் பலமடங்கு விசாலமாக இருந்தது. புகை படிந்து அழுக்காக இருக்கவில்லை. மஞ்சல்நிற வர்ணப்பூச்சு வீட்டின் சுவரை அலங்கரித்தது. வாசலில் பூந்தோட்டம் வேறு. சுற்றிவர தேயிலைக் காடுகளை மட்டுமே பார்த்து வளர்ந்த வனிதாவுக்கு மிகவும் ரம்மியமாக இருந்தது அந்த சூழல். தலையை சிலுப்பி அங்குமிங்கும் புதினம் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த வீட்டவர்கள் அவளுக்கும் தாத்தாவுக்கும் குளிர்பானம் கொடுத்தார்கள். இதுவரை தேயிலை சக்கையால் தயாரிக்கப்படும் பிளேன்டீயை குடித்துப் பழகியவளுக்கு அந்த வீடு சுவர்க்கலோகம்போல ஒரு மயக்கத்தையும் கிறக்கத்தையும் ஏற்படுத்தியது. கூடவே ஏறக்குறைய அவள் வயதிலிருந்த அந்தவீட்டுப் பிள்ளையின் விளையாட்டு பொம்மைகள்!

'தாத்தா நாம இங்கயே இருந்துரலாமா?'

'நீ இனிமேல் இங்கதாம்மா இருக்கப்போறே. நீ ஆசைப்பட்டபடி நல்லா சாப்பிடலாம். இந்த பேபியுடன் வௌயாடலாம்'

'நிஜம்மா தாத்தா...?'

'ஆமாம்மா. இனிமே நீ இங்கயே தங்கிக்க. அப்ப தொரே நான் போயி வரட்டுங்களா? அம்மா வர்ரேனுங்க' என்று சொன்ன தாத்தா தலையை சொறிந்துகொண்டு நின்றார்.

'சரி குப்புசாமி. சொன்னபடி பேத்திய கொண்டுவந்து விட்டிட்ட. அடிக்கடி வந்துப்பாரு பிரச்சினல்ல. ஏதும் பணம்கிணம் வேணும்னா எங்கிட்ட கேளு என்ன வௌங்கிச்சா? இப்போதைக்கு இந்த காசை வைச்சுக்கோ'

அந்த வீட்டுக்காரர் சொன்னது விளங்கியதோ இல்லையோ வனிதாவை ஒருதரம் கட்டியணைத்து உச்சிமோந்துவிட்டு அவர்கள் கொடுத்த காசையும் பெற்றுக்கொண்டு தாத்தா சென்றார்.

தாத்தா சென்று சற்று நேரத்தில் அந்த வீட்டம்மா வனிதாவை அழைத்து அவள் அந்த வீட்டில் செய்ய வேண்டிய வேலைகளை சொல்லத் தொடங்கினாள். அவளுடைய பிள்ளையுடன் விளையாட வேண்டும் என்றாள். பூ மரங்களுக்கு நீர் ஊற்ற வேண்டும் என்றாள். சின்னசின்ன உதவிகளை செய்தால் போதும் என்றாள். எல்லாமே தனக்கு தெரியும் என்பதுபோல தலையை ஆட்டியாட்டி சம்மதித்தாள் சிறுமி வனிதா.

எனினும் காலம் செல்லச்செல்ல அவளுக்கு அம்மாவின் ஞாபகம் மனசை வதைத்தது. தம்பி தங்கையரின் நினைவு சந்தோஷத்தை இல்லாமலாக்கியது. தினமும் பூ மரங்களுக்கு நீர் ஊற்றுவதும், வீடு பெருக்குவதும், பாத்ரூம் சுத்தம் பண்ணுவதும், அந்தவீட்டு பேபியுடன் பொம்மை விளையாடுவதும் அவளுக்கு எரிச்சலை மூட்டியது. வனிதா செயற்கையாகிப் போனாள்.

வீட்டில் இருக்கும்போது தம்பி தங்கையோடு ஆற்றங்கரைக்குச் செல்வாள். அம்மாவைப் பார்க்க தேயிலை மலைக்குச் செல்வாள். பக்கத்து காம்பிறாவில் உள்ள சீதா அக்கா செய்யும் தையல் வேலைகளைப் பார்க்கச் செல்வாள். எதிர்த்தவீட்டு மாமா தன் மனைவியுடன் சண்டை பிடிப்பதைப் பார்த்து சிரிப்பாள். நினைத்தால்

எதுவும் செய்வாள். ஆனால் இங்கு இந்த இந்த நேரத்துக்கு இதையிதைத்தான் செய்ய வேண்டும் என்ற வரைமுறை. கட்டுப்பாடு. அவளுக்கு கத்தியழ வேண்டும் போல் இருந்தது. ஒருநாள் காலையில் பூந்தோட்டத்தில் இருக்கும்போது தாத்தா வந்தார். தண்ணீரக் குழாயை அப்படியே போட்டுவிட்டு தாத்தா என்று கத்தியபடி ஓடிச்சென்று அவரைக் கட்டிப்பிடித்துக்கொண்டாள். இங்குள்ள கட்டுப்பாடுகளைப் பற்றி எல்லாம் சொல்லி இனிமேல் தனக்கு அங்கு இருக்க முடியாது என்றும் வீட்டுக்கு கூட்டிச் செல்லும் படியும் சொன்னாள்.

தாத்தாவுக்கு அந்த வீட்டாரைப் பற்றி நன்றாகத் தெரியும். அவர்கள் நல்லவர்கள். மனிதனை மதிக்கத் தெரிந்தவர்கள். அவளது கதைகளை மௌனமாக கேட்டுக்கொண்டிருந்த தாத்தா, அந்தவீட்டு எஜமான் எஜமானியம்மாவுடன் பேசிவிட்டு இரண்டு மயில்தாள்களையும் வேண்டிக்கெண்டார். அதன் பிறகு வனிதாவிடம் குனிந்து

'வனிதாம்மா.. தாத்தா போயி உனக்கு புடிச்ச ஸொக்கலட் பிஸ்கட் வாங்கியாரேன். நீ உடுப்பெல்லாம் எடுத்து தயாரா இருந்துக்க. ஐயா காசு தந்திருச்சி. இதப்பாரு. நாம வீட்டுக்கு போலாம்' என்று கூறிவிட்டுச் சென்றார்.

பகல் வந்தது. தாத்தா வரவில்லை. மாலையானது அப்போதும் தாத்தா வரவில்லை. அடுத்த நாள்.. அதற்கடுத்த நாள். ம்ஹூம் அவர் வரவேயில்லை. வனிதாவுக்கு விளங்கிவிட்டது. தாத்தா வரமாட்டார். தன்னிடம் பொய் சொல்லிவிட்டார். இனியும் எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்பதால் கவலையோடு சும்மா இருந்துவிட்டாள். மகள் வனிதாவுக்கு, கொடுமை கொடுக்கும் மனிதர்களற்ற நல்ல இடம் கிடைத்திருந்த மகிழ்ச்சியில் பாக்கியமும் பேசாமல் இருந்துவிட்டாள். வனிதாவாவது நிம்மதியாகச் சாப்பிடுகிறாளே.

அந்த வீட்டுக்கார எஜமானி நல்மனம் கொண்டவள். தனது மகளுக்கு போன்றே உடுப்புக்களை வனிதாவுக்கும் வாங்கிக்கொடுப்பாள். சாப்பாட்டில் குறை வைப்பதில்லை. வனிதாவின் ஓய்வு நேரங்களில் தலையிடுவதில்லை. வேலைக்காரி என்று பாகுபாடு பார்ப்பதில்லை. சம்பளத்தை சரியாக தாத்தாவிடம் சேர்ப்பித்துவிடுவாள். 'வனிதா அக்கா' என்றே தனது குழந்தைக்கும் சொல்லப் பழக்கியிருந்தாள்.

வனிதா ஐந்து வருடங்களை அந்த வீட்டில் கழித்துவிட்டாள். எனினும் சமைக்கும் வேலையை எஜமானி வனிதாவுக்கு கொடுக்கவில்லை. பாவம் என்று நினைத்தாளோ என்னவோ மற்ற வேலைகளை

செய்யவே அவளுக்குப் பணிக்கப்பட்டிருந்தது. இப்போது விளையாடும் வேலையும் இல்லை என்பதால் எஜமானியின் அனுமதியுடன் வனிதா ஓய்வு நேரங்களில் கொஞ்சம் தையல் வேலைகளைப் பழகியிருந்தாள். கண் பார்த்ததை கை செய்யும் என்பார்களே. அதுபோல சீதா அக்காவின் தையல் வேலைகளைப் பார்த்து பழகியிருந்தபடியால் வனிதாவால் அதை இலகுவாக கற்றுக்கொள்ள முடிந்தது. மேலும் எழுத படிக்கவும் அவள் அறிந்திருந்தாள்.

காலச்சக்கரம் வேகமாக சுழன்றது. அந்த வீட்டு எஜமானிக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டதால் அவரை இந்தியாவுக்கு அழைத்துப்போகும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. வனிதாவுக்கு ஊருக்கு போகும் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தமாதிரியொரு இக்கட்டில் எஜமானியம்மாவை விட்டுவிட்டுப்போக அவளது மனம் இடம்தரவில்லை. ஆனாலும் அவர்கள் இந்தியாவுக்கு போவதால் அவளால் வேறு எதையும் செய்ய முடியவில்லை. அவள் திரும்ப ஊருக்கே வந்துவிட ஆயத்தமானாள்.

வீட்டாருக்கு தேவையான சிலவற்றை வாங்கிக்கொண்டு அவள் வீட்டையடைந்தபோது அனைவருக்கும் சந்தோஷமாக இருந்தது. ஏனெனில் வனிதா பதினாறு வயது பருவ அழகில் இருந்தாள். தாயைக் கண்டதும் அவள் மடியில் சாய்ந்து அழுதாள். தம்பி தங்கையரை அணைத்து ஆதரித்தாள். தான் கொண்டுவந்த பொருட்களை எல்லோருக்கும் கொடுத்தாள். தாத்தா மீதிருந்த கோபம், தனது குடும்பத்தாருக்காகத்தானே தாத்தா அப்படி செய்தார் என்று நினைவு வந்ததும் அடியோடு மறைந்துவிட்டது. அனைவரும் கொஞ்ச காலம் மகிழ்ச்சியாக இருந்தனர்.

தாத்தாவின் கையிருப்பிலிருந்த பணம் கரைந்தது. தாய் பாக்கியத்தின் சம்பளமும் கரைந்தது. யோசிக்கும் வயது என்றபடியால் வனிதா கொழும்பில் தற்போது இருக்கும் வேலைக்கு வர தாத்தாவிடம் அனுமதி கேட்டாள். சின்ன வயதில் அவளை விட்டுவிட்டு வந்த தாத்தா தற்போது மொட்டவிழத்துடிக்கும் மலராக இருக்கின்ற பருவ வயதுடைய வனிதாவை அனுப்ப சற்று யோசித்தார். அவரது மண்டை குழம்பியது. அதனால் மீண்டும் கொஞ்சகாலம் வறுமை அவர்களை அணைத்துக்கொண்டது.

வனிதா பருவமடைந்து சடங்கு சம்பிரதாயம் எல்லாம் முடிந்தது. வீட்டு நிலைமையும் மிகவும் மோசமடைந்தது. தாயின் வருமானத்தால் குடும்பம் ஓட்ட முடியாது என்பதும், இனி தாத்தா வேலைக்கு செல்வது உசிதமல்ல என்று விளங்கியதாலும் வனிதா மீண்டும்

வீட்டு வேலைகளுக்கு செல்வதற்கு தீர்மானித்தாள். அவள் முன்பிருந்த வீட்டுக்காரர்களைப் பற்றிய எந்தத் தகவலும் அவளுக்கு கிடைக்காதபடியால் கொழும்பு பயணத்தை அமுல்படுத்தினாள். இன்று தாயின் கண்ணீர் அவளுக்கு வியப்பைத் தரவில்லை. அந்தக் கண்ணீரை துடைப்பது மாத்திரமே அவளது தேவையாக இருந்தது.

கொழும்புக்கு வந்த அடுத்த நாளே அவளுக்கு கொடுமைகளை நிகழ்த்தத் தொடங்கினாள் ராணி. காலை நான்கு மணிக்கு எழுந்திருக்க வேண்டும். காலை உணவு, பகலுணவை தயாரிக்க வேண்டும். ஏழு மணியாகும்போது தேனீர் ஊற்ற வேண்டும். பிறகு விசாலமான அந்த பங்களாவை துடைத்து பெருக்கி... கொஞ்சம் ஓய்வாக இருக்கலாம் என்று பார்த்தாலும் ராணி எதையாவது ஒரு வேலையை ஏவிக்கொண்டே இருப்பாள். ஒன்றும் இல்லாதவிடத்து ராணியின் தலையில் பேன் பார்த்துவிட வேண்டும்.

ஒருநாள் வனிதா வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு அங்கிருந்த செய்தித்தாளை புரட்டிக் கொண்டிருந்தாள். எதேச்சையாக அந்தப் பக்கம் வந்த ராணி மனசாட்சியில்லாமல் கடுமையான தொனியில் அவளை அதட்டி

'பஞ்சம் பொழைக்க வந்த நாய்! ஒனக்கு பேப்பர் படிக்க சம்பளம் தரயில்ல. இனிமே இந்த ஹோல் பக்கம் வந்தால் காலை வெட்டிருவேன். போ போ குசினியில கிடக்க வேண்டியதுகள் எல்லாம் ஹோலுக்கு வந்துட்டாளுங்க பேப்பர் பாக்க' என்றாள்.

வேலைக்காரர்கள் என்றால் பேப்பர் படிக்க கூடாதா? என்ன மனிதர்கள் இவர்கள். காசு என்ற ஒன்றை இறைவன் அவர்களுக்கு அள்ளி வழங்கியிருக்கிறான். செல்வச்செருக்கால் ஏழைகளிடம் இப்படி நடந்துகொள்கிறார்களே. மாத இறுதியில் தருவதே வெறும் மூவாயிரம் ரூபாய்தான். அதில் இவ்வளவு சொல்லம்புகளா? அன்பாக, மனிதத் தன்மையுடனாவது கதைக்கலாமே. இறைவா. இவர்களெல்லாம் கஷ்டம் என்றால் என்னவென்று அனுபவித்திருக்கிறார்களா? பசியின் கொடுமையை உணர்ந்திருக்கிறார்களா? ஏன் ஏழைகளின் வாழ்க்கை எப்போதும் சிறுமைப்பட்டே இருக்கிறது? நாமெல்லாம் ஒரு நாளைக்கென்றாலும் சந்தோஷமாய் வாழ வேண்டாமா என்று பலவாறு எண்ணினாள். மிகவும் கவலைப்பட்டாள் வனிதா.

இன்னொரு நாள் அனைவரும் கோல்பேஸ் போனார்கள். இதுவரை கண்டில்லாத அழகான இடம். கடல்காற்று இதமாய் மேனியை வருடியது. அவளிருக்கும் வீட்டில் பரமசிவம் - ராணியின் அறை

மட்டும் குளிரூட்டப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் காற்றாடி பொருத்தப்பட்டிருக்கிறது. என்ன ஓரவஞ்சனையோ? வனிதாவின் அறையில் கட்டில் கூட இல்லாமல் நுளம்பும், சிலந்திக்கூடும்தான் இருக்கிறது. காலையில் அவர்களுக்கு தேனீர் கொடுக்கப் போவதென்றால் வனிதாவுக்கு சந்தோஷமாக இருக்கும். ஏனென்றால் ஒரு நிமிடமேனும் அனுபவிக்க முடிகின்ற அந்த குளிரூட்டியின் சுகம். எல்லோரும் அந்த கோல்பேஸ் மணற்பரப்பில் நடந்து கொண்டு இருந்தார்கள். பரமசிவம் ஐஸ்கிரீம் வாங்கப் போனார்.

'ராணி உனக்கு வெணிலாவா? ஸ்ரோபரியா?' என்றபோது

'வெணிலாவே வாங்கிடுங்க. ஏய் வனிதா உனக்கு என்ன வேணும். ஆ.. உனக்கு ரெண்டுநாளா தடுமலா இருந்திச்சில்லே?' என்றாள் ராணி.

'இல்லையே' என்று சொல்ல வனிதா வாயைத் திறந்தபோது மீண்டும் ராணியே சொன்னாள்.

'குழந்தய வேற அடிக்கடி தூக்கி பாத்துக்கணும். அதனால் நீ ஐஸ்கிரிம் சாப்பிடாதே. அதோ அந்தப்படியில நீ ஒக்காந்திரு. கொழந்தக்கி காத்து ஒத்துக்காது. இந்தா.. நானும் ஐயாவும் வந்துர்ரோம்' ஐஸ்கிரீமை சாப்பிடுவதற்காய் பிள்ளையை அவளிடம் திணித்தாள் ராணி.

குழந்தைக்கு காற்று ஒத்துக்கொள்ளாது. வனிதாவுக்கு காற்றும், ஐஸ்கிரீமும் ஒத்துக்கொள்ளும்தானே? ஏன் அவளுடைய மனதை புரிந்துகொள்ள முடியவில்லை. வேலைக்காரி என்றாலும் அவளுடைய உடம்பில் இதயம், இரத்தம், ஆசை எல்லாம் இருக்கிறதல்லவா? விதியை வெல்ல யாரால் முடியும்?

மௌனமாக கண்ணீரை வடித்தவள் தன் நெஞ்சோடு குழந்தையை அணைத்துக்கொண்டு அவர்கள் வரும்வரை காத்திருந்தாள். அவர்களிருவரும் அங்கிருந்த பிரபலமான ஹோட்டலில் இரவு சாப்பாட்டையும் வாங்கிக்கொண்டு வந்தார்கள். நான் உனக்குத்தான் என்பதுபோல பகல் சமைத்த உணவு வனிதாவுக்காக காத்திருந்தது.

**********

கடந்தகால எண்ணங்களில் நிகழ்காலத்தை மறந்திருந்தவள் ராணியின் கை, கன்னத்தில் பதம்பார்த்து சுள்ளென்று வலிக்கவும்தான்

சுயநினைவுக்கு வந்தாள். குழந்தை சிறுநீர் கழித்து அதில் தன் கைகால்களை அடித்தபடி விளையாடிக்கொண்டிருந்தது. ராணி தனக்கு அடித்தது நியாயம்தான் என வனிதா எண்ணிக்கொண்டாள்.

'என்னடி முழிக்கிற எரும. குழந்த அதுபாட்டுக்கு மூத்திரத்துல வெளயாடுது. நீ பாத்துக்கிட்டு நிக்கிறியா? எவனோடு ஓடிப்போலான்னு யோசிச்சிக்கிட்டு நிக்கிற? லயத்து கூட்டம். நீயெல்லாம் சோத்தத் திங்கிறியா அல்லது...'

ஆமா. பெரிய சோறாம் சோறு. விடிந்தால் ராத்திரி வரைக்கும் வேலை. விருந்தினர்கள்னு வீட்டுக்கு யாராச்சும் வந்தா எந்த ஒத்தாசயும் இல்லாம முதுகு முள்ளு ஒடியங்காட்டிக்கும் தனியாக்கெடந்து சாவனும். இரவில் நீங்க சுகமாக தூங்குறதுக்கு தாய்ப்பாலும் கொடுக்காமல் புள்ளையை எங்கிட்ட தந்துடரீங்க. சின்னக்குழந்த பாவம். தினமும் ராத்திரிக்கு புட்டிப்பால் அடிச்சுக் கொடுத்தாலும் அது குடிக்கமாட்டேங்குது. ராவைக்கெல்லாம் கண்முழிச்சி, பகலில வேல செஞ்சி இன்னமும் இங்கயே கதின்னு இருக்கேனே. உண்மைக்கும் நீங்க சொல்ற மாதிரி நான் எரும மாடுதான். எரும மாடேதான்..

தொண்டைவரை வந்த இந்த வார்த்தைகளை சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள் வனிதா.

அவளது நினைவில் வீட்டார் சந்தோசமாக சாப்பிடும் காட்சி வந்துபோனது!!!

# 05 தோல்வி

இப்போதுகளிலெல்லாம் இருள் சூழ்ந்த உலகமாகிவிட்டது என் வாழ்க்கை. வாழ்வின் வசந்தங்களை ஒவ்வொன்றாக நுகரத்துடிக்கும் விடலைப் பருவம் முடிந்த ஒரு வருடத்தில் நான் விதியிடம் தோற்றுப் போனேன். அந்த கொடுங் கணங்கள் எனக்கு ஞாபகமிருக்கிறது.

பாடசாலைப் பருவத்தில் முதன்முதலாக அவளைப் பார்த்தேன். ஜீவிதம் பற்றி விலாவாரியாக தெரியாத வயசெனக்கு. உண்மையில் சொல்வதென்றால் என் மனசில் நட்சத்திரமாக மின்னியவள். என் மனசுக்குள் காதல் வலைகளைப் பின்னியவள்.

வாழ்வின் அர்த்தம் தெரியாமல் வெறுமனே சுற்றிக் கொண்டிருந்த என்னைப் பிடித்து நிறுத்தி வசந்தம் காட்டியவள். என்னை விட ஓராண்டு இளையவள். உடைந்திருந்த என் உள்ளத் துகள்களை தன் பார்வையால் ஒன்று சேர்த்தவள். நான் அழகனல்லன். எனினும் அவளது தரிசனம் கிடைக்கிற ஒவ்வொரு நாளிலும் நான் அழகாகவே தோன்றுவேன்.

கையெழுத்து கோணியிருந்தாலும் என் தலையெழுத்து நன்றாக இருக்கும் என்று ஆறுதல் சொன்ன ஏணியவள். அவளுக்காக எதையும் செய்யத் தயாராயிருந்தேன். என் சக்திக்கு மீறியவற்றையும் அவளது சந்தோஷத்துக்காக செய்ய விழைந்ததுண்டு. அவள் விருப்பமற்ற எதையும் நான் செய்ய நினைத்ததில்லை. அவளுக்கு பிடித்த அனைத்தும் ஏனோ எனக்கும் பிடித்திருந்தது.

என்னை ரொம்பவும் ரசிப்பாள். உற்று உற்றுப் பார்ப்பாள். தேவையின்றி சிரிப்பாள். தலைகால் புரியாத ஆனந்தத்தில் பலநாள் தூக்கம் கெட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் என் உள்ளம் ஆனந்த மழையில் நனைந்து கொள்ளும். என்னைத் தொடாமல் அவளுக்கு பேசத் தெரியாது. எனக்கோ கூச்சமாக இருக்கும். அவளைத் தொட்டுப் பேச ஆசையாகவுமிருக்கும்.

காலடியில் இருக்கும் பல தனியார் வகுப்புக்களை விட்டுவிட்டு மிகத் தொலைவில் இருக்கும் வகுப்புக்களுக்கு போய் வருவேன். ஏன் தெரியுமா? அவளோடு இணைந்து நடந்து, சின்னக் கண்கள் பார்த்து, மதுரக்குரல் கேட்டு சந்தோஷமாக செல்வதற்கு. அதைவிட வேறென்ன தேவையிருந்திருக்கும் எனக்கு? தேளாக கொட்டிவிட்டுப்

போகும் வரை நான் அவளைக் காதலித்தேன். அவள் என்னை ஏமாற்றிவிட்டுப் போன போது துடித்துப் போனேன். இதயம் வெடித்துப் போனேன்.

ஆரம்ப காலத்தில் நன்றாகத்தானிருந்தாள். ஆனால் அவள் என் நெஞ்சுக்குள் நெருஞ்சி முள்ளை சொருகி விட்டுப் போகும் வரை எனக்குத் தெரியவில்லை. தெரியாதளவுக்கு நான் சின்னக் குழந்தையுமில்லை. அன்பைக் காட்டி வம்பை வாங்குவேன் என்று நான் அறிந்திருப்பேனா?

அவள் ஊருக்கு போவாள். அப்போது இதயத்தில் இனம்புரியாத வலியெடுக்கும். ஏனெனில் திரும்பி வரும்போது என்னைப் பற்றி சுமந்து சென்ற ஞாபகங்களில் பாதியை தொலைத்து விட்டுத்தான் வந்திருப்பாள். வந்த பின் கழுகாய் என்னைச் சுற்றி, பாம்பாய் என்னைக் கொத்தி வதைப்பாள்.

அப்படியெல்லாம் நடந்தாலும் நான் அவளுடன் கதைக்காமல் இருந்ததில்லை. என் அகம் முழுக்க அவள் வியாபித்து இருந்ததாலோ என்னவோ மீண்டும் மீண்டும் அவள் முகம் பார்க்கவே ஏங்கினேன். அவளை மட்டுமே என் இதயத்தின் இளவரசியாக்கிக் கொள்ள ஆசைப்பட்டேன். 'போனால் போடி' என்று சொல்லிவிட்டு வந்திருக்கலாம், நான் அவள் மீது கொண்ட காதல் பொய் என்றால்!

அவள் எனக்கு மட்டுமானவள் என்று எண்ணியிருந்தேன். 'எனக்கு இன்னொருவன் இருக்கிறான்' என அவள் சொல்லும் வரை. அவள் வேண்டும் என்பதற்காக நான் அவளைக் காதலிக்கவில்லை. நான் உண்மையாக அவளைக் காதலிப்பதால்தான் அவள் எனக்கு தேவையாக இருக்கிறாள். அவளைத் தவிர வேறெந்த ஞாபகங்களும் எனக்கில்லை. என் இதயம் அழுகிறது.

அவளது வீட்டார் விரும்பும் மணவாளனுக்கு அவளைக் கொடுத்துவிட்டு நான் விலகிக்கொள்ள நினைத்தாலும் என் உள்ளம் உலோபியாகின்றது. அவளை என் உயிர் போல நான் கருதிடாத காரணம், உயிரும் ஓர் நாள் என்னை விட்டு பிரிந்திடுமே என்பதால்தான்.

அவளை உண்மையாய் காதலித்ததற்காக எனக்கு கிடைக்கவிருக்கும் பரிசு என்னவோ? ஐயோ கண்ணீர் கட்டுப்பாடின்றி பெருகுகின்றது. அழிந்து போகவே முடியாதபடிக்கு ஒரு காதல் வடுவை தந்திடுவாளோ? என் ஆசைகளை அவளின் வார்த்தைகளுக்குள்

கருகச் செய்து விட்டு என் அந்தரங்கத் துன்பத்தில் சுகம் கண்டால்? அந்த எவனோ ஒருவனின் அணைப்பில் அவளது மனசாட்சி கருகிப்போய் என்னை மறந்துவிட்டால்? என்னைச் சுற்றி சதாவும் ஒரு தீக்குளம் பயமுறுத்திக்கொண்டே இருக்கிறது.

துன்பக்கடலில் மூழ்கடித்துவிட்டு மூச்சு முட்டச் செய்தாலும் அவளுடன் நான் கோபிக்கப் போவதில்லை. என் மனசில் அவளுக்காக ஊற்றெடுக்கும் அன்பை முழுவதுமாக வெளிப்படுத்தத் தெரியவில்லை. ஒரு வேளை அப்படித் தெரியப் படுத்தினால் என்னை பைத்தியக்காரனாகவும் எண்ணியிருப்பாள்.

சிலவேளை என் ஆன்மாவை கசக்கிப் பிழிந்து காதல் சாறை வலுக்கட்டாயமாக பருக்கியதாலோ என்னவோ அவள் என்னை விட்டுப்போக எண்ணியிருக்கக்கூடும். அவள் இன்னொருவனுக்கு உரிமையாகப் போகிறாள். கடவுளே. அதைத் தாங்கும் பலமான உள்ளம் எனக்கில்லையே.

கறவை மாடாய் காதலித்துக்கொண்டிருந்த என்னைவிட்டு அந்தப் பறவை உல்லாசமாய் பறந்து போய்விட்டது. ஆனால் சிறகுகள் எறிந்து சாம்பலாகிக் கொண்டிருப்பது நான் தான்!!!

# 06 மாற்றம்

Jaffna Central College Library

தனது சகோதரியின் திருமண விடயங்கள் பற்றிய செய்தியை தன் நண்பர்களுக்கு பேஸ்புக்கில் அறிவித்துவிட்டு சந்தோஷமாக வந்த முரளிக்கு தூரத்தில் மூச்சிரைக்க ஓடிவரும் சிறுவனின் தோற்றம் மனதை என்னவோ செய்வது போல் இருந்தது. அவன் தன்னை நோக்கித்தான் வருகிறான் என்று கணிப்பிட்டுக் கொள்வதற்கு முதல் அந்தச் சிறுவன் முரளியை அண்மித்துவிட்டான்.

'மஹத்தியா வாசனா சம்பத் ஒன்டு வாங்குங்கோ'

'வேண்டாம் போ'

'அனே மாத்தியா. காலைலருந்து ஒன்னும் சாப்பிடலை. அம்மாவும் குட்டித்தங்கச்சியும் வீட்டில பசியில இருக்காங்க. புண்ணியம் கிடைக்கும்'

'உன் அப்பா எங்கே?'

'செத்துப்போச்சி மாத்தியா'

முரளி அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. திக்கித்திணறி தமிழ் பேசிய அந்த சிங்களச் சிறுவனிடம் வாசனா டிக்கட்டை வாங்காமலேயே நூறு ரூபாயை அவனின் கையில் திணித்துவிட்டு தன் காருக்குள் ஏறிக்கொண்டான். ஹப்புத்தளையிலிருந்து பண்டாரவளை நோக்கி போய்க்கொண்டிருந்த முரளியின் கார் சில்லுகள் லாவகமாக அப்பாதைகளின் வளைவுகளுக்கு ஏற்ப தம்மை வளைத்தும் நெளித்தும் உதவி செய்தன.

பனிச்சாரல்களுக்கு மத்தியில் தேயிலைக் கொழுந்துகளின் வாசனை, காற்றில் வந்து சங்கதி சொல்லியது. முகில் கூட்டங்கள் மலையடிவாரத்தை நோக்கி ஆவலுடன் கீழே வந்துகொண்டிருந்தன. மழையும் இலேசாக தூறிக்கொண்டிருந்தது. ஆங்காங்கே மலைகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மண்குவியல்கள் பாதையில் இருபக்கங்களிலும் குவிந்திருந்தன. தலையாட்டும் மானாப்புற்கள் குளிருக்கு நடுங்கியவாறு அங்குமிங்கும் அசைந்துகொண்டிருந்தன.

தூரத்தில் ஒரு ஆடு மழையில் நனைந்த தன் உடம்பை சிலிர்த்தவாறு புல்மேய்ந்து கொண்டிருக்க, தேயிலை மலைகளில் ஆண்களும் பெண்களும் பொலித்தீன் பைகளினால் தங்கள் தலையை மறைத்தவாறு தேயிலை பறித்துக்கொண்டிருந்தார்கள்.

மற்ற நாட்களில் அவனும் இயற்கையோடு இணைந்து தூரத்துப் பச்சையாய் அழகாய்த் தெரியும் மலைகளையும், நீண்டு உயர்ந்து வளர்ந்த மரங்களையும் பார்த்து ரசித்தவாறு வந்திருப்பான். ஆனால் இந்த அழகிய காட்சிகள் எதுவும் இன்று முரளியின் மூளைக்குள் பரவசத்தை ஏற்படுத்தவில்லை. அவன் தன்னுடைய பாடசாலைக் காலத்து வாழ்க்கைக்கு தன் சிந்தனைகளைத் திருப்பிவிட்டிருந்தான்.

அம்மா, அப்பா, இரண்டு அக்காமார்களுக்குப்பிறகு முரளியும், அவனுக்குப்பிறகு ஒரு தம்பியும், தங்கையுமாக மொத்தம் ஏழு பேர்களைக் கொண்டது முரளியின் குடும்பம். அப்பா வேலுச்சாமி குடும்பத்தில் அக்கறை உள்ளவராயினும் கசிப்பு குடித்தே தன் வாழ்நாளை பாதியாக்கிக்கொண்டவர்.

அம்மா முத்தாயி தேயிலைக்கொழுந்து பறிப்பவள். பிள்ளைகள் அனைவரும் பாடசாலைக்குச் செல்பவர்கள். லயத்துக்காம்பறா என்று அழைக்கப்பட்ட முரளியின் குடிசையில் அவர்களைத் தவிர கறையான்களும், எலிகளும்கூட வசித்து வந்தன.

ஒவ்வொருநாளும் விடியற்காலையில் எழுந்து சில்லென்ற நீரில் குளித்து சாமி பூஜைகளைப் பண்ணுவார் வேலுச்சாமி. அம்மாவான முத்தாயி அவருக்கு ஒத்தாசையாக எழுந்து ரொட்டிகளைச் சுட்டு தேங்காய்ச் சம்பலும் செய்துவிட்டு தேயிலை மலைக்குப்போக தயாராகுவாள். பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல எழுந்திருக்கும் போது அம்மாவும் அப்பாவும் மலைக்குச் சென்றிருப்பார்கள்.

பெரிய அக்கா எல்லோருக்கும் தேயிலைச் சாயத்தை வடித்துக் கொடுப்பாள். சீனி இல்லாத பல தருணங்களில் முரளி கோபித்துக் கொண்டு பாடசாலைக்குப் போய்விடுவதுமுண்டு. காலம் செல்லச் செல்ல குடும்பத்தின் வறுமை நிலை கோரத்தாண்டவமாடியது. முத்தாயி மேலதிக வேலைகளுக்காக இரவில் வீடுவீடாகச் சென்று மாவிடித்துக் கொடுப்பதுவும், சமையல் வேலைகள் செய்வதுமாக இருந்தாள். அவர்கள் வீட்டில் நான்கு பெட்டைக் கோழிகளையும் வளர்த்து வந்தாள். சின்னக்கா பூச்செடிகளை வளர்த்து விற்பனை செய்து வந்தாள்.

முரளி அப்போது எட்டு வயதை அடைந்தவன். அவனுக்கு பெரிய அக்கா வடைகளைப் பொரித்து கூடையில் போட்டுக்கொடுப்பாள். அவன் அந்திப் பொழுதுகளில் டவுண் பக்கமாகச்சென்று அதைக் கூவிக்கூவி விற்பான். சில நேரங்களில் கொடுத்தனுப்பிய வடைகளில் பாதிகூட விற்பனை செய்ய முடியாமல் அவன் அழுது கொண்டு வீட்டுக்குப் போகும்போது அவனை ஆறுதல்படுத்த வீட்டில் பெரியவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள்.

ஏனெனில் அவர்களும் ஏதாவது வேலைக்காக வெளியில் சென்றிருப்பார்கள். முரளி தன் தம்பி, தங்கையுடனும் அவன் செல்லமாக வளர்த்து வரும் கோழிகளுடனும் தன்பொழுதைக் கழித்துவிட்டு ஏழு மணியானதும் பாடப் புத்தகத்தோடு ஒன்றிப்போயிருப்பான்.

இவ்வாறு இவர்களுடைய வாழ்வு மிக சோகமாக நிகழ்ந்தேறிய காலத்தில், அனைவரினதும் நிம்மதியைக் கொன்றுபோட்டதொரு நிகழ்வு இடம்பெற்றது. ஆம்! மலைக்குச்சென்ற வேலுச்சாமி பாம்பு கடித்து இறந்துபோனார். வாயில் நுரை தள்ளியவாறு காணப்பட்ட அவரின் உடலைப் பார்த்ததும் முத்தாயி வீரிட்டு கதறியழுதாள். அக்காமார் இருவரும் தலையிலும், மார்பிலும் அடித்துக்கொண்டு அழுதார்கள். கீழ் லயத்து செல்லாத்தா ஆச்சி ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். முரளியின் கண்களிலிருந்து ஒருசொட்டும் கண்ணீர் வரவில்லை. அவன் அதிர்ச்சியால் அப்படியே உறைந்து போயிருந்தான்.

அவன் பரீட்சைக் கட்டணம் என்று கேட்டபோதெல்லாம் சந்திக்கடை பண்டாரவிடம் கடன்கேட்டு காசு தந்த அப்பா, மாவு கலந்த தேத்தண்ணி கேட்டு அவன் அடம்பிடித்தழுதபோது டவுணுக்கு கூட்டிச்சென்று ஹோட்டலில் தேநீர் வாங்கித்தந்த அப்பா, அம்மா முரளிக்கு அடித்த போதெல்லாம் அம்மாவை அதட்டி தன் மடியில் அமர்த்தி நெஞ்சோடு அணைத்துக்கொண்ட அப்பா... இனிமேல் அவனுடன் இருக்கப்போவதில்லை... பேசப்போவதில்லை... என்று எண்ணும்போது முரளியின் தொண்டை அடைத்து இதயம் கல்லாகிப்போனது.

அந்தக் கவலையை வெளிப்படுத்தத் தயாராக அவனது நெஞ்சு மிகவேகமாக உயர்ந்து தாழ்ந்தது. யாரும் எதிர்பார்க்காத தருணமொன்றில் ஓவென்று வெடித்தழுதான் முரளி. அவனை கட்டுப்படுத்த யாருக்கும் முடியவில்லை. அவனாகவே மயங்கி விழும் வரைக்கும்!

பிறகு முரளியின் வாழ்க்கையில் பல சோதனைகள் ஏற்பட்டன. அம்மா அவ்வப்போது சுகவீனத்தால் சுருண்டு படுத்துக்கொள்வாள். பலவீனமடைந்திருந்த அவளது உடல்நிலை, காலநிலைக்குளிரால் இன்னும் பாதிக்கப்பட்டது. அதனால் அவன் பாடசாலைக்குச் செல்வதில் அவ்வப்போது சில கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

கிழிந்த மேற்சட்டையையும், துவைத்துத் துவைத்து பழசாகிப்போன காற்சட்டையையும் பார்த்து பாடசாலையிலும் கூட அவனைப்பற்றி பல மாணவர்கள் கேலியும் கிண்டலும் செய்வார்கள்.

பரீட்சைக் கட்டணம் செலுத்த முடியாத பல கட்டங்களில் கணக்குப்பாட ஆசிரியரான சித்ரா டீச்சரின் சொல்லம்புகள் அவன் மனதைக் குத்திக் கிழித்துவிடும். அவர் பாடத்துக்கு வந்தாலே முரளியின் கறுத்த உடல் வியர்வையால் நனைந்து வெடவெடத்துக் கொண்டிருக்கும்.

'லயத்தான்களுக்கு படிப்பு ஒரு கேடு. காசு கட்ட வக்கில்ல. வந்திட்டான்கள் படிக்க'

'ஏய் தோட்டக்காட்டான்! பேசாம மாடு மேய்க்கப் போயிருந்தாலாவது பிரயோசனப்பட்டிருப்பே. வந்திட்டான் இங்க உயிரை வாங்க'

இந்த மாதிரியான பேச்சுக்கள் முரளியின் மனதை அன்றாடம் நோகடித்தாலும் அவன் படிப்பதைக் கைவிடவில்லை. எனினும் அவனது பிஞ்சு மனது பாடசாலைக் கோபத்தையெல்லாம் தாய் மீது காட்டுவதும், அவளிடம் கெஞ்சுவதுமாக இருந்தது.

'அம்மா! எனக்கு புதுக்காற்சட்டையும், சேட்டும் தச்சுத்தருவியாம்மா?'

'என்ர ராசா. அடுத்த வருசம் நீ புதிய வகுப்புக்கு போறப்போ அம்மா தச்சுத்தருவேன்டா'

'போம்மா! எப்ப கேட்டாலும் இதத்தான் சொல்லுவாய். நான் இனி பள்ளிக்கூடம் போறேல்லை'

'அழாதடா செல்லம். நீ நல்லாப் படிச்சு பெரியாளாய் வர வேணும். உன்ர அப்புவும் இதத்தான் விரும்பிச்சி. சம்பளம் போட்டதும் புதுச்சட்டை தாறன் ராசா'

முரளி அம்மாவின் அணைப்பில் சமாதானமாகிவிடுவான். அவனது இலட்சியம், தன் குடும்பத்தாரின் எதிர்பார்ப்பு போல நன்றாக படித்து முன்னேறுவது என்று திடசங்கற்பம் பூண்டான்.

பெரிய அக்கா திருமண வயதை எட்டியிருந்தாலும் அவளுக்கென்று பிறந்தவனை கண்டு பிடிப்பதில் பல சிக்கல்கள் எதிர்ப்பட்டன. சின்ன அக்கா இளமை அழகுடன் இருந்ததால் தோட்டத்து இளைஞர்களை விடவும், சம்பளம் போடும் துரைமார்களின் கண்கள் அவளை மேய இலக்கு பார்த்துக்கொண்டிருந்தன. தங்கையும் பருவ வயதை அடைந்து வாழ்க்கையைப் பற்றின பயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தாள்.

வருடங்கள் சில கடந்தன. அம்மாவின் அன்பான வார்த்தைகள் தந்த தைரியத்தாலும், அக்காமாரினது ஓய்வு ஒழிச்சலற்ற உழைப்பாலும் முரளி உயர்தரத்திலும் சிறப்பாக சித்தியெய்தி மருத்துவத்துறைக்கு தெரிவாகியிருந்தான்.

பல்கழைக்கழகத்தில் கூட அவனுடன் படிக்கும் சக மாணவர்கள் அவனது வறுமையை .குத்திக்காட்டத் தவறியதில்லை.

'மச்சான் இதப்பாருடா. தோட்டக்காட்டான் எல்லாம் டொக்டர் ஆகப்போறான்டா. அப்போ நாம எல்லாம் எங்கப் போறது?'

'ஆமாண்டா. இவனும் இவன்ட எண்ணெய் தலையும். டாக்டர் ஆக ஒரு பர்சனலிட்டி வேணாம்? நீ எல்லாம் ஏண்டா இப்படி எங்கள படுத்துற?'

இவையெல்லாம் முரளிக்கு பழகிப்போன சமாச்சாரங்கள் ஆகின. சில நாட்கள் கடந்த நிலையில் அவனது கூர்மையான அறிவையும், ஆற்றலையும் பார்த்து மற்ற மாணவர்கள் அவனை தம் நண்பனாக்க பிரயத்தனப்பட்டார்கள். தோட்டக்காட்டான் முரளி, அவர்கள் மத்தியில் டொக்டர் முரளியாக உருவெடுத்தான்.

முரளியின் படிப்புக்காலம் முடியும் தருவாய் வரைக்கும் பெரிய அக்கா வெளிநாட்டுக்குச் சென்று அனைவரினதும் வயிற்றுப்பாட்டை கவனித்து வந்தாள். சின்னக்கா தோட்டப்பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக கற்பித்துக்கொண்டிருந்தாள். தம்பி உயர்தரமும், தங்கை சாதாரண தரமும் கற்றுக்கொண்டிருந்தார்கள்.

முரளி தனக்கு வைத்திய நியமனம் கிடைத்ததும் பெரிய அக்காவை வரவழைத்து தனது சீனியர் நண்பன் ஒருவனுக்கு அவளை மணமுடித்துக் கொடுத்தான். அனைவரினது அன்பாலும் பராமரிப்பாலும் முத்தாயி உடல்நிலை தேறி இருந்தாள். சின்ன அக்காவுக்கு வரன் தேடிக்கொண்டிருந்த தருவாயில் அவளுடன் படித்து தற்போது வங்கியில் வேலைசெய்து கொண்டிருக்கும் விமலன் அவளை மணமுடிக்க சம்மதம் கூறியிருந்தான். எல்லாம் இறைவனின் நாட்டத்தால் நல்ல படியாக நடந்து கொண்டிருந்தது.

சின்ன அக்காவின் திருமண விடயம் பற்றி தன் நண்பர்களுக்கு பேஸ்புக்கில் மகிழ்ச்சியான செய்தியை அனுப்பிவிட்டு வந்து கொண்டிருந்த முரளிக்குத்தான், வாசனா சம்பத சிறுவனின் சந்திப்பு முந்தின காலத்து வாழ்வை ஞாபகப்படுத்தியது.

**********

புகையிரத வண்டி செல்வதற்காக பாதை மறிக்கப்பட்டிருந்தது. வாகனங்கள் தொடராக காத்துக்கொண்டிருந்தன. அந்தி சாயும் அத்தருணம், மழைமுகிலின் காரணத்தால் இரவாகிவிட்டதைப் போன்ற பிரம்மையை ஏற்படுத்தியது. இலேசாக காரின் ஜன்னல்களைத் திறந்துவிட்டான் முரளி. பாதையோரத்து மின்குமிழ்கள் அனைத்தும் எரிந்து கொண்டிருந்தன. எங்கிருந்தோ வந்த வெளவால் ஒன்று மின்சார வயர்களில் தொங்கி தன்பாட்டுக்கு அலறிக்கொண்டிருந்தது.

ஒருவாறு பண்டாரவளைக்கு வந்துசேர்ந்துவிட்ட முரளி அங்கிருந்த தனது வீட்டுக்குப் போகும்போது ஆறு நாற்பத்தைந்து ஆகியிருந்தது. அப்போது பெரிய அக்கா அவனுக்கு இஞ்சி பிளேன்டீயும், உழுந்து வடையும் கொண்டு வந்தாள். அவள் மிகவும் வாடிப்போயிருந்தாள். அவளது முகத்தைப் பார்க்க அவனுக்கு கவலையாக இருந்தது. என்ன ஏதென்று விசாரித்ததில், தான் மாமனாகப் போகும் இனிய விடயத்தை அறிந்து மகிழ்ந்தான். அனைவரையும் இரவைக்கு சாப்பிடுமாறும், தான் வர தாமதமாகும் என்றும் கூறிவிட்டு, டிஸ்பன்சரி நோக்கி தன் காரை செலுத்தினான் முரளி.

ஏழரை மணியளவில் டிஸ்பன்சரிக்கு வந்து சேர்ந்துவிட்ட முரளி அங்கிருந்த தாதிப்பெண்ணை அழைத்து ஒவ்வொருவராக உள்ளே அனுப்புமாறு கூறினான். நாட்டு நிலைமை மோசமடைந்தது போல நிறைய நோயாளிகள் அங்கு வந்திருந்தார்கள். அதற்குக் காரணம் டொக்டர் முரளி அம்மாவட்டத்தின் சகல இடங்களிலும் பிரபலம் ஆகியிருந்ததே. அறிந்தவர்கள், புதியவர்கள் என்று பலர் வந்திருந்த

அந்த டிஸ்பன்சரி இரவு ஒன்பது மணிக்கு மூடப்பட்டு விடுமா என்று யோசித்துப் பயந்து தாதிப்பெண் அவசர அவசரமாக தனது அலுவல்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஸ்டெதஸ்கோப்பை கழுத்தில் மாட்டிக்கொண்டிருந்த முரளி, வந்திருந்த கர்ப்பிணிப் பெண்ணுக்கான ஆலோசனைகளை சொல்லிக்கொண்டிருந்தான். விடைபெற எழுந்த அந்தப்பெண் இருபத்து மூன்று வயதுடைய சின்னப் பெண்ணாக இருந்தாள். அவளது அம்மாவின் சுகவீனத்தை வேறு பல வைத்தியர்களிடமும் காட்டி அது குணமாகவில்லை. முரளியின் கைராசியாலோ என்னவோ அந்த அம்மையார் இப்போது ஆரோக்கியமாக வாழ்கிறார். அதனால் அந்தப்பெண் முரளியைக் கையெடுத்து கும்பிட்டுவிட்டு பிறக்கப்போகும் தன் பிள்ளைக்கு முரளி என்ற பெயரையே சூட்டுவதாக மகிழ்ச்சியுடன் கூறினாள். முரளியின் இதழோரத்தில் சிறுபுன்னகை தவழ்ந்தது.

இன்னும் பலர் அவ்வாறு வந்து மருந்தெடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அதன் பின்னர் வந்த நோயாளியை பார்த்த மாத்திரத்தில் முரளி தன்னையறியாமலேயே அனிச்சையாக எழுந்திருந்தான். நிலைமையை சமாளித்தவனாக தனது காற்சட்டைப் பைக்குள் இருந்து தனது கைத்தொலைப்பேசியை எடுத்து மேசை மீது வைத்துவிட்டு அமர்ந்தான்.

அந்த முதிய பெண்மணி முரளியை சாந்தமாக பார்த்து புன்முறுவல் பூத்துக்கொண்டிருந்தாள். அவளுடன் ஒரு யுவதியும் வந்திருந்தாள். அந்த வயோதிபப் பெண் அவனைப் பார்த்து சிரித்தது இதுதான் முதல் தடவை. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. முரளியால் நம்பவே முடியவில்லை. அவனும் சிரித்துவைத்தான்.

ஆம்! அவள் தான் முரளிக்கு கணக்குப்பாடம் கற்பித்த சித்ரா டீச்சர். அவளுடன் வந்திருந்த அந்த யுவதி, முரளியுடன் படித்த சித்ரா டீச்சரின் மகள். சற்று நேரம் கடந்த பின்பு அவனுக்கு விடயம் விளங்கிவிட்டது. அதாவது அவர்களிருவரும் முரளியை அடையாளம் காணவில்லை. ஆனால் சித்ரா டீச்சரின் கண்களில் பிரகாசித்த அந்த ஒளி அவனுக்கு புதிதாக இருந்தது.

அடுத்த நாள் அந்திப்பொழுதில் முரளி தன்வீட்டு மொட்டை மாடியில் நின்றிருந்தான். அந்த ரம்மியமான இயற்கைச் சூழல் அவன் மனதை ஆசுவாசப்படுத்தியது.

சிறுவயதிலும்கூட அவன் தன்வீட்டின் மேற்குப்புறத்தில் அமைந்திருக்கும் ஓடையில் விளையாடிவிட்டு வருவான். ஈரப் புற்களினூடு வளைந்து நெளியும் அட்டைகள் அவனது இரத்தத்தை உறிஞ்சினாலும் அவனுக்கு அது விளங்காது. தூறல்விழும் சில அந்திப்பொழுதுகளில் அவ்வாறு ஓடையில் நனைந்துவிட்டு இரவு முழுவதும் சளியால் அவதிப்படுவான்.

இந்த அந்திப்பொழுதில் முகில் கூட்டங்கள் ஒன்று திரண்டுவந்து சூரியனை விழுங்குவது போல் இருந்தன. அதற்கு பயப்பட்டதாலோ என்னவோ மலையடிவாரத்தினூடாக செக்கச்செவேல் நிறத்திலிருந்த சூரியன் மெதுமெதுவாக மறைந்துகொண்டிருந்தான். அங்கே டக்டக் என்ற உறுமலுடன் மலைகளை ஊடறுத்து ஓடும் புகைவண்டி, பெயருக்கேற்றாற்போல கரிய புகையை உமிழ்ந்துகொண்டு சென்றது. இவையெல்லாவற்றையும் ரசித்தவாறே சித்ரா டீச்சரின் இந்த மாற்றம் பற்றியும் அசைபோட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான் முரளி.

இன்னொரு நாள் பாதையோரமாக சித்ரா டீச்சர் சென்றுகொண்டிருந்த போது முரளி தனது காரின் வேகத்தைக் குறைத்து அவரை அதில் ஏறச்சொன்னான். முதலில் மறுத்தாலும் அவனது கரிசனையான வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு சித்ராவும் ஏறிக்கொண்டார். அவன் சித்ரா டீச்சரின் வீட்டருகில் விட்டுவிட்டு விடைபெற்றுச்சென்றான்.

சித்ரா டீச்சர் முரளி பற்றி உயர் அபிப்பிராயம் கொண்டிருந்தார். தன் மகளின் தரத்துக்கு முரளி போன்றதொரு ஆண்மகன் மிகவும் பொருத்தமானவன் என கணிப்பிட்டிருந்தார். முரளியின் வயது, உத்தியோகம், படிப்பு, வசதி பற்றி விலாவாரியாகத் தெரிந்த சித்ரா டீச்சருக்கு முரளியின் குடும்பப்பின்னணி பற்றி தெரிந்திருக்கவில்லை.

தோட்டக்காட்டான் என்று தன்னால் அடைமொழி சொல்லி அழைக்கப்பட்ட மாணவனே முரளி என்று அவர் அறிந்திருக்கவில்லை. ஏனெனில் முரளி சாதாரண தரம் கற்றுக்கொண்டிருந்த போது அவர் வேறு பிரதேசத்துக்கு இடமாற்றம் பெற்றுப் போயிருந்தார். தற்போது ஓய்வு பெற்று சொந்த ஊருக்கு திரும்பி வந்திருக்கிறார். முரளியின் கைராசி பற்றியும் ஊரார் சொல்ல அறிந்தாள். அவன் தனது மகளுக்கு மிகவும் பொருத்தமானவனாக இருப்பான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எப்படி இந்த திருமண விடயத்தைப்பற்றி கதைப்பது என்று யோசித்துக்கொண்டிருந்தார் சித்ரா டீச்சர்.

திடீரென்று அவர் மனதில் ஆனந்த ரேகைகள் தோன்றி மறைந்தன. ஏனெனில் அன்று முரளியின் டிஸ்பன்சரிக்கு சென்றிருந்தபோது

அவன் தன்னையும், தனது மகளையும் பார்த்து லேசாக சிரித்தது ஞாபகத்துக்கு வந்தது. தாயின் முன்னால் மகளுடன் சிரிப்பதெவ்வாறு என்று முரளி சங்கடப்பட்டிருப்பான் என்றும், அன்று பாதையோரத்தில் தன்னைக் கண்டபோது காரில் ஏற்றி வந்ததையும் எண்ணி தனக்குள் வீணான மனக்கோட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்தார் சித்ரா டீச்சர். ஆனால் அவன் மரியாதை நிமித்தம் அவ்வாறெல்லாம் செய்தான் என்று அவருக்குத் தெரியாது.

சில வாரங்கள் கழித்து திருமணப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக பண்டாரவளையிலுள்ள முரளியின் வீடு நோக்கி பயணமானார் சித்ரா டீச்சர். முரளி டொக்டரின் வீடு எது என்று சிலரிடம் விசாரித்த போது அனைவரும் கூறிய விடை 'வலது பக்கமாக திரும்பும்போது தென்படும் மூன்றுமாடி வீடு' என்பது.

முரளியின் வீட்டை அடைந்த சித்ராவுக்கு மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. அங்கே ஒரு காரும், பக்கத்தில் இரண்டு வேன்களும் இருந்தன. சற்றுத்தள்ளி அழகிய பூந்தோட்டம் விசாலமாக அமைந்திருந்தது. அதில் பூத்திருந்த சிவப்பு ரோசாக்கள் சித்ரா டீச்சரை வரவேற்பது போன்று தலையாட்டிக்கொண்டிருந்தன.

எல்லாவற்றையும் ரசித்தவாறே வீட்டினுள் காலடி எடுத்து வைத்த சித்ரா ஆச்சரியமாக சுற்றுமுற்றும் பார்த்தாள். மாபிள் பதித்த அழகிய வீடு. சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டார். அவ்வீட்டின் திரைச்சீலை யாவும் சுவரில் பூசப்பட்ட இளம் பச்சை நிறத்திலே அழகாக இருந்தன. தான் உட்கார்ந்திருந்த சோபாவின் இருக்கைகளை தடவிப்பார்த்தார். அவை உயர் ரக தளபாடங்கள் என்பதில் சந்தேகமிருக்கவில்லை.

'அம்மாவை அழைத்துக்கொண்டு வருகிறேன் சற்று உட்கார்ந்திருங்கள் மெடம்' என்று கூறி வேலைக்காரன் உள்ளே சென்றான்.

ஓரிரு நிமிடங்கள் கழிந்து வந்த அந்தப் பெண்ணைப் பார்த்ததும் சித்ரா டீச்சருக்கு அவளை ஞாபகம் வந்தது. முத்தாயி சேலையை இழுத்துப் பிடித்து போர்த்தியவாறு பக்குவமாக வந்துகொண்டிருந்தாள். 'இவ இங்கதான் வேல செய்றாளா?' என்று இளக்காரமாக எண்ணிக்கொண்டிருந்தபோது வீட்டு வேலைக்காரன் சித்ராவிடம்

'இவங்க தான் முரளி ஐயாவோட அம்மா' என்று கூறிவிட்டுப்போனான். முத்தாயி முரளியின் ஆசிரியையான சித்ராவை அடையாளம் கண்டு அன்புடன் வரவேற்றாள்.

சித்ராவுக்கு ஆணி அறைந்ததுபோல் இருந்தது. ஓ.. இவளின் மகன் முரளியா அந்த டொக்டர்? அப்படியென்றால்.. தோட்டக்காட்டான் என்று சதாவும் நான் திட்டிய அந்தப் பையனா இவன்? இன்று ஊர் போற்ற வாழ்ந்து வரும் இவனையா நான் அன்று மாடு மேய்க்கப் போகச் சொன்னேன்? சித்ரா டீச்சரின் இதயம் ஓராயிரம் முறை உடைந்து சுக்குநூறாகியது.

முத்தாயியிடம் என்ன பேசுவது? எப்படிப் பேசுவது என்று எண்ணிக்கொண்டு பேச வந்த விடயம் தவிர்த்து பொதுவாகப் பேசினார் சித்ரா டீச்சர். இறுதியில் விடைபெறப் போகும் போது முத்தாயி சித்ராவிடம்,

‘டீச்சர். நீங்க நம்ம வீட்டுக்கு வந்தது ரொம்ப சந்தோஷமுங்க. முரளியிருந்தால் இன்னும் சந்தோசப்பட்டிருப்பான். நானும் மவனும் உங்க வீட்டுக்கு வரத்தான் நெனச்சிருந்தோம். ஏன்னு தெரியுங்களா? என்ட ரெண்டாவது பொண்ணுக்கு வாற கிழமை கலியாணம்ங்க. அதுக்கு பத்திரிகை குடுக்கத்தான்’

‘அப்படியா? ரொம்ப சந்தோசம். மாப்புள என்னா பண்றாரு?’

‘பேங்குல வேல பாக்குறாருங்க. அது மட்டுமில்லே. அதே மணமேடையில முரளிக்கும் கல்யாணம் நடக்குமுங்க. கட்டாயம் நீங்க வந்து அவங்களை ஆசீர்வதிக்கனும்...’

முத்தாயி இன்னும் என்னென்னவோ சொல்லிக்கொண்டிருந்தாள். ஆனால் சித்ரா டீச்சரின் காதுகளில் வேறு எதுவுமே விழவில்லை!!!

# 07 வரம்

கால்களை நீட்டி சோபாவில் சாய்ந்திருந்தார் சுபா டீச்சர். அவரது சிந்தனைகள் யாவும் பத்து வருஷம் பின்னோக்கியதாய் இருந்தது. அவர் ஆசிரியர் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றும் பத்து வருஷங்களாகின்றன. தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் தவித்தார். இந்த தவிப்பிற்குக் காரணம் வைஷ்னவி. அவள் படிப்பில் கெட்டிக்காரி. அவளது பரீட்சைப் புள்ளிகள் பல தடவை சுபாவை குளிர்வித்திருக்கின்றன. வைஷியை உதாரணம் காட்டி எத்தனை பிள்ளைகளை ஊக்குவித்திருப்பார் சுபா டீச்சர்?

சுபா டீச்சர் வங்கிக்குச் சென்றிருந்தார். கியூவில் வருமாறு இருந்த அறிவித்தல் எரிச்சலைத் தந்தது. அதன் பிரதிபலிப்பாக அங்குமிங்கும் பார்த்தவருக்கு அந்த ஜன்னலினூடாக அங்கிருந்த வைஷி தென்பட்டாள். முதலில் யாரென்று அனுமானிக்க முடியாமல் குழம்பினாலும் தீவிரமாக யோசித்ததில் ஆசிரிய மூளை சட்டென்று இனம் கண்டு கொண்டது. சந்தோஷப்பட முடியவில்லை. ஏனெனில் பாடசாலைப் பருவத்தில் துருதுரு என்று இருந்த வைஷி தற்போது களையே இல்லாமல் கறுத்து சிறுத்து இருந்தாள். அதையும் விட பல்கலைக்கழகம் போக வேண்டும் என்ற அவளது சதா பிரார்த்திப்பு?

'என்ன டீச்சர். பெல் அடிச்சி பத்து நிமிஷம் ஆயிட்டுது' - வகுப்புத் தலைவியாயில்லாத போதும் வைஷி வந்து கூப்பிட்டாள். பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவராயிருந்த சுபா டீச்சருக்கு அளவில்லா ஆனந்தம்.

'படிப்பில் எத்தனை ஆர்வம் இந்தப் பிள்ளைக்கு? கட்டாயம் நல்ல நிலைக்கு வருவா'

மனப்பூர்வமாக ஆசிர்வதித்தார் டீச்சர். ஆசிரியர்களின் பிரார்த்தனை தட்டுப்படுவதில்லையே? இப்போதும் கூட நல்ல ஸ்தானத்திலிருந்து கடமை புரிகிறாள். எனினும் சுபா டீச்சருக்குத்தான் திருப்திப்பட்டுக் கொள்ள முடியவில்லை.

அவர் அப்படி கியூவில் நின்ற போது வைஷியும் அவரைக் கண்டிருக்க வேண்டும். பியூன் வந்து உள்ளே வருமாறு கூற சுபா ஆச்சரியமடைந்து பின் நிதானித்து உள்ளே சென்றார். அவரைக் கண்டதும் வைஷி எழுந்து நிற்க

'பண்பாடு மாறாத பிள்ளை. இப்போதும் என்ன கண்டு எழுந்து நிண்டிட்டுது' - வாழ்த்தினார் டீச்சர்.

அவர் வந்த காரணத்தைக் கேட்டு உடனே செய்து கொடுத்ததுடன் அவரது முகவரியையும் வாங்கி தனக்கு லீவு கிடைக்கும் போது வந்து போவதாகவும் கூறினாள். நன்றியுடன் விடைபெற்று வந்த டீச்சரை குறை கூறியவர்களாக கியூவில் இருந்தவர்கள் முணுமுணுத்தார்கள்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு வைஷி, சுபா வீட்டுக்கு வந்தாள். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு சுபாவின் வாழ்க்கை, கணவன், பிள்ளைகள் பற்றி வினவினாள். எதிர்பாராத இக்கேள்வியினால் திக்குமுக்காடிப் போனார் சுபா டீச்சர். அவரது முகமாற்றம் வைஷியின் மனதை என்னவோ செய்தது. செய்யக்கூடாத பெரிய தப்பை செய்து விட்டதாக கருதி தடுமாறினாள். அதை உணர்ந்த சுபா

'அவர்கள் யாரும் எனக்கில்லைம்மா' என்றார்.

இந்த ஒற்றை பதிலில் அதிர்ந்த வைஷி

'ஏன் எல்லோரும் எங்கே? வெளியூரிலா அல்லது நாடிருந்த நிலையில் யுத்தத்துக்கு இரையாகி...'

இதைக் கேட்க நினைத்தாலும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். சற்று நேரத்தின் பின் வைஷி பற்றி ஆராய்ந்த போது அவள் பாதாளம் நோக்கிப் போவதை உணர்ந்து கொண்டார் டீச்சர். அது பாதாளமா? பூபாளமா? யாருக்குத் தெரியும்?

'நீ இன்னமும் அவனைக் காதலிக்கிறியா?'

'இ.. இல்லை டீச்சர்' - உண்மையாகவே பொய்யைச் சொன்னாள் வைஷி.

ராகுலின் அப்பா வைஷியின் ஏழ்மை காரணமாகவே அவளை எதிர்ப்பதாக அறிந்த போது கோபம் தலை உச்சியில் ஏறியது சுபா டீச்சருக்கு. ராகுலின் அப்பாவுடன் தான் பேசுவதாக வைஷியை தைரியப்படுத்தினார்.

வைஷியின் காதலாவது வாழட்டுமே?

சுபாவின் காதல்தான் பட்டமரமாய் போயிற்று. அதை வைஷியிடம் வெளிப்படையாக கூற முடியுமா? குரு சிஷ்ய உறவுக்கு பாதிப்பு என்பதை விட சுபாவுக்கு ஒரு மகளிருந்தால் ஏறக்குறைய வைஷியின் வயது இருந்திருக்கும். அப்படியென்றால் மகளிடமே தன் காதல் தோல்வியை கூறுவது போல் ஆகிவிடாதா? அது அநாகரிகம் அல்லவா? வைஷி நாவலொன்றை பார்த்திருக்க, சுபா டீச்சர் இளமைக்கால நினைவுகளை மீட்டிக்கொண்டிருந்தார்.

**********

'சுபா என்னைப் பாரேன் ப்ளீஸ்'

'.....................'

'சொல்றத புரிஞ்சிக்க. உன்ன கலியாணம் செஞ்சா சீதனம் தர மாட்டியள் என்டு அப்பா சொல்றவர். மலேசியாவில் இருக்கும் அப்பாவின் நண்பரின் மகளை யோசிக்கினம். அதனால..'

'அதனால...'

அவர் குனிந்த தலை நிமிரவில்லை. அவரைப் பிடித்து உலுக்கிக் கேட்டதில் இனி அவர் தனக்கு சொந்தமில்லை என்பதை சுபா புரிந்து கொண்டாள். இறைவா! கனவில் அவருடன் வாழ்ந்து, பிள்ளைக் குட்டிகள் பெற்று.. ஒரே வார்த்தையில் வாழ்க்கையைச் சீரழித்துவிட்டாரே? காதலிக்கும் போது பெற்றோரைக் கேட்கிறார்களா? குதிரைக்கு பசித்தால் வைக்கோலையும் திண்ணும் என்பது எவ்வளவு நிதர்சனம். எந்த கஷ்ட நஷ்டம் வந்தாலும் பசித்தாலும் புல் திண்ணாத புலி போல் மனம் மாறமாட்டார் என்றல்லவா சுபா ஆழமாக நம்பியிருந்தாள்? அதே நிலைதானா வைஷ்ணவிக்கும்?

**********

சத்தியமாக வைஷி நாவலை படித்துக் கொண்டிருக்கவில்லை. அவளது கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது. பாவம் அவளின் ஏழை பெற்றோர். வறுமை காரணமாக ராகுலின் அப்பாவிடம் பேசவே தயங்கினார்கள். டீச்சர் ராகுலின் வீட்டாரிடம் சென்று தனக்காக பரிந்து பேசுவதை வைஷி விரும்பவில்லை. அழகு, குணம், மார்க்கம் இருந்து என்ன பயன்? பணத்துக்கு முன் அவை எல்லாமே மண்டியிட்டு காணாமல் போகின்றனவே? அவற்றைக் கண்டு வைஷியினதோ, ராகுலினதோ காதல் நெஞ்சங்கள் மசியவில்லை. அவனும் தன்

அப்பாவுடன் வாக்குவாதப்பட்டுக் கொண்டுதான் இருந்தான். அவர்கள் தம் காதல் கைகூடாவிட்டால் தற்கொலை செய்து கொள்ளவும் தயங்கமாட்டார்களோ? அப்படியென்றால் இத்தனை வருடங்களாக வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை விட்டுவிட்டு ஓடுமளவுக்கு வலிமையைத் தந்தது எது? காதல் புனிதமானதா? தீய சக்தியா? உண்மையாக காதலிக்கும் அனைவரும் முகம் கொடுக்கும் பிரச்சனைகளுக்கு வைஷியும் முகம் கொடுத்திருந்தாள்.

**********

சுபா டீச்சர் கதவைத் தட்டினார். இருபததேழு வயது மதிக்கத்தக்க ஒரு அழகான வாலிபன் கதவைத் திறந்து பார்த்து புருவத்தை சுருக்கினான். அவனைப் பார்த்த டீச்சருக்கு முள்ளுக்குத்தியது போல் இருந்தது. இவனை எங்கேயோ பார்த்திருக்கிறோமே?

அப்போது 'ராகுல் ஹு இஸ் தெயார்?' (ராகுல் யாரங்கே?) என்று கம்பீரமாக ஒலித்த குரல் டீச்சரை தடுமாறச் செய்தது. அந்த உருவம் அவர்களை நெருங்க நெருங்க டீச்சரின் மனமும் மூளையும் ஒருமித்தே விளித்துக்கொண்டன.

அடக்கடவுளே! பால் வாங்க பாம்பிடமா வந்திருக்கிறேன்? சுடர்விட்டு எரிந்த டீச்சரின் நம்பிக்கைத்தீ ராகுலின் தந்தையைப் பார்த்ததும் அணைந்தே போயிற்று. இருக்காதா பின்னே? அவன் அப்பன் ராகுலையும் மாற்றிவிட்டால்? இதோ இந்த ராகுலை எங்கும் பார்க்கவில்லை. இதோ இவரில்தான். மனசு ஓலமிட்டு அலறியது. அவரும் டீச்சரை அடையாளம் கண்டு கொள்ளாதிருப்பாரா? வந்த வேகம் குறைந்து பணிந்துபோய் இல்லையில்லை கூனிக்குறுகிப்போய் நின்றிருந்தார்.

ராகுலுக்கு சுபா டீச்சரைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால்

'டாடி இவங்களைத் தெரியுமா' என்றான்.

'இல்.. ஓம்.. இல்லை..' தடுமாறினார் ராகுலின் தந்தை.

'தெரியாதுப்பா. ஆனா உன்னப்பத்தி பேசத்தான் வந்திருக்கேன்' என்றார் ராகுலிடம் டீச்சர்.

நாக்கு மேலண்ணத்தில் ஒட்ட கதிரையில் சாய்ந்து மௌனம் காத்தார் ஐங்கரன்.

ஐங்கரன்! சுபாவின் காதலர், இன்னொரு முறையில் சொன்னால் இப்போது ராகுலின் அப்பா.

எதை எப்படி சொல்வது என தவித்து, பின் நிதானித்து வைஷியைப் பற்றி கூறி முடித்தபோது ராகுல் மொத்தமாய் உடைந்திருந்தான். சுபா தன் மகளுக்கு ராகுலைக் கேட்டு வந்திருக்கிறாளா என்று நினைத்தாரோ என்னவோ 'செய்திடலாம்' என்றார் ஐங்கரன்.

அப்பாடா. வந்த காரியம் இனிமையாக முடிந்ததே. கண்மூடி இறைவனுக்கு நன்றி கூறினார் டீச்சர்.

திருமணத்தன்று..

'அம்மா! இவங்க தான் எங்கள் விஞ்ஞான பாட டீச்சர்' என்று வைஷி தன் ஏழைத் தாயிடம் கூறிக் கொள்ள அவள் சுபா டீச்சரைப் பார்த்து கைகூப்பினாள். அவளது விழிகளில் எத்தனை நன்றிப் பெருக்கும், சந்தோஷமும்.

இக்காட்சியைக் கண்ட ஐங்கரனுக்கு கண்ணைக்கட்டி நடுக்காட்டில் விட்டது போல் இருந்தது.

'இவள்.. இவள் சுபாவின் மகளில்லையா? ஐயோ வைஷி தன் மகள் என்று சுபா என்னிடம் கூறவில்லைதானே? நான் எப்படி கற்பனை பண்ணி... சுபாவைக் கண்டதும் ஏற்பட்ட தடுமாற்றத்தில் கல்யாணத்துக்கு சம்மதித்து விட்டேனா?' - தவித்த ஐங்கரன் சுபாவை அழைத்து விபரம் கேட்டார்.

'உங்களைத் தவிர வேறொருத்தன என்னால் கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியல்லீங்க. நான் இன்னமும் கல்யாணமே பண்ணிக்கல. வைஷி என் பொண்ணுன்னு உங்ககிட்ட சொன்னேனா? இல்லையே. நல்ல குணமான மருமகப் பொண்ணு கிடைச்சிருக்கா. பயம் வேணாம். ராகுலை சந்தோஷமா வச்சிக்குவா. ஐயோ கெட்டிமேளம் சொல்றாங்க. வாங்க போகலாம்'

சுபா நகர அப்படியே சுவரில் சாய்ந்துவிட்டார் ஐங்கரன்.

அங்கே வைஷியின் கழுத்தில் தாலி கட்டிக் கொண்டிருந்தான் ராகுல்!!!

# 08 உறவுகள்

நளீம் தலையைக் கவிழ்த்துக்கொண்டு யோசித்தவாறு இருந்தான். அக்பர் சாச்சாவின் நிலைமையை எண்ணி அவனுக்குள் இனம்புரியாத ஒரு வலி இருந்தது. தன் தந்தையின் பேராசை காரணமாக சகோதரன் என்று கூட யோசிக்காமல் அக்பர் சாச்சாவின் குடும்பத்தாரை இந்தப் பெரிய வீட்டைவிட்டு வாப்பா துரத்தியது அவனுக்கு இன்னும் நினைவிருக்கிறது. அது மட்டுமாயிருந்தால் பரவாயில்லையே. இப்போது இருக்கும் சிறிய நிலப்பரப்பையும் தனக்கு சொந்தமாக்கிக் கொள்வதற்காக வேலிச் சண்டையை ஆரம்பித்திருக்கும் வாப்பா மீது கோபமும் ஆத்திரமும் ஏற்பட்டது.

ஆனால் அந்த காணித்துண்டை மகான் போல விட்டுக்கொடுத்தது நளீமின் வாப்பாவல்ல. அது அக்பர் சாச்சாவின் மனைவியின் சொத்து. அதிலாவது நிம்மதியாக இருக்கவிடாமல் சதாவும் அவர்களை நச்சரிப்பதும், இன்று காலை அவன் எதிர்பாராத விதமாக கண்ட காட்சியும் நளீமுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

பாவம் அக்பர் சாச்சா. மிகவும் நல்லவர். இரண்டு பெண் பிள்ளைகளுக்கும், ஒரு ஆண் பிள்ளைக்கும் தகப்பனான அவர் அந்த பெண் பிள்ளைகள் இருவரையும் திருமணம் செய்து கொடுப்பதற்காகவும், பாடசாலை செல்லும் தனது கடைசி மகனின் செலவுக்குமாக மிகவும் பாடுபட்டு உழைத்துக் கொண்டிருப்பவர். இன்றைய காலத்தில் விலைபோகும் சில மணமகன்களுக்கு ஆதனம் சீதனம் என்று கொடுக்க வேண்டுமல்லவா?

'அல்லாஹ்வே அவரின் நிலைமையை இலகுவாக்க நீதான் அருள் புரிய வேண்டும்' என்று மனதுக்குள் இறைஞ்சிக் கொண்டான் நளீம்.

**********

நளீமின் வாப்பாவான உஸ்மான் ஹாஜி ஊருக்கு செலவழிப்பதாக காட்டிக்கொள்பவர். பெரிய பள்ளிக்கு கொழும்பிலிருந்து ஜமாத் வந்தால் பெருமைக்காக சாப்பாடு கொடுப்பார். ஆனால் ஏழைகள் யாராவது கேட்டுப்போனால் அவர், அவர்களை விட ஏழையாகி விடுவார். இந்த மாதிரி குணமுடைய உஸ்மான் ஹாஜி பலமுறை ஹஜ்ஜுக்கும், உம்ராவுக்கும் போய் வந்தவர். ஆனால் அந்தப் பயணமானது தன் வியாபார விடயங்களை முக்கியப்படுத்திக்

கொண்டுதான் தீர்மானிக்கப்படும். இப்போதைக்கே டவுனில் ஐந்து கடைகளுக்கு சொந்தக்காரர். காசு, சொத்து என்று அவருக்கு அல்லாஹ் நிறைய அபிவிருத்தி செய்திருக்கிறான். ஆனால் இல்லாதவர்களுக்கு தர்மம் செய்யும் மனப்பான்மை அவருக்கு பிறவியிலிருந்தே இல்லாத பழக்கமாக இருந்தது. பேர் புகழுக்காக அள்ளிக்கொடுப்பவர். உண்மையான ஏழைகளுக்கு கிள்ளியும் கொடுக்கமாட்டார். அதாவது 'நான் எனக்கு எனது' என்ற தன்னிலைக் கொள்கையுடடையவர் உஸ்மான ஹாஜி.

அவர் தனது பிள்ளைகளுக்கு எந்தவித குறையும் வைத்ததில்லை. உம்மா இல்லாத குறையை நிவர்த்தி செய்து வைக்குமுகமாக அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

தற்போது கூட தனது மூன்றாவது மகளுக்கு திருமணம் செய்து கொடுக்கும் யோசனையில் இருக்கும் அவர் தனது வியாபார விடயங்களில் இன்னும் மும்முரமாக இருக்கிறார். ஏனெனில் தன் இரண்டு மருமகன்மாரை விட இப்போது வரப்போகும் மருமகனுக்கு அதிகமாக சீதனம் கொடுக்க வேண்டும். இவ்வாறான திருமணங்களை தன் சகோதரிகளுக்கு செய்து கொடுப்பதில் நளீமுக்கு கொஞ்சமும் விருப்பமில்லை. எனினும் என்ன செய்ய? வாப்பாவைப் போலவே தாங்களும் சொத்து சேர்க்க வேண்டும் என்ற ஆசையில் இருக்கும் சகோதரிகளை என்ன செய்யலாம்?

உம்மா இருந்தாலாவது நல்ல விடயங்களை சொல்லிக் கொடுத்திருப்பார். ஆனால் அல்லாஹ்வின் நாட்டத்தை யாரால் மாற்ற முடியும். உம்மா மௌத்தாகி இன்றைக்கு ஐந்து வருடங்கள் ஆகிவிட்டதே என்று எண்ணி தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொள்வான்.

சீதனமின்றி ஒரு ஏழைப் பிள்ளையை திருமணம் முடிக்க வேண்டும் என்ற நற்குணமுடையவன் நளீம். நளீமின் உம்மா கூட அவ்வாறே ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் வாப்பாவான உஸ்மான் ஹாஜிக்கு அதில் ஒரு துளி கூட இஷ்டமில்லை. தன் பணக்கார நண்பர் ஒருவரின் மகளுக்கே கொழுத்த சீதனத்துடன் நளீமை திருமணம் செய்து கொடுப்பது என்ற வைராக்கியத்தில் அவர் இருந்தார்.

நளீம் சில பொழுதுகளில் சாச்சாவின் வீட்டுக்குப் போவதுண்டு. அந்த சந்தர்ப்பங்களில் சாச்சா மிகவும் பயந்து போய்விடுவார்.

தன் நானாவின் குணமறிந்தபடியால் நளீமுக்கு ஏதும் ஏசி விடுவாரோ என்று யோசித்துக்கொண்டிருப்பார். ஆனால் அவர்கள் அனைவரும் நளீமின் வருகையால் மிகவும் சந்தோஷப்படுவார்கள்.

தன்னையும் சொந்தமகன் போல அவர்கள் எண்ணுவது நளீமுக்கு மனதுக்கு குளிர்ச்சியாக இருக்கும். அவனும் அங்கு போகின்ற சந்தர்ப்பங்களின் அவர்களின் வீட்டுக்குத் தேவையான மளிகைச் சாமான்களை கொண்டு செல்வான். பாடசாலைபோகும் சாச்சாவின் சின்ன மகனுக்கும், சகோதரிகளுக்கும் தன்னால் முடிந்தளவு தொகை காசு கொடுத்துவிட்டு வருவான். ஒரு சகோதரனாக அனைத்தையும் தானே செய்ய வேண்டும் என்று ஆசை கொண்டவன் நளீம் என்பது அவர்களுக்கும் தெரியும். வஞ்சகமில்லாத அவனை நினைத்து அவனின் சுகவாழ்வுக்காய் சதாவும் அவர்கள் பிரார்த்திப்பார்கள்.

ஆனால் அவர்களை அடிக்கடி போய் பார்த்துக்கொள்ள முடியாமல் இருந்தான் நளீம். ஏனெனில் தான் அங்கு போவது தன் சகோதரிகள் அறிந்து விட்டால் வாப்பாவிடம் கூறி விடுவார்கள். இனி அந்த நாள் முழுவதும் வாப்பாவின் 'போதனை' தொடர்ந்த வண்ணமிருக்கும். நல்லெண்ணம் கொள்ளும்போது என் வாப்பா ஏன் இப்படி முட்டுக் கட்டையாக இருக்கிறார் என்று கவலை வரும். அதை விட தன்னைப் புரிந்து கொள்ளாமல் நடக்கும் தன் சகோதரிகள் மீதும் கவலையாக இருக்கும். எனினும் தன் சகோதரிகளுக்கும் வாப்பாவுக்கும் அல்லாஹ் நேர்வழி காட்ட வேண்டும் என்று ஐவேளையும் தொழும்போது பிரார்த்தித்துக் கொள்வான் நளீம்.

**********

இன்று ஒரு விடயமாக வங்கிக்கு சென்றிருந்தான் நளீம். அவன் வந்ததை அறியாத அக்பர் சாச்சா வங்கி முகாமையாளரிடம் பேசுவது இவனுக்கு தெளிவாக விளங்கியது.

'சேர். நாங்கள் இப்போது இருக்கும் வீட்டை வித்திட்டு வேறு ஊரு பக்கமா போக முடிவெடுத்தீக்கிறோம். அதோடு கூட்டாளியின் மகனொருவன் மூத்த மகள நிக்காஹ் செய்ய விரும்பியிருக்கிறான். சீதனம் அது இது என்று ஒன்றும் கேக்கல்ல. என்ட கொமரு புள்ளயளோடு இதுக்குள்ள இருந்துக்கிட்டு நானாவோட வாக்குவாதப்படுறதும் சரில்ல தானே? அதுகளுக்கும் ஒரு வாழ்க்கைய அமைச்சிக் கொடுத்தமெண்டா அதுக்குப் பொறவு அல்லாஹ்ட காவலா நாம இருந்திடுவோம் தொரே'

'ஓகே. மிஸ்டர் அக்பர். நான் உங்களுக்கு என்ன செய்யணும்?'

'சேர் எனக்கு ஒரு இலட்சம் ரூபாய் கடனாக வேணும். எப்படியாவது நான் அதை சம்பாரித்து தந்திடுவேன். தயவு பண்ணுங்க சேர்!'

'ஓம் மிஸ்டர் அக்பர். அதற்கான வசதியை செய்திடலாம். ஆனால் வங்கிக்கென்று சில சட்டதிட்டங்கள் இருக்கு. ஆகக்குறைந்தது நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆதனமொன்றின் உறுதிப் பத்திரத்தை நீங்க வங்கிக்கு சமர்ப்பிக்கணும். அப்படி செஞ்சிட்டீங்க என்டால் அந்த டொக்கியூமன்ட பார்த்திட்டு கடன் வசதிய செஞ்சி தரலாம்'

'என்னா சேர்! அந்தளவு சல்லி ஈக்கியதென்டால் நான் எதுக்கு இங்க வருவன்? முடிஞ்ச வரைக்கும் பாருங்க. ப்ளீஸ்'

'இதோ பாருங்க. வங்கி என்பது தனிநபரோட விருப்பத்துக்கு செயல்படுற நிறுவனமில்ல. முடிஞ்சா சொன்னத செய்ங்க. இல்லன்னா ஐ அம் வெரி ஸொரி'

'சேர் ப்ளீஸ்...'

'நோ நோ. யூ கென் கோ'

**********

இந்த சம்பவம்தான் நெருஞ்சி முள்ளாய் நளீமின் மனதை குடைந்து கொண்டிருந்தது. ச்சீ! நம்மிடம் இவ்வளவு வசதியிருந்தும் குறிப்பிட்டதொரு தொகையை கொடுக்க முடியாமல் இருக்கே. 'கரண்ட் எக்கவுண்ட்' இருப்பதால் காசு எடுப்பதற்காக காசோலையில் வாப்பாவும் ஒப்பமிட வேண்டுமே. இது நடக்கிற காரியமா? நான் மட்டும் தான் காசோலையில் ஒப்பமிட வேண்டும் என்றால் ஒரு பிரச்சனையுமில்லையே. எப்படி இதை சாத்தியப்படுத்தலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தான்.

கொடுக்க வேண்டும் என்று உண்மையான மனசிருந்தும் நளீமுக்கு கொடுக்க முடியாத நிலை. எந்த கணக்கு வழக்கு என்றாலும் 'கரண்ட் எக்கவுண்ட்' இருக்கும் காரணத்தினால் வாப்பாவுடன் கலந்தாலோசிக்காமல் அவனுக்கு முடிவெடுக்க முடியாது. அவன் தன் நண்பர்களிடமாவது கேட்டுப் பார்க்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது நளீமின் கைத்தொலைபேசி அலறியது.

'ஹலோ. சொல்லுங்க தாத்தா'

'தம்பி எங்கயிருக்கீங்க? சீக்கிரம் வாங்க. ஹொஸ்பிட்டலால கோல் வந்திச்சி. வாப்பா எக்ஸிடன்ட்பட்டு இருக்காங்களாம்'

'என்ன தாத்தா. என்ன சொல்றீங்க? இதோ வந்துடுறேன்' என்றவனாக பதற்றத்துடன் பாதையில் வேகமாக நடந்து கொண்டிருந்த போது சாச்சா எதிரில் தலைப்பட்டார்.

'என்ன ராஜா. முகமெல்லாம் ஒரு மாதிரி கிடக்கு. சாப்பிட்டீங்களா? என்ன மவன் கண் கலங்கியிருக்கு. வாப்பா ஏதாச்சும் ஏசிட்டாங்களா?' என்று அன்பொழுக விசாரித்தார்.

'இல்ல சாச்சா. வாப்பா எக்ஸிடன்ட் ஆகிட்டாராம். தாத்தா இப்போ தான் கோல் பண்ணினாங்க. சாச்சா எனக்கு பயமாயிருக்கு'

'யோசிக்க வேணாம் அல்லாஹ் இருக்கான் மகன். வாங்க உடனே வீட்டுக்கு போவம்'

இருவரும் அவசர அவசரமாக நடந்து நளீமின் வீட்டை அடைந்தார்கள். வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க சாச்சா தயங்கியபடி இருந்தார். அதையெல்லாம் கவனிக்க நளீமுக்கு நேரமிருக்கவில்லை. வீட்டார்கள் அனைவரும் ஹொஸ்பிட்டலுக்கு சென்றிருப்பதாக பக்கத்துவீட்டு ஆதம் காக்கா சொன்னார். உடனே இருவரும் ஹொஸ்பிட்டலுக்கு விரைந்தார்கள். நளீமின் முகத்தில் முத்துமுத்தாக வியர்வை படிந்திருந்தது. அவனது உதடுகள் அல்லாஹ்விடம் எதையோ மன்றாடிக் கேட்டுக்கொண்டே இருந்தன.

அங்கு ஹொஸ்பிட்டலில் சேலை நுனியால் வாயை பொத்தியவாறு அழுது கொண்டிருந்தார் தாத்தா. மற்ற தாத்தா இருவரும் மச்சான்மாரும் உடனே அங்கு வந்திருந்தார்கள். அது நளீமுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. டாக்டரிடம் சென்று விசாரித்த போது வாப்பாவுக்கு நிறைய இரத்தம் வீணாகியிருப்பதால் இரண்டு பைந்து இரத்தம் ஏற்ற வேண்டும் என்று சொன்னார்.

மச்சான்மாரும் தமக்கு தெரிந்த நண்பர்களிடம் விசாரித்தும் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று கூறினார்கள். நளீமுக்கு தூக்கிவாரிப் போட்டது. அவன் யோசித்துக் கொண்டிருந்தான். இதையெல்லாம் ஒரு ஓரத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்த அக்பர் சாச்சா நளீமிடம்,

'மவன். கொஞ்சம் வாங்களன். இதோ பாருங்க மவன். நான் அதிகம் படிச்சவனில்ல. ரத்தம் ஏத்தணும் என்டா ஏதோ ஏ குருப், பீ குருப் என்று இருக்காமே. எனக்கு அதெல்லாம் தெரியாது வாப்பா. என்ட ரத்தம் பொருந்துதா என்டு டொக்டர பாக்கச் சொல்லுங்க. சரி என்றால் ஒன்டுக்கும் யோசிக்க வேணாம் மவன்'

நளீமுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. புரிந்து கொள்ள அவகாசமுமில்லை. டாக்டரை அணுகி விசயத்தை சொன்னான். உடனே அதற்கான ஏற்பாட்டை செய்யுமாறு டாக்டர் நர்ஸ் இடம் ஏவினார். இரத்தம் பரிசோதிக்கப்பட்டது. டாக்டரின் முகத்தில் சந்தோஷத்தின் சாயல்கள்.

'மிஸ்டர் நளீம். யு ஆர் லக்கி. இரத்தம் பொருந்திடுச்சி. மிஸ்டர் அக்பரை அழைத்து வாங்க'

அனைவருக்கும் ஆச்சரியமும் சந்தோசமுமாக இருந்தது. இரத்தம் ஏற்றி சுமார் நான்கு மணிநேரத்தில் உஸ்மான் ஹாஜியார் கண் விழித்தார். அவர் நா தழுதழுக்க டாக்டரை நோக்கி நன்றி சொல்ல முனைந்தார்

'இல்ல ஹாஜியார். அல்லாஹ்ட காவலா நீங்க இப்போ இப்படியிருக்கக் காரணம் ஒரு ஏழை மனிதர் தான். உங்கள் மகன் இவரை அழைத்து வராவிட்டால் என்ன நடந்திருக்கும் என்று சொல்லவே கஷ்டமா இருக்கு. இறைவனின் நாட்டத்தால் அவரின் இரத்தம் உங்களுக்கு பொருந்திருச்சி' என்று அக்பரை காட்டினார் டாக்டர். கண்ணீர் ததும்பிய கண்களினூடே தன் தம்பி அக்பர் தயங்கியவராக அங்கிருப்பதை கண்டதும் ஹாஜியாருக்கு நெஞ்சு வெடித்து விடும்போல இருந்தது.

தான் அக்பருக்கு எவ்வளவு அநியாயம் செய்திருக்கிறேன். இந்த ஏழை மனிதர் 'எங்கள் அக்பர் சாச்சா' என்று பிள்ளைகள் டாக்டரிடம் சொல்லாத அளவுக்கு நான் அக்பரை எவ்வளவு தூரம் ஒதுக்கி வைத்திருக்கிறேன். கொமரு காரியத்துக்கு அவன் கஷ்டப்படுறது பார்த்தும் என்ட பணத்திமிரால அவமதிச்சிட்டேனே. யா அல்லாஹ்! அதற்கான சரியான தண்டனையத் தந்திட்டாய். அக்பர்ட ரத்தத்தை என்னில ஏத்தவச்சி அவனுடைய நல்ல புத்திய எனக்கும் தந்திட்டாய். இனியாவது நான் மனுசனா வாழுற பாக்கியத்தை தந்தருள்வாயாக! என்று எண்ணியவாறு தன் சகோதரனை அழைத்தார். அக்பர் உஸ்மான் ஹாஜியாரின் அருகில் வந்து தலைகுனிந்து நின்றபோது

உஸ்மான் ஹாஜி அவரை அழைத்து தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்.

அந்த அணைப்பில் அவர் ஆயிரம் சந்தோசம் கண்டார். இருவரும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்கள். தம்பி.. தம்பி என்று உஸ்மான் ஹாஜி அழுகையூடே உச்சரித்தார். அதைக்கேட்ட டாக்டரும் முதலில் அதிசயித்து, பின் விடயத்தை நிதானித்தவராக அறையை விட்டு மகிழ்வுடன் வெளியேறினார்.

விடயம் கேள்விப்பட்டு அக்பர் சாச்சாவின் மனைவி பிள்ளைகளும் அங்கு வந்திருந்தார்கள். அந்த நேரத்தில் சகோதரர்கள் இருவரும் இப்படி அன்பாயிருப்பது கண்டு மிகவும் சந்தோஷப்பட்டனர்.

நளீமின் சகோதரிகளும் சாச்சாவின் குடும்பத்தாரிடம் மன்னிப்பு கேட்டு அவர்களுடன் ஒன்றித்தார்கள். தங்கள் குடும்பம் ஒன்று சேர்வதற்காய் தூய மனம் கொண்டு நளீம் செய்த பிரார்த்தனைகளை அந்த வல்ல அல்லாஹ் நிறைவேற்றிவிட்டான்!!!

# 09 சிதைவு

சாருமதி தலையில் அடித்து அழுது கொண்டாள். தன் வாழ்க்கை தன்னாலேயே இப்படி போகும் என்று அவள் நினைக்கவில்லை. உண்மையில் அவள் இப்படி அலறி அழுவதற்கான காரணம் தன் வாழ்க்கை தடம் மாறிப்போனதா? அல்லது அதோ அங்கே பைத்தியம் தெளிந்தும் தலைவிரி கோலமாய் நின்று தனக்குத்தானே ஏதோ சொல்லிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருக்கிறாளே தங்கை புவனா, அவளைப் பார்த்தா?

எப்படியோ தன் பிடிவாதத்தால தான் எல்லாமே நடந்தது என்று எண்ணம் வரும்போதெல்லாம் உடம்பெல்லாம் கொதிக்கும் எண்ணெய் கொட்டியது போல உணர்வாள்.

தாயிருந்தும் தனியாக வளர்ந்தவர்கள் தாம் இருவரும். தந்தையின் மறைவுக்குப் பின் சாரு தாயாயிருந்து தங்கையைப் பார்த்தாள். அப்போது மிஞ்சிப் போனால் அவளுக்கு இருபத்து மூன்று வயது கூட இருக்காது. படிப்பையும் வேலையையும் ஒரே நேரத்தில் கவனித்து ஒருவாறு சமாளித்து வந்தாள்.

அவளும் பெண் தானே? வாழ்க்கையைப்பற்றி அவளுக்கும் கனவுகள் இருக்கவே செய்தது. தனது தகுதிக்கேற்ற ஒருவன் கிடைக்கும் வரை காத்திருந்தாள். எல்லோரும் வீடு ரொக்கமாகப் பணம் கேட்டு பெண் பார்த்தார்களே தவிர அவளது உள்ளத்தை பார்க்க யாரும் இருக்கவில்லை.

ஆம்! வந்தான் நரேன். அவளது கனவு கற்பனை எல்லாவற்றிற்கும் உயிரூட்டுவது போலவே அவனிருந்தான். சாருவின் மனசை போட்டு பிழிந்து அவளது சந்தோஷங்களை உறிஞ்சிக் கொண்டிருந்தான். உறக்கம் வராத இரவுகளை புதிதாக தந்து கொண்டிருந்தான். ஆனால் தப்பியும் அவள் தன் உணர்வுகளை அவனுக்கு காட்டிக் கொள்ளவில்லை.

அவனுக்குள்ளும் ஷீலா என்றொருத்தி நான்கு வருடங்களாக வாழ்ந்துகொண்டிருந்தாள். அந்த ஷீலாவை அவனால் இன்னமும் மறக்க முடியவில்லை. அவனையே தன் மூச்சு என்றவள் அவன் வாசமே தன் வாழ்க்கை என்றவள் காலத்தின் கட்டாயங்களுக்கு கட்டுப்பட்டு இன்னொருவனை மணமுடித்துக்கொண்டு போனாள். சில

ஆண்களைப் போல் அல்லாமல் அவளது வாழ்வு சிறப்பாய் அமைய இறைவனை வேண்டினான் அவன். மறக்க வேண்டும் என்று நினைத்தவைகள் யாவும் ஏனோ மீண்டும் மீண்டும் வந்து அவனை தொல்லைப்படுத்தின. அவற்றையெல்லாம் துரத்தியடிக்க முடியாமல் திணறிய அவன் குடி, சிகரட் போன்ற பழக்கங்கள் இல்லாததால் தன் மனசில் புயலடித்தவைகளுக்கு எழுத்துருவம் கொடுக்கத் தொடங்கினான். கவிதை எழுதத்தொடங்கினான்.

அந்த கவிதை சாருவையும் நரேனையும் நண்பர்களாக்கின. தன்னையும் மீறி, தன் கட்டுப்பாடு இழப்பதை அவளாலும் தடை செய்து கொள்ள முடியவில்லை. ஆகவே உள்ளுக்குள் வைத்திருந்த ஆசைகள் பார்வைகளாய் வெளிப்பட்டன. சூடு கண்ட ஆணல்லவா? புரிந்தாலும் அவன் சும்மாயிருந்தான்.

எத்தனை முறை அவன் விலகிப் போனாலும் சாருவின் மனது அவனையே விரும்பியது. எப்போதாவது அவனுடன் தொலைபேசியில் உரையாடியவளுக்கு எப்போதுமே அவனுடன் பேசிக்கொண்டிருக்க வேண்டும் போல் இருந்தது. இறுதியில் காதல் தீ பற்றிக்கொண்டது.

'நரேன் என்ன ஏமாத்திட மாட்டிங்களே?'

அவர்கள் சந்திக்கும் போதெல்லாம் அவள் மறக்காமல் கேட்கும் கேள்வி இது. ஏற்கனவே ஷீலாவின் மூலம் ஏமாற்றத்தின் வலி கண்டிருந்தவன் தன்னால் அந்த வலி யாருக்கும் ஏற்படக் கூடாது என்பதில் உறுதியாயிருந்தான். இப்படியிருக்க சாபம் போல வந்து வாய்த்தான் சாருமதியின் நண்பன் சுதன்.

சுதனின் சிரிப்புகளுக்கிடையே ஊர்ந்து திரியும் பொய்மையை சாரு விளங்காததுபற்றி நரேனுக்கு பெரும் ஆச்சரியம். அட்டைக்கு மெத்தை எப்போதுமே பிடிப்பதில்லையே? அப்படியிருக்க இப்படிப்பட்ட ஒருவன் சாருவின் பார்வைக்கு கூட தகுதியில்லாதபோது அவனை எப்படி இவளால் நண்பனாக ஏற்க முடியும் என எண்ணி குழம்பியிருக்கிறான்.

சுதனின் நடவடிக்கை பற்றி நரேன் கூறுகையில், தன் ஐந்து வருட நட்பு என்று கதையை ஓரங்கட்டி விடுவாள். மிஞ்சி ஏதாவது பேசினால் சுதனின் நட்புக்கு பிறகுதான் உன் காதல் என்பாள். அன்புக்கும் காதலுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் புரியாதபடிக்கு நரேன் வேண்டப்படாதவன் ஆகிவிட்டான்.

'நட்பு படலை வரைக்கும்' என்ற முதுமொழி மாறி, வீடு வரைக்கும் சாரு சுதனை அனுமதித்திருந்தாள். நரேன் கூட இதுவரை அவள் வீட்டுக்குப் போனதில்லை. இரண்டு பெண்பிள்ளைகள் இருக்கும் இடத்துக்கு ஒரு ஆண் செல்வது சமூகத்தில் தமக்கிருக்கும் மரியாதையை குறைக்கும் என்பது படிப்பறிவுள்ள அவனுக்கு விளங்கியது. சில இரவுகளில் கோல் பண்ணுகையில் சுதனும் இருப்பதாக சாரு கூறுவாள். இரவு பத்தரை மணி வரை சுதன் என்ன செய்கிறான் என்று நரேனால் கேட்க முடியவில்லை.

சந்தேகம் சந்தோஷத்தை தின்றுவிடும் என்பதால் சும்மாயிருந்தான். காலம் யாருக்காகவும் காத்திருக்காதே. காதலில் விழுந்து ஆறு மாதங்கள் கடந்த நிலையில் நரேனின் தொலைபேசிக்கு மிரட்டல் அழைப்புகள் வரத் தொடங்கிற்று. சாருவை விட்டு விலகும்படி அந்த மிரட்டல் அமைந்திருந்தது. தான் காதலிப்பவளைப் பற்றி ஒருவன் இப்படி கூறினால் எந்த ஆணுக்குத்தான் கோபம் வராது? என்றாலும் நரேன் பொறுத்தான். ஏனெனில் திக்கித்திணறி பேசும் இவன் சுதன் தான் என்பது புரிய நரேனுக்கு வெகுகாலம் செல்லவில்லை.

ஒரு நாள் அலுவலகம்விட்டு வந்து கொண்டிருந்த நரேன் அந்தக் காட்சியைக் கண்டு இரத்தம் உறைந்து போனான். சாருவின் தங்கை புவனா சுதனுடன் சல்லாபித்துக் கொண்டிருந்தாள். எதேச்சையாக திரும்பியவர்கள் இவனைக் கண்டு திக்குமுக்காடிப் போனார்கள். சுதனின் இந்த நாடகம் சாருவுக்குத் தெரியவில்லை. அவளைப் பொறுத்தளவில் தங்கையும் நண்பனும் தங்கங்கள்.

நரேன் அப்போதைக்கு எதுவும் பேசாதது மாத்திரமன்றி இது பற்றி சாருவிடமும் சொல்லவில்லை. சாருவிடம் சொல்லாமல் விடுவதுதான் பிற்காலத்தில் தனக்கு எமனாய் அமையும் என்று எண்ணவில்லை. வாழ்க்கை துணைவனாக வரப் போகும் நரேனை விட வழித்துணையாய் வரும் சுதன் பெரிதாக தோன்றினானா சாருவுக்கு? நரேன் புவனா மேல் மையல் கொண்டவன் என்பது போல் மாயையை தோற்றுவித்தான் சுதன். எதுவுமே தெரியாமல் தன்னையே சுதனிடம் இழக்குமளவுக்கு புவனா சுதனை காதலித்துத் தீர்த்தாள்.

விதி விளையாடிற்று. ஒரு நாள் பாதையோரத்தில் நஞ்சருந்தி மயங்கி விழுந்து கிடந்த புவனாவை நரேன் தூக்கி வரவும், எதிர்பாரா விதமாக அவ்வழியால் சாரு வரவும் சரியாயிருந்தது. சாருவிடம் சுதன் கூறியிருந்த பொய் அக்கணத்தில் வேதவாக்காய் மாறியது. புவனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டாள். அவளது கர்ப்பத்துக்கு

காரணம் நான்தான் என சாருவின் முன்னலேயே ஒப்புக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் நரேன் இருந்தான். காதலில் விரிசல் விழ, நரேனும் சாருவும் சந்தோஷித்த காலம் எல்லாம் கண் முன்வந்து ஏளனமாய் சிரித்தன.

மாதங்கள் இரண்டு கடந்த நிலையில் தங்கை குணமானாள். கண் விழித்தவுடனேயே நரேனைக் கேட்டாள். சாருவுக்கு கோபம் தலைக்கேற பச்சையாகவே திட்டினாள். நரேனை துரோகி என்றாள். நயவஞ்சகன் என்றாள். விஷயமறிந்து துடிதுடித்தாள் புவனா.

உண்மையில் தன் கர்ப்பத்துக்கு காரணம் நரேனல்ல. அந்த ராஸ்கல் சுதன் என்றும், எல்லாம் முடிந்த பின் தன்னிடமே சாருவை காதலிப்பதாய் கூறி அவன் தம்மை ஏமாற்றிவிட்டதையும் கூறினாள். புவனா மூலம் இவற்றைக் கேட்ட போது சாருவுக்கு உறைத்தது. ஒரு முறையேனும் சுதன் வைத்தியசாலை வந்து பார்க்காததும் ஞாபகம் வந்து தொலைத்தது.

எல்லாம் முடிந்து போயிற்று. கள்ளுக்கும் பாலுக்குமிடையே உள்ள வித்தியாசம் நன்றாகவே புரிந்தது சாருவுக்கு. இனி எத்தனைக்கும் நரேன் தனக்கில்லை என்று எண்ணியபோது நெஞ்சுக்குள் கடுமையாய் வலித்தது. சுவாசிக்க மறந்து தகிக்கும் அவளால் அப்போதைக்கு ஆழ்ந்த பெருமூச்சொன்றை மட்டுமே வெளியிட முடியுமாயிருந்தது!!!

# 10 வேதனை

மரணங்கள் சொல்லிக் கொண்டு யாரிடமும் வருவதில்லை. அதே போல சிலரின் மரணம் எம் வாழ்வின் அந்தம் வரை வந்து இதயத்தில் நோவெடுக்கச் செய்யும். எனக்கும் அவ்வாறானதொரு நோவு நெடுகாலமாய் இருக்கிறது. இனியும் இருக்கும்.

ஆம்! என் உம்மம்மாவும், தாத்தாவும் (தந்தையின் தந்தை) இன்று என்னுடன், என்னருகில் இல்லை என்பதை என்னால் ஜீரணிக்க கஷ்டமாக இருக்கிறது. காரணம் நான் என் உம்மம்மா மீதும், தாத்தா மீதும் அதிக பாசம் வைத்திருந்தேன் என்பதே. என்னை தொடர்ந்து கொண்டிருக்கும் அவர்களது விம்பம் இன்னும் என் கண்களிலிருந்து மறையவில்லை. என் இறுதி மூச்சு இருக்கும் வரை அது அழிந்து போகக் கூடியதுமில்லை.

என் சிறு பராயம் தொட்டு தாத்தா எங்கள் வீட்டில் இருந்ததாய் ஞாபகம். எப்பொழுதாவதுதான் மாமிமார் வீட்டுக்கும், சாச்சா (வாப்பாவின் தம்பி) வீட்டுக்கும் போவார். ஆனால் இரண்டு நாட்களில் திரும்பிவிடுவார். நான் முதலாம் தரத்தில் படித்துக்கொண்டிருந்த போதெல்லாம் 12 மணிக்கே பாடசாலைவிட்டு வந்துவிடுவேன். எங்கள் வாப்பா கடையில் வியாபார சம்பந்தமான விடயங்களை கவனித்துக் கொண்டிருப்பதாலும், உம்மா ஆசிரியையாக இருப்பதால் பாடசாலைவிட்டு வரும் போது மணி இரண்டைத் தாண்டிவிடும் என்பதாலும் அப்போதெல்லாம் தாத்தாதான் என் நண்பராக இருப்பார்.

என்னுடைய தங்கையும் அப்போது குழந்தையாக இருந்த காரணத்தால் என்னுடைய தனிமையைப் போக்குவதற்கு தாத்தா உதவி செய்வார். அவரது மடியில் உட்கார்ந்து கொண்டு எங்கள் கடையில் பொருட்களை வாங்க வருவோரையும், போவோரையும் பார்த்துக்கொண்டிருப்பேன்.

அப்போது எங்கள் கடையின் வாடிக்கையாளர்களான சிலர் என்னுடன் சிங்களத்தில் பேசுவார்கள். முதலில் எதுவுமே புரிவதில்லை. எங்கள் பாடசாலையில்கூட ஆறாம் தரத்திலிருந்தே சிங்களப் பாடம் படிப்பிக்கப்பட்டது. அப்படியிருக்க முதலாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்த எனக்கு சிங்களம் எப்படித்தெரியும்? தாத்தாதான் விடை கூற பழக்கித்தந்தார்.

தாத்தா எப்போதும் ஒருவகை கருப்பு நிற கோட் அணிவதுண்டு. அத்துடன் வெள்ளைநிற தொப்பியும் தூங்கும் போதன்றி அவர் கழற்றி நான் பார்த்ததில்லை. அந்த கோட் பையினுள் சதாவும் ஏதாவதொரு இனிப்புப்பண்டம் காணப்படும். தாத்தாவுக்கு பச்சை அரிசிச் சோற்றுடன் பொரித்த கருவாடு, பருப்பு, ரசம் சாப்பிடுவதென்றால் ரொம்பவும் பிடிக்கும். எனக்கும் பிசைந்து ஊட்டிவிடும் போது என் உம்மா ஊட்டி விடுவதை விடவும் நல்ல ருசியாக இருக்கும்.

அவரிடம் இன்னொரு பழக்கமும் இருந்தது. அதாவது வெள்ளையரிசிச் சோற்றுடன் பால், சீனி, வாழைப்பழம் ஆகியவற்றை பிசைந்து சாப்பிடுவார். அந்த பழக்கம் இப்போதும் எனக்கிருக்கிறது. என் நண்பர்கள் நான் இப்படி சாப்பிடுவதைக்கண்டு ஆச்சரியப்படுவார்கள். சிலநேரம் முகத்தையும் சுளித்துக் கொள்வார்கள். அதிருக்கட்டும்.

அவர் கிணற்றுக்கு குளிக்கப்போகும் ஒவ்வொரு முறையும் என்னையும் அழைத்துச் சென்று என்னுடைய செருப்பு உட்பட என் உடைகளையும் கழுவித்தருவார். ஒருநாள் 'நான் மௌத்தாகின காலத்துக்கு இதெல்லாம் நினைவு வருமா?' என்று கேட்டுவிட்டு மௌனமாக இருந்தார். எனக்கு கடும் கஷ்டமாக இருந்தது.

வாடிய என் முகத்தைப் பார்த்துவிட்டு 'இல்லம்மா. என்னை ஞாபகம் வரும் போது யாஸீன் சூரா ஓதிக்கொள்' என்றார் (யாஸீன் சூரா என்பது அல்குர்ஆனின் ஒரு அத்தியாயம்) நான் எதுவுமே பேசவில்லை. காரணம் அவர் மௌத்தாகும் விடயமொன்றை என்னால் கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியவில்லை.

இப்படியாக இருந்த போது என் தம்பியும் பிறந்தான். தம்பி மீது தாத்தாவுக்கு அலாதிப்பிரியம். அவனையும் தூக்கிக்கொண்டு புகையிரத வீதி வழியாக உலாத்திவிட்டு வருவோம்.

எங்கள் ஊரில் புகையிரத வீதி பக்கம் போவது தான் விசேஷமாக இருக்கும். காரணம் மலையகத்தின் எழில் கொஞ்சும் பசுமையான காட்சிகளைக் கண்டு களிக்கலாம். அத்துடன் நோன்புக் காலங்களில் பகல் மூன்று மணியைத் தாண்டிவிட்டால் பசி பொறுக்காது. சிறுவர்களாக இருந்தாலும் களவாக எதையும் சாப்பிட மனம் வராது. ஆகவே தாத்தாவுடன் எங்காவது காலாற நடந்து நேரத்தை போக்குவோம் அல்லது கெரம் விளையாடுவோம்.

என்னுடைய குழந்தைப் பருவம் இப்படி கழிந்து கொண்டிருந்தது. அன்று தாத்தா தம்பிக்கு சொல்லிய விடயங்கள் அவரது கடைசி வார்த்தைகளாக இருக்கும் என்று யாருமே நினைக்கவில்லை. அதாவது அவர் மாத்தளைக்கு ஜமாத் (மதப் பிரசாரப்பணி) போவதாகக் கூறி 'உம்மாவுக்கு கரைச்சல் கொடுக்காதே ராஜா. நான் வரும்போது பிள்ளைக்கு பழங்கள் கொண்டு வருகிறேன்' என்று சொல்லி விட்டுச்சென்றவர். திரும்பி வரும்போது எங்கள் எல்லோரையும் அழ வைப்பதாகத்தான் வந்தார்.

மாத்தளையில் அவர் தங்கியிருந்த ஒருநாள் சுபஹ் தொழுகைக்காக எழுந்திருந்த சமயத்தில் திடீரென நெஞ்சு வலி வந்திருக்கிறது. பலர் வைத்தியசாலைக்கு போக அழைத்தும் நெஞ்சைத் தடவியவாறு பேசாமல் படுத்திருக்கிறார். அது நிரந்தர உறக்கமாகிவிட்டது. ஆம். நான் ஐந்தாம் தரத்தில் இருக்கும் போது என் தாத்தா மௌத்தாகிப்போனார்.

**********

உம்மம்மா என் நினைவுகளில் வந்து போகும் போதெல்லாம் என் ஆன்மா மண்டியிட்டு அழுவதுண்டு. தாத்தா எப்படி எங்கள் மீது உயிரையே வைத்திருந்தாரோ உம்மம்மாவும் அப்படியே. எங்கள் வீட்டிற்கு அவ்வப்போது வந்துபோனாலும் வெளிமடையிலுள்ள அவரது சொந்த வீட்டில் வாழத்தான் அவர் அதிக ஆர்வம் காட்டியதுண்டு. மாமி என்பதாலோ ஏன்னவோ என் வாப்பாவுடனும் அதிகம் பேசாத கூச்ச சுபாவமுடையவர்.

உம்மம்மா இருக்கும் போது வெளிமடைக்கு போவதென்றால் கொள்ளை ப்ரியம் எங்களுக்கு. இப்போதுகளில் சாச்சி இருப்பதால் மாத்திரமே அங்கு செல்ல விரும்புவதுண்டு. உம்மம்மா மீது ஆழ்ந்த அன்பைக்கொண்டிருந்த நான் அவரின் கால் நகங்கள் தொடக்கம் வெட்டிவிடுவதுண்டு. அவர் மட்டும் என்ன? எங்கள் மூத்த மாமா கொடுக்கும் பணத்திலிருந்து ஏதேனும் வாங்கிவைத்து எமக்குத்தானே தந்திருக்கிறார்.

தடுமலோ இருமலோ பாட்டி வைத்தியமே சிறந்தது என்பதற்கிணங்க பல பொழுதுகளில் என் நோய்கள் தூர ஓடியிருக்கின்றன. மாதுளம் பழத்தை அவர் விரும்பி சாப்பிடுவார். எனக்கு கிடைத்ததையும் பல முறை உம்மம்மாவுக்கு கொடுத்து அவர் முகத்தில் சந்தோஷம் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். இப்போது மாதுளம்பழத்தை நான்

விரும்புவதில்லை. என் உம்மம்மா மௌத்தானவுடனேயே அந்த ஆசையும் தீர்ந்துபோனது.

உம்மம்மா பக்கத்தில் அவரது கம்பளிப்போர்வையை போர்த்தி அவரின் பழைய ஞாபகங்களை கேட்டபடியே படுக்க ரொம்பவும் ஆசை எனக்கு. அந்த போர்வை இப்போது எங்கள் மாமா வீட்டில் இருந்தாலும் உம்மம்மா இல்லாத இப்போதுகளில் அதைப்போர்த்த மனசு அடம் பிடிப்பதேயில்லை.

உம்மம்மாவின் கண்களில் எப்போதும் ஒரு ஏக்கம் குடிகொண்டிருப்பதை நான் அவதானித்திருக்கிறேன். இன்று வரை அதற்கான காரணங்கள் என்ன என்று தெரியவில்லை. என்னுடைய திருமணத்தைப் பார்த்து என் பிள்ளைகளையும் தானே பார்ப்பதாக முன்பு அவர் சொல்லும் போது கூச்சமாகவும் கோபமாகவும் இருக்கும். காரணம் நான் ஏழாம் தரம் படிக்கிற காலமது. ஆனால் இப்போது அவர் எம்முடன் இருக்கும் பாக்கியத்தை நான் இழந்து விட்டேன் என நினைக்கும் போது என் இதயம் சோகமாய் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறது.

தாத்தா எங்களைவிட்டுப் போனது போலவே என் உம்மம்மாவும் என் பதின்மூன்று வயதில் இவ்வுலக வாழ்வை நீத்து விடை பெற்றார்.

அவர்களுக்காக என் துஆக்கள் என்றும் அல்லாஹ்விடம் தூதுரைக்கும். இன்ஷா அல்லாஹ்!!!

# 11 தவிப்பு

'ஏன் இன்னிக்கு இவ்ளோ தாமதம்?' பொய்க் கோபத்துடன் ஷாமிலா கேட்டாள்.

'ஒபிஸ்ல சரியான வேலை நெருக்கடி. அதுதான்' என்று கூறிக் கொண்டே அறைக்குள் நுழைந்தான் பஸால்.

இரு வீட்டாராலும் தம் காதலுக்கு எதிர்ப்பிருந்த போதும், பொறுத்திருந்து பெற்றோரின் சம்மதத்துடனேயே தன் இனிய காதலியைக் கைப்பற்றியவனல்லவா பஸால். இன்றைக்கு மூன்று வருடங்கள் கடந்தும் யாரும் அவர்களை தம்பதியராய் நோக்கமாட்டார்கள். காரணம் இவர்களுக்கிடையே காணப்பட்ட இரக்கமும் நெருக்கமும்தான்.

'என் பஸால் ரொம்ப நல்லவன்' இப்படித்தான் தன் கணவனைப்பற்றி நேற்று வரை பெருமைப்பட்டுக்கொண்டிருந்தாள் ஷாமிலா. ஆனால் இன்று திருஷ்டி பட்டதைப்போல... இறைவனே ஏனிந்த சோகம்? பஸால் அப்படிப்பட்டவன் என்று யார் நினைத்தார்கள்? இல்லை. அவன் அப்படிப்பட்டவனில்லை என்று ஆறுதலடைய அவளால் முடியவில்லையே?

நித்யா!

இந்த மனக்குமுறலுக்கெல்லாம் காரணம் நித்யா என்பவளுக்கு பஸால் எழுதியிருந்த கடிதம் தானே? பீரோவைத் திறக்கையில் வந்து விழுந்த பைலிலிருந்து பஸால் பாதி எழுதிவிட்டு வைத்திருந்த அந்தக்கடிதம் இவளுக்குக் கிடைத்தது. தன் கற்பனையை ஓடவிட்டுப் பொருமினாள். வயிற்றெரிச்சலாயிருந்தது. சாப்பிடப் பிடிக்கவில்லை. குளிக்கவுமில்லை. தன் மணவாழ்வின் இதுவரையும் செய்திராத ஒன்று இன்று அரங்கேறியது. குப்புறப்படுத்து அழுதாள் ஷாமிலா.

பொழுது சாயும் நேரம் மிகவும் களைத்துப்போய் வந்த பஸால், புன்னகையால் தன் களைப்பைப் போக்கும் ஷாமிலா எங்கே என கண்களால் வீடு முழுக்க தடவினான். பளிச்சென அவன் முகம் மிளிர்ந்தது ஏதோ நினைத்தவனாய் உற்சாகத்துடன் படுக்கை அறையை நெருங்க நெருங்கத்தான் பயம் கௌவிக்கொண்டது.

குப்புறப்படுத்து விம்மிக்கொண்டிருந்த ஷாமிலாவின் நெற்றியில் கைவைத்துப் பார்த்து பதறினான். அல்லாஹ்வே.. இப்படி கொதிக்குதே.. என்று கலவரப்பட்டான். பதறிக் கொண்டிருந்தவனை மெல்ல கண்விழித்துப் பார்த்தாள் ஷாமிலா.

'என் மேல்தான் எவ்வளவு அன்பு' என்ற எண்ணம் தோன்றி மறையும் முன்பே 'சீ.. என்னமாய் நடிக்கிறான் ராஸ்கல்' என்று எண்ணியவளாய் அவனது கையை விலக்கிவிட்டு விருட்டென எழுந்து குளியலறைக்குச் சென்றாள். எல்லாமே புதிதாக இருந்தது பஸாலுக்கு. பசியோடு அமர்ந்திருந்தவனுக்கு ஷாமிலாவின் திடீர் மாற்றத்தை ஜீரணிக்க கஷ்டமாக இருந்தது.

தொலைபேசி மணி அடித்தது. சுய நினைவுக்கு வந்த பஸால் ரிஸீவரை காதுக்குக் கொடுத்தான்.

'ஹலோ யாரு நித்தியா.. சொல்லு. ஓகே வர ட்ரை பண்ணுறேன்' பேசிக்கொண்டிருந்தான்.

மீண்டும் நித்தியா? எத்தனை நாளா நடக்குது இந்த நாடகம்? குளித்துக் கொண்டிருந்தவள் குரூரமாய் சபித்தாள். பஸாலுடைய நினைவுகளோ ஷாமிலாவைக் காதலித்த காலங்களை அசைபோட ஆரம்பித்தது.

**********

ஒரு விபத்திலே அவளை முதன் முதலில் சந்தித்தான். செல்போனில் சுவாரசியமாக உன்ரயாடிக்கொண்டு வந்தவள் மஞ்சட்கடவையில் அல்லாமல் பாதையைக் கடக்க முற்பட்டாள். மறுநிமிடம் இமைகளால் விழிகளை மூடிக்கொண்டாள். சொல்லி வைத்தாட் போல பொலீஸ் சூழ்ந்து கொண்டது. பொலீஸ் அதிகாரி இவனை ஜீப்பில் ஏறச் சொன்னார். பெண்கள் தவறு செய்தாலும் ஆண்களின் தலையில் தானே விழுகிறது என்று நினைத்துக் கொண்டவன் தன் விதியை நொந்தவாறு வேறு வழியின்றி ஜீப்பில் ஏறிக்கொண்டான். மூன்று நாட்கள் கழிய இன்னும் இரண்டு மணித்தியாலம் இருந்தது. அப்போது

'உங்கள விட்டாச்சி. நீங்கள் வீட்டுக்குப் போகலாம்' என்று கான்ஸ்டபிள் சிங்களத்தில் கூறினான். வெளியே வந்த போது ஷாமிலா அவனுக்காக காத்திருந்தாள். என்ன நினைத்தானோ அவளிடம் மன்னிப்புக் கேட்டான் பஸால்.

தவறு செய்தவள் அவள். அவனை மன்னிப்பதா?

'இல்ல மிஸ்டர்...' அவனது பெயர் தெரியாமல் அவள் தடுமாறிய போது

'பஸால்' என்று முடித்து வைத்தான்.

'நீங்கதான் என்னை மன்னிக்கணும். தவறு செய்தது நானில்லையா?'

'எப்படியோங்க உங்களால் அவர்களுக்கு செமலாபம்' என்று கூறி சிரித்தான். அந்த சிரிப்பில் அவள் சொக்கிப்போனாள்.

கம்பனியில் புதிதாய் வேலைக்குச் சேர்ந்தவளைப் பற்றியே அனைவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் ரொம்ப அழகாய் இருப்பதாய் கூறினார்கள். பார்ப்போமே என்று அலட்சியமாய் வந்தவனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. ஆகாயத்தில் பறப்பது போல் இருந்தது. புன்னகை ஒன்றை மட்டும் அன்று பகிர்ந்துகொண்டார்கள். தனது உம்மாவுக்கு சுகமில்லை என்று ஷாமிலா வராதிருந்த அன்று அவனுக்கு உலகமே வெறுத்தது போலிந்தது. அதன் பிறகே தான் ஷாமிலாவுக்குரியவன் என்பதை பஸால் தெரிந்துகொண்டான். பின்பு அவர்கள் தத்தமது இதயங்களை பரிமாறியதும் அவள் வீட்டில் தோன்றிய எதிர்ப்பலைகள் பஸாலின் நடத்தை கண்டு ஓய்ந்ததுவும், ஷாமிலாவின் குணம் கண்டு பஸாலின் பெற்றோருக்கு அவளை பிடித்துப் போனதுவும் பழைய ஆனால் இனிய கதை.

**********

குளியலறைக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். அவளோ அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் சென்றாள். எழுந்து சென்று பாதி எழுதி விட்டு வைத்திருந்த 'அந்த' கடிதத்தை எழுதத்தொடங்கினான். எதேச்சையாக வந்தவள் அவன் பின்னாலிருந்து அவன் எழுதுவதை வாசிக்கத் தொடங்கினாள். அதில்

'நித்தி.. ஸொரிடா. உன் ரூமில் வந்து உன்னைப் பார்க்க முடியவில்லை...' இப்படி தொடர்ந்து எழுதி நிறைவு செய்தான்.

அன்றைய இரவு இருவருக்கும் நரகத்துக்கு இட்டுச் சென்ற பாலமாக இருந்தது. எனினும் ஷாமிலாவின் நெஞ்சம் பாறையாய் இறுகியிருந்தது. ஸொரி 'டா' வாமே.. அந்தளவுக்கு நெருக்கமோ...

அழுகை வந்தது. ஆனால் அழவில்லை. துரோகிகளுக்காக அவள் ஏன் அழ வேண்டும்? அத்தோடு விட்டால் கூட பரவாயில்லை. ரூமில் போய் பார்க்க முடியவில்லையாம். நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது. உலகமே ஒன்றிணைந்து தனக்கு சதி செய்வது போல் உணர்ந்தாள்.

சற்று திரும்பியவளின் கண்களுக்கு பஸாலின் புகைப்படம் தென்பட்டது. இந்தச் சிரிப்பில்தானே அவளது கன்னி மனம் பறிபோனது. அவனின் சிரிப்பழகை ரசிக்கவென்றே எத்தனை நகைச்சுவைகளை தேடிச் சொன்னாள்? திடீரென அது ஆள்மயக்கிச் சிரிப்புபோல் தோன்றியது. 'எல்லா ஆண்களுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். அந்த மாதிர பொறுக்கிகளை மரத்தில கட்டி வச்சி சுடணும். பிறகு கழுகு கொத்தணும்...' என்று கணவனால் ஏமாற்றப்பட்ட தன் தூரத்து உறவினர் ஒருத்தி சொல்லியிருந்தாள். அது நடந்து அரை ஆண்டுகள் கழிந்திருக்கும். ஆனால் இப்போது ஷாமிலா சொல்லிப் பார்த்த போதும் பொருந்துகிறதே..!

தன்னை உயிருக்குயிராக காதலித்தவள், மணம் முடித்து இன்று வரை தேனாய் தித்திப்பூட்டியவள் இப்படி சீறுகிறாள் என்றால், தன்னில் ஏதாவது பிழையிருக்குமோ என மூளையைக் கசக்கி யோசித்தான் பஸால். ம்ஹுஂம்.. அப்படி சொல்லுமளவுக்கு எதுவுமில்லை. எதற்காகவாவது சற்று உரத்துப் பேசினாலும் சிரித்துக்கொண்டே கேட்டுவிட்டு பிறகு அதற்குத் தண்டனையாக முத்தம் கேட்பாள். இன்று என்னவாகிற்று? தமக்குள் ஏற்பட்டிருக்கும் இந்த பிரிவு பற்றி ஈரேழு வாரங்களாக அவள் எதுவுமே கூறாததில் குழம்பிப் போனான் பஸால். எங்காவது போய் வந்தால் நன்றாக இருக்கும் போல் இருந்தது. அவளிடம் சொல்லாமலேயே டவுனுக்குச் சென்றான்.

'ஷமி... நீ நடந்துக் கொள்றது கொஞ்சமும் பிடிக்கல' அவன் சொல்லிவிட்டு திரும்பிப் பார்த்த போது அவள் அங்கிருந்தால் தானே? முதன் முதலாக அவள் மேல் கோபம் கோபமாய் வந்தது.

நித்தி!

ஷாமிலா சொல்லிப் பார்த்தாள். எரிச்சலாக இருந்தது. சற்று நேரத்தில் குமட்டிக் கொண்டு வர காரணமறிந்து பூரித்துப் போனாள். ஆனால் அந்த சந்தோஷம் வெகுநேரம் நிலைக்கவில்லை. எல்லாவற்றுக்கும் முடிவு கட்ட எண்ணிக் கொண்டிருந்தவள் இப்போது விக்கிக்கொண்டு அழுதாள். தான் மோசம் போனதாய் தனக்குள்ளே கற்பனை பண்ணி

மனம் சோர்ந்து போனாள். மாலை நேரம் பஸால் தன் நண்பன் ஒருவனுடன் வீட்டுக்கு வந்தான். அவனை இதுவரை ஷாமிலா கண்டதில்லை. அவர்கள் தத்தமது அலுவலக வேலையில் முழ்கிப்போயிருந்தார்கள். வந்தவர்களுக்கு ஒரு கப் டீயாவது கொடுக்காவிட்டால் நல்லாயிருக்காது என்று அவளுக்குத் தெரியும். எனவே நாகரீகம் கருதி தேநீர் தயாரிக்க சமையலறைப் பக்கம் சென்றாள். அவர்கள் பேசுவது அவள் காதுகளுக்கு கேட்டது. இடையில் பஸால் சொன்னான்.

'உன் ரூமுக்கு வர நினைச்சன்டா நித்தி. ஆனால் கொஞ்சம் வேலையா இருந்தது. உன் இனிஷியல் என்னானு சொல்லு. பயோடேட்டாவை டைப் பண்ணிடலாம்'

அதற்கு அந்த மற்றவன் கூறினான்...

'உன் லெட்டர் கிடைச்சதுல சந்தோஷம்டா. நீ வருவன்னு நினச்சன்.. பரவாயில்ல என் முழுப்பெயர் எஸ். ஏ. நித்தியானந்தன்'

'ஓகே மிஸ்டர் நித்தியானந்தன்' என்றான் பஸால்.

ஓ.. 'நித்தியா'னந்தன்!

ஷாமிலாவுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. இவனுக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்துத்தான் அவள் அப்படி குதித்திருக்கிறாள். பஸாலைப்பற்றி தவறாக நினைத்ததை எண்ணி மனசு வலித்தது. எதையும் காட்டிக்கொள்ளாமல் சமாளித்துக்கொண்டு டீயும் வடையும் கொடுத்த போது பஸால் மெதுவாக அவளை ஏறிட்டான். அவனுக்கு எக்ஸ்ட்ராவாக ரொமான்ஸ் புன்னகையும் கொடுத்தாள்.

ஏதோ சொல்ல நினைத்த நித்தி அதைக்கண்டு புரிந்தவனாக சொல்ல வந்ததை சொல்லாமலேயே விடைப்பெற்றுச் சென்றான். வெட்கத்தில் மிரண்டவள் தான் தாய்மை அடைந்த விடயத்தைக் கூறினாள். பிறகு தன்னுடன் சில நாட்களாக கோபம் காட்டியது ஏன் என்று அவன் கேட்டபோது அசடு வழிய காரணத்தைக் கூறினாள். அவனுக்கு சிரிப்பு வந்தது. இப்போதும் அந்தச்சிரிப்பில் கள்ளம் இருக்கவில்லை!!!

# 12 வாக்குறுதிகள்

அன்று காலை பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்த சுந்தருக்கு அந்தப் பேட்டியைப் பார்க்கப் பார்க்க மின்சாரம் தாக்குவது போல் இருந்தது. நீரின் முக்கியத்துவம் பற்றியும், அதன் பயன்பாடு பற்றியும் குறிப்பிட்டு அந்த அதிகாரி பேட்டி கொடுத்திருக்கும் பத்திரிகை அவன் கையைச் சுட்டது. மேடையில் தனது பரிவாளங்கள் சூழ, ஒலிவாங்கி முன் உள்ள மேசையில் தனது ஒரு கையை ஊன்றியவாறு இருக்கும் அவரது புகைப்படங்களைக் கண்டதும் சுந்தருக்கு ஆத்திரம் வந்தது.

தோட்டம் மழையால் பாதிக்கப்பட்டிருந்த பொழுது மாவட்ட அதிகாரிகள் வந்து பார்த்தார்கள். மின்சார வசதி, குடிநீர் வசதி எல்லாம் செய்து தருவோம் என்று கூறி லயத்தில் இருந்த சிலரிடம் தோழமையாக பழகுவது போல நடித்து பத்திரிகைக்காக போட்டோவும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். தோட்டத்து மக்கள் யாவரும் அவர்கள் சொன்ன சொல்லை நம்பி தமது சோகம் தீர்க்க வந்த மகான்கள் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள். போலி அறிக்கையை விட்டுச்சென்ற அந்த அதிகாரிகள் அதன் பிறகு அந்தப் பக்கத்துக்கே வரவில்லை.

'எலக்ஷன் காலத்தில் மட்டும் என்னமாய் வந்து நடித்து பந்தம் பிடிப்பான்கள் ராஸ்கல். இப்போ மனுசன் போய் நின்னா கண்ணுக்கு விளங்காது இவனுங்களுக்கு. இன்னொரு முறை தேர்தல் வராமலா போயிடும். அப்போ பாத்துக்கலாம்' சுந்தரின் மனசு குமுறியது.

ஆச்சி மெதுவாக வந்து பத்திரிகையை எட்டிப் பார்த்தாள். சுந்தர் ஏன் கோபமாக இருக்கிறான் என்பது புரிந்தது. எனினும் சமாளித்துக்கொண்டு அவனிடம் பேச்சு கொடுத்தாள்.

'என்ர மவராசா... உன் கோவம் எனக்கு புரியுதுப்பா. ஆனா உன் வாழ்க்க வீணா கழியப்படாது ராசா. இந்தக் கிழவி சாக முன்னால ஒரு கல்யாணம் பண்ணி எனக்கு கொள்ளுப் பேரன பெத்துத் தா அப்பு'

'கொஞ்சம் சும்மா இரு ஆச்சி. எப்பயும் ஒனக்கு இதே பேச்சு தான். திடீர்னு எங்க போயி பொண்ண தேட. அப்பிடித்தான்

தேடினாலும் தண்ணியில்லாத இந்த லயத்துக்குள்ள வந்து எவ நிப்பா?'

சுந்தரின் சூடான வார்த்தைகளைக் கேட்டதும் ஆச்சிக்கு இதயம் கனத்தது. அவன் சொல்வதிலும் பிழையில்லைத்தானே?

இந்த லயத்து மேட்டுல வந்து குடித்தனம் பண்ண எவதான் விருப்பப்படுவா? விருப்பத்தோட வந்த வேதவல்லியும் என் மவன் சண்முகத்துடனேயே சாமிக்கிட்ட போய் சேந்திட்டா. என் தாயி! மருமவ போலயா என்ன பாத்துப்பா? மகள் போல எங்கூட இருந்து ஒத்தாச செய்வாளே...

ஆச்சிக்கு பழைய நினைவுகள் நெஞ்சில் அலைமோதின. அவளது மகன் சண்முகம் இந்த லயத்தின் மேம்பாட்டுக்காக பட்டபாட்டைத்தான் சுந்தரும் படுகிறான் என்று ஆச்சிக்குத் தெரியும். ஆனால் எதை செய்தும் வெற்றி பெறாமல் அற்ப ஆயுளில் இறந்துபோன தன் மகன் சண்முகத்தைப் பற்றியும், மருமகள் வேதவல்லியைப் பற்றியும் நினைத்தபோது அவளது விழியோரம் கண்ணீர் எட்டிப்பார்த்தது.

**********

சுந்தரின் அப்பா சண்முகம் சமூக அக்கறை மிக்கவர். யாருடைய பிரச்சனைகளைக் கேட்டாலும் அதை தீர்த்து வைப்பதற்கு தன்னாலான உதவிகளை வஞ்சகமின்றி செய்பவர். முன்பொருநாள் கூட இந்த லயத்தின் பாதை சீரின்மையால் மக்கள் படுகின்ற பிரச்சனைகளை கிராம சேவகரிடம் கூறி அதற்கான ஆரம்பகட்ட வேலைகளைச் செய்யுமாறு பேசிப் பார்ப்பதற்காகத்தான் கிராம சேவக அலுவலகத்துக்கு சென்றிருந்தார்.

அவர் சென்று பல மணிநேரம் கடந்தும் கிராமசேவகர் வந்து சேரவில்லை. அங்கிருந்த மற்றவர்கள் சண்முகத்தை முறைத்தப் பார்ப்பதும், கேள்வி மேல் கேள்வி கேட்பதாகவும் இருந்தார்கள்.

லயத்தானுக்கு வேற வேலயில்ல. ரோடு பிரச்சன... என்று அவர்களுக்குள் கருத்து பரிமாறப்பட்டதை சண்முகமும் கேட்டுக்கொண்டு தான் இருந்தார். லயத்தான் என்றால் என்ன? அவன் மனிதன் இல்லையா? அவர்களுக்கென்று ஆசாபாசங்கள் இல்லையா? குடும்பம், பிள்ளை என்று அவர்களுக்கும் ஒரு வாழ்க்கை இருக்கிறது தானே? காலம் காலமாக அடிமைப்பட்டு வாழ்வது

எமது சமுதாயத்தின் தலையெழுத்தா? கண்டவன் நிண்டவனிடம் எல்லாம் கைகட்டி வாய்பொத்தி வேலை செய்வதும் காணும் நேரத்தில் எல்லாம் குனிந்து மடிந்து சலாமுங்க என்று சொல்லியும் வாழ்ந்து முடித்த மூதாதையர் மீது சண்முகத்துக்கு கடும் எரிச்சல் வந்தது.

அவர்கள் பழகிய பழக்கம் இன்றும் நடைமுறையில் இருக்க வேண்டுமா? இல்லையே... அப்படி ஒரு சட்டம் எங்கும் எழுதி வைக்கப்படவில்லையே. நாட்டின் அந்நிய செலாவணியைப் பெற்றுத் தருவதில் முக்கிய பங்கு வகிக்கின்ற தோட்டத்து மக்களை மனிதப் பிறவிகளாக எந்தக் காலத்தில் யோசித்திருக்கிறார்கள்? அவர்களது வளமான வாழ்வு பற்றி எவர்தான் அக்கறை காட்டியிருக்கிறார்கள்? வெயிலும், மழையும், பனியும், காற்றும் மட்டுமே அந்தத் தொழிலாளர்களின் சுயம் அறியும். வியர்வை என்றால் ஏசி அறையில் தூங்கும் சுகம், குளிர் வந்தால் பஞ்சு மெத்தையில் படுக்கும் இதம்... இவை எல்லாவற்றையும் வாழ்வில் ஒரு நாளாவது இந்த ஏழை மக்கள் அநுபவித்திருப்பார்களா?

அட்டைக்கடியிலும், பாம்புப் புற்றுகளிலும் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முழங்கால் அளவுக்கு பொலித்தீன் பைகளைக் கட்டிக்கொண்டு முதுகு வலிக்க வலிக்க தேயிலைச் சுமை சுமக்கும் அந்த அப்பாவி ஜீவன்கள் மீது கருணை காட்ட எந்தத் தலைவன் முன்வந்தான்? காலங்காலமாக தேர்தல் காலங்களில் மாத்திரம் இந்தத் தோட்டங்களில் பாதம் வைத்து போலிப்பாசம் காட்டி, இறுதியில் ஏமாற்றும் இந்த வித்தைக்காரர்களைத் தொடர்ந்தும் தலைவர்களாக ஏற்றுக்கொண்டிருப்பது யார் குற்றம்?

உலகம் இன்று எவ்வளவோ முன்னேறிக்கொண்டு வருகிறது. இன்டர்நெட், ஈமெயில் என்றெல்லாம் சொல்கின்றார்கள். தோட்டத்துப் பாடசாலைகளில் இந்தக்கல்வி போதிக்கப்படுகின்றதா? வழமையான பாடங்களே பெரிய பாடசாலைகளில் ஒழுங்காக நடப்பதில்லை. அப்படியிருக்க தோட்டத்து பாடசாலைகளில் கல்வி நிலை பற்றி சொல்ல வேண்டியதில்லை.

காலில் செருப்பில்லாமலும், புத்தகப் பை இல்லாமலும் வருகின்ற அப்பாவி மாணவர்களை நிறுத்தி வைத்து கேள்வி கேட்கவும், பிரம்பினால் தோலுரிக்கவும் தெரிந்த ஆசிரியர் அந்த மாணவனின் வீட்டு நிலவரத்தைப் பற்றி கொஞ்சமாவது தெரிந்து வைத்திருப்பாரா? வேண்டாம். தெரிந்துகொள்ள முயற்சியாவது எடுத்திருப்பாரா? ஐந்தாறு பிள்ளைகளின் சாப்பாட்டுத் தேவையையே பூர்த்தி செய்ய முடியாமல்

திண்டாடும் ஒரு குடும்பத்துக்குள் இருந்து கல்வி கற்பதற்காக புறப்பட்டு வரும் அந்த மாணவனை தட்டிக்கொடுக்க ஒருவருமில்லை. ஆனால் அயன் கலையாத ஆடையுடனும், பொலிஷ் பண்ணப்பட்ட சப்பாத்துடனும் வரும் ஒரு சில மாணவர்களுக்கு ஆசிரியர்கள் என்னே கௌரவம் கொடுக்கிறார்கள்? அப்பப்பா...

'மாத்தியா என்டலு..' (ஐயா வரச்சொல்றார்)

சிந்தை கலைந்த சண்முகம் கிராம சேவகரின் மேசையருகில் வந்து பவ்வியமாக நின்றார். அந்த மேசையின் வலது புறத்தில் பல கோப்புக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இடது புறத்தில் கறை படிந்த தொலைபேசி ஒன்று இருந்தது. ஆதி காலத்து மின்விசிறி ஒன்று தன் இறக்கைகளைப் பரத்தியவாறு லொடக் லொடக் என்ற சத்தத்துடன் சுற்றிக்கொண்டிருந்தது.

ஒரு கிளாசில் தண்ணீர் நிறைத்து அதை பீரிஸ் ஒன்றினால் மூடிவிட்டுச் சென்றான் அலுவலகப் பையன். கிராம சேவகர் மேற்சட்டையில் பட்டன்கள் இரண்டை கழற்றியவாறு காற்று வாங்கிக்கொண்டிருந்தார். அவரது கறுத்த உடம்பிலும், அடர்த்தியான மீசை அருகிலும் கொட்டி விடப்போகிறேன் என்பதுபோல வியர்வை பெருக்கெடுத்திருந்தது. தண்ணீரை குடித்துக்கொண்டு சண்முகத்தை ஏறிட்டு நோக்கினார் அவர்.

'பெயர் என்னாதி?'

'சண்முகம் சேர்'

'உக்காருங். நீங்க எங்கருந்து வாறது?'

சண்முகம் தனது தோட்டத்தின் பெயரைச் சொன்னார்.

சற்று அதிர்ந்த அந்த கிராம சேவகர் சண்முகத்தை நிமிர்ந்து பார்த்தார். ஏனெனில் பல காலங்களாக இந்த பாதை பிரச்சனைப் பற்றி இவருக்கு முன்பிருந்த கிராம சேவகர்களிடமும் தெரிவித்தாகிவிட்டது. எனினும் இன்னமும் அதற்கான ஒரு தீர்வும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதை அறிந்திருப்பார் போலும். தொண்டையை செருமிக்கொண்டு அவரே பேசினார்.

'ரோடு பிரச்சன பற்றியா பேச வந்ததி? அங்கு என்ன புரொப்ளம்?'

'பாதைகளின் சீரின்மை காரணமாக பள்ளத்து வீடுகளில் இருக்கும் மக்களுக்கு பெரும் அசௌகரியமாக இருக்கிறது ஐயா. மழைக் காலங்களில் மண்சரிவு ஏற்பட்டு பல சேதங்கள் ஏற்படுகின்றன. பாதுகாப்புக்காக போடுவதாகச் சொல்லியிருந்த மதில்களையும் இன்னும் செய்து தரவில்லை.

அந்த வேலைகளுக்காக அரசாங்கம் குறிப்பிட்டதொரு பணத்தொகையை ஒதுக்கியிருப்பதாகவும் அறிகிறோம். அந்த பணத்துக்கு என்ன நடந்தது என்றும் தெரியவில்லை ஐயா. பலரிடம் கூறியும் இன்னும் எந்தத் திட்டமும் அமுலுக்கு வரல்லீங்க. நீங்களாவது நமக்கு இந்த உதவிய பண்ணிப்புடுங்க. புள்ளக் குட்டிங்களாட நீங்க கொறயில்லாம வாழணும்..'

'ஓகே. நாங் பாக்குறன். கவலப்படாம போயிட்டு வாங்க'

இந்த சம்பாஷனைக்குப் பிறகு சண்முகம் மிகுந்த சந்தோஷத்துடன் வீட்டுக்கு வந்தார். நடந்த அனைத்தையும் ஊரார்களிடம் கூறி சந்தோஷப்பட்டார். தமக்கு விடிவு காலம் பிறக்கப் போவதாகக் கூறிக்கொண்டு திரிந்தார். அவர் அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்ததைக்கண்டு ஊரே சந்தோஷப்பட்டது.

சண்முகத்துக்கு இவ்வாறான பொது வேலைகள் செய்வதில் அக்கறை அதிகம். தனது குடும்பத்தைப் போலவே அனைவரையும் நேசிப்பார். அவரது மனைவியான வேதவல்லியும் அப்படித்தான். அவரது சுக துக்கங்களிலும், ஆசாபாசங்களிலும் சம பங்கெடுத்துக்கொள்வாள். அவர்களின் இனிமையான இல்லற வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பிக்க வந்து பிறந்தவன்தான் சுந்தர். சுந்தரின் மீது சண்முகத்துக்கு அலாதி பிரியம். எந்நேரமும் அவனைத் தூக்கி அணைத்தும், விளையாட்டு காட்டிக்கொண்டும் இருப்பார்.

பெரும்பாலான அப்பாக்களைப் போல் அல்லாமல் சுந்தரின் கழிவுகளையும் சுத்தப்படுத்தி கிட்டத்தட்ட ஒரு ராஜா போலவே சுந்தரை வளர்த்து வந்தார் சண்முகம். வேதவல்லிக்கும் சுந்தர் மீது பாசம் அதிகம் என்றாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சற்று கண்டிப்புடன் நடந்து கொள்வாள். காரணம் கேட்டால்

'அது வந்துங்க... ரெம்ப பாசமா வளத்துப்புட்டா அப்பறம் பொறுப்பில்லாம போயிருவான் பையன். கொஞ்சம் அடக்கித்தான் வளர்க்கணும். இல்லாட்டி நம்ம தலையிலயே மொளகா அரச்சி புடுவானுங்க...'

வேதவல்லி சொன்ன தத்துவத்தைக் கேட்டு ஆமோதித்து புன்னகைத்தார் சண்முகம். ஆச்சியும் வேதவல்லியின் கருத்துக்களுக்கு செவி சாய்த்தாள்.

கிராம சேவகரிடம் பேசி விட்டு வந்த பிறகும் பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் எந்தப் பிரயோசனமும் நிகழாத காரணத்தால் நிலைமையை விசாரித்து வருவதற்காகத்தான் டவுனுக்கு புறப்பட்டுச் சென்றார் சண்முகம். நாழிகை பல கழிந்தும் அவர் இன்னும் வீட்டுக்கு வந்து சேரவில்லை. பதறிப்போன ஆச்சி பக்கத்து வீட்டு ராமசாமியை அழைத்து விடயத்தைச் சொன்னாள். உடனே அனைவரும் உஷாராகி சண்முகத்தை தேடினார்கள். எங்கு தேடியும் அவரைப் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

இருள் சூழ்ந்துவிட்டது. சண்முகத்தை காணவில்லை. ராமசாமி அடிக்கடி பாதையைப் பார்த்தார். ஆச்சியும், வேதவல்லியும் கையைப் பிசைந்து கொண்டிருந்தார்கள். ராமசாமிக்கும் அவனது மனைவிக்கும் மிகுந்த யோசனையாகவே இருந்தது.

கொஞ்ச நேரத்தில் பாதையின் அந்தப்பக்கத்திலிருந்து ஒரு உருவம் மிக வேகமாக ஓடி வருவது விளங்கியது. ஆச்சிக்கும் விளங்கியிருக்க வேண்டும். கண்களை சுருக்கிக்கொண்டே மிகவும் சிரமப்பட்டு லாம்பு வெளிச்சத்தில் உற்று உற்றுப் பார்த்தாள். ஓடி வந்தது சண்முகம் அல்ல. எனினும் வந்த சிறுவன் சொன்ன தகவல் சண்முகம் பற்றியது.

'ஆச்சி ஒன் மவன் போன பஸ்சு எக்சிடன்ட் ஆயிடுச்சாம். டவுனாஸ்பத்திரியில அவர சேத்திருக்காங்களாம்...'

ஆச்சிக்கும், வேதவல்லிக்கும் எப்படி ஆறுதல் சொல்வதென்று ராமசாமிக்குத் தெரியவில்லை. பட்டப்பகலிலேயே அந்தப் பாதையில் போவது கஷ்டமான காரியம். இந்த இருட்டுக்குள் எப்படிப்போவது? அனைவரும் விடியும் வரை காத்திருந்தார்கள். மணித்தியாலங்கள் ஆமை வேகத்தில் நகர்ந்தன. விடியற்காலையில் அனைவரும் மருத்துவமனைக்குச் சென்றார்கள்.

அங்கே சண்முகம் முனகலோடு படுத்திருந்தார். அவரது தலையில் பெரிய கட்டு போடப்பட்டிருந்தது. அவருக்கருகே அவரது மஞ்சள் நிற சட்டை இருந்தது. அந்த சட்டையில் இரத்தம் பட்டு அந்தி நேர வானம் போல காட்சியளித்தது. அப்பா.. என்றபடி சிறுவன் சுந்தர் அவர் கால்களைப் பிடித்தவன் அதிர்ந்தான். அங்கே அவரது

கால்கள் நீக்கப்பட்டிருந்தன. ஆச்சி தன் பொக்கை வாய் திறந்து ஓவென கதறியழ வேதவல்லி மயக்கம் ஏற்பட்டு விழுந்தாள்.

'யனவா அரபெத்தட்ட. லெடாட கரதர கரன்னெத்துவ...' (நோயாளிக்கு கரைச்சல் கொடுக்காமல் போ அந்தப் பக்கம்) நர்ஸ் திட்டிக் கொண்டிருந்தாள். அந்த நர்ஸ் தன் கைகளில் வெள்ளை நிற கையுரை அணிந்திருந்தாள்.

சண்முகத்தின் தலையில் கட்டப்பட்டிருந்த கட்டை அவிழ்த்தாள். திட்டுத்திட்டாக படிந்திருந்த இரத்தம் அவளது கையுரையிலும் அப்பியது. அருவருப்பாக பார்த்த நர்சின் பார்வை சுந்தரின் இதயத்தில் அனலாயிற்று. பாதைகளின் சீரின்மையால் ஏற்பட்ட இந்த பயங்கரமான விபத்தை எண்ண, அவனுக்கு அதிகாரிகள் மீது வெறுப்பும் கோபமும் ஏற்பட்டது.

சண்முகத்தின் கால்கள் அகற்றப்பட்டிருந்ததால் வேதவல்லி மிகவும் உடைந்து போயிருந்தாள். சில மாதங்கள் அந்த வீடே இழவு வீடு போல் காட்சியளித்தது. நாட்கள் நகர ஒருநாள் காலை பதினொரு மணியளவில் பலத்த பேய் மழை பெய்து கொண்டிருந்தது.

சண்முகத்தின் குடிசை கப்பலாக மாறி மழை நீரில் மிதந்து கொண்டிருந்தது. மழைக்கு முன் விறகு பொறுக்குவதற்காக மலைக்குச் சென்றிருந்த ஆச்சி, முனுசாமியின் வீட்டில் குளிரில் நடுங்கியவாறு மழை விடும் வரை காத்திருந்தாள். பாடசாலைக்கு சென்றிருந்த சுந்தரும் இன்னும் வீடு வந்திருக்கவில்லை.

அப்போது அவர்கள் யாருமே கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியாதவாறு திமுதிமுவென இடம்பெயர்ந்து வந்த மற்குவியல்கள் சண்முகத்தின் குடிசையை கொஞ்சம் கொஞ்சமாக மூடிக்கொண்டிருந்தன. மழை காரணமாக எவரும் வெளியே வந்திருக்கவில்லை என்பதால் இந்த கோரமான காட்சியை யாரும் கவனிக்கவில்லை.

சோவென பெய்த மழை சத்தத்தில் வேதவல்லியின் அபாயக்குரல் யார் காதிலும் விழவில்லை. காலில்லாத கணவனை காப்பாற்ற முடியாமலும், சண்முகத்தை தனியே விட்டுவிட்டு தான் மட்டும் தப்பிச்செல்ல முடியாமலும் வேதவல்லி தவித்தாள். கல்லானாலும் கணவனல்லவா? சந்தோஷமாக வாழ்ந்த அந்தக் குடிசையிலேயே அவளும் சண்முகத்துடன் மூச்சடங்கி சமாதியாகிப் போனாள்.

*********

இந்த மழையின் தாக்குதலால் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக ஓடிக்கொண்டிருந்த சிறிய ஓடைகளும் மூடப்பட்டுவிட்டன. அந்த லயத்தில் வாழ்ந்தவர்களுக்கு குடிநீர் பிரச்சனை தாங்க முடியாததாய் இருந்தது. சண்முகத்தைப் போலவே சுந்தரும் பல அதிகாரிகளை சந்தித்து தண்ணீர் பிரச்சனையைப் பற்றி கூறிவிட்டான். எல்லா விதமான பிரச்சனைகளும் அந்த லயத்தை மாறி மாறி வதைத்துக்கொண்டிருந்தன.

மூன்று நாட்களுக்கு ஒரு தடவை என்ற தவணை முறையில் கடந்த ஆறேழு வருடங்களாக நீர்த்தாங்கிகள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகின்றது. நீர்த்தாங்கிகள் வராமல் இருக்கும் நாட்களில் மக்கள் படும் அவஸ்தையை ஆச்சியாலும் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டு பத்திரிகையில் மட்டும் தண்ணீர் பிரச்சனைக்கான தீர்வு பற்றி பேட்டி கொடுத்துக்கொண்டிருந்த அந்த அதிகாரியைப் பார்த்து ஆச்சியின் வாய் கோபமாக முணுமுணுத்தது.

'கட்டையில போவான்கள்... கள்ள நாயிகள்'!!!

# 13 தொலைந்த கவிதை

நிஸ்தார் நானா கேற்றை திறந்து வெளியே வந்து பார்த்தார். எறும்புக்கூட்டங்களாய் வாகனங்கள் போய்க் கொண்டிருந்தன. இந்த நிமிடத்தில் அவசரமாக பாதையைக் கடக்க வேண்டும் என்றால் உயிரை விட வேண்டியிருக்கும்.

'என்ன யோசிக்கிறீங்க... வாங்க சாப்பிடலாம்'

சொல்லிக் கொண்டு வந்த மனைவியைப் பார்த்து புன்னகைத்தார்.

'புள்ளையள் ரெண்டு பேரும் டியூஷன் போயிட்டாங்களா?'

'ஆமா. சாப்பாடு கொடுத்து அனுப்பிட்டேன். வாங்க நாம சாப்பிடலாம்' என்று கூற அவரும் வீட்டுக்குள் வந்தார்.

அவருக்கு முப்பத்தியிரண்டு வயதிருக்கும். என்றாலும் இருபத்தியாறு வயது போலத் தோற்றம். காது மடலருகே எட்டிப் பார்க்கும் வெள்ளை முடியை பின்புறமாக சீவிவிட்டால் வாலிபன்தான் நிஸ்தார் நானா. மனைவி ரயீஸா மட்டும் என்னவாம்? இரட்டைக் குழந்தைகளின் தாயார் என்றால் யாருமே நம்பமாட்டார்கள்? இயற்கை இவர்களிடம் அதீத பாசம் கொண்டு இளமையை வாரி வழங்கியிருந்தது.

நிஸ்தார் நானா ஆசிரியர் நியமனம் பெற்று எட்டு வருடங்களிருக்கும். அவரது ஆசிரிய வாழ்வில் அடி, தண்டிப்பு, கோபம் என்றெல்லாம் மாணவர்களிடம் வெளிக்காட்டியதேயில்லை. அன்பும் பாசமும்தான் ஒருவனை நல்லவனாக்கும் என்று எப்போதோ அனுபவம் மூலம் அறிந்தவர். உயர்வகுப்பு மாணவர்களுக்கெல்லாம் இவர் தான் நல்ல நண்பர். மனசு விட்டுப்பேசி மாணவர்களின் குறை நிறைகளை அறிந்து உதவுவார். அவர்களுடனிருக்கும் போது தன் இளமை நினைவுகளில் மூழ்கிப்போவார்.

'என்ன சேர் அந்தக்கால யோசினை வந்திட்டா?' குறும்புக்கார மாணவன் கேட்டான்.

'ஓமோம். ரோமியோ ஜுலியட் காலம். போய் திருக்குறள் பாடமாக்கு. நாளைக்கு பரீட்சை'

என ஆதரவாக கூறி அனுப்பினார். அவன் கேட்டதும் சரி தானே? எவ்வளவு வசந்தமான காலங்கள் அவை?

**********

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை. அங்குதானே அவருக்கு மறக்க முடியாத காலம். மேல்வகுப்பு மாணவர்கள் எல்லாம் இவரை பாடச்சொல்லி அதட்டினார்களே?

'பகிடிவதை' பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் இப்படியுமா? பாடசாலைக் காலத்தில் எந்தவித வம்புதும்புக்கும் போகாதவர் இவர்களிடம் மிரண்டு போனார்.

'நானா எனக்கு பாட வராதே'

'என்னடா பாக்குற பாடுன்னு சொல்றேனில்ல..' மீண்டும் அதட்டல்கள்.

'பாடவா ஓஒர் பாஆஆடலை...' குரல் நடுங்கியது நிஸ்தார் நானாவுக்கு.

மேல் வகுப்பு மாணவர்கள் எல்லாம் குடல் வெளியே தெரியுமளவுக்கு சிரித்தார்கள். பாடலை நிறுத்தச் சொல்லி, நிறுத்தியதற்காக பாராட்டினார்கள். பின்பு அவர்கள் அனைவரும் நண்பர்களாகி வாழ்க்கையை அனுபவித்ததெல்லாம் மனசில் பதிந்த இனிய நினைவுகள் அல்லவா?

'டேய் மச்சான் 'சூப்பர் ஃபிகர்டா' வா போய் பார்க்கலாம்'

மேல் வகுப்பு மாணவன் கூப்பிட்டும் பேகாவிட்டால் என்ன நடக்கும் என்று முழு பல்கலைக்கழக வளாகமும் அறியும். குட்டி போட்ட பூனை போல நிஸ்தார் நானாவும் சென்றார். போய் அந்தப் பெண்ணைப் பார்த்தவர்...

*********

பாடசாலை விடுவதற்காக மணி ஒலித்தது. தன் மோட்டார் சைக்கிளின் உதவியுடன் அரை மணி நேரத்துக்கெல்லாம் வீடு வந்து சேர்ந்தார். சாப்பிட்டுவிட்டு வந்தவருக்கு மனைவி நீட்டிய பானத்தில் பார்வை நிலை குத்தியது. அதனூடே மீண்டும் அந்தப் பெண் அவரது புலன்களுடே வந்து சலனமூட்டினாள்.

அப்படித்தான். ஒருநாள் சிற்றுண்டிச்சாலைக்கு நுழைந்து தொண்டைவரை சாப்பிட்டார். அந்த நேரம் பார்த்து ஒரு குரல்..

'அங்கிள் தோடம்பழச்சாறு ஒன்னு ப்ளீஸ்..'

திரும்பியவருக்கு வியப்பு. என்ன அழகான குரல். பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவள் அவரை நோக்கி நெருங்கிக்கொண்டு வந்தாள். பின்னால் வேறு யாராவது இருக்கிறார்களா எனப்பார்த்தார். இல்லை. அவருக்கு மின்னலடித்தது. அவர் கைகளில் தோடம்பழச்சாறை தந்துவிட்டுப் போனாள். அடுத்த நாள் காலை சற்று லேட்டாகி எழுந்தவர் தனக்குத்தானே 'கனவு முழுவதும் கன்னியவள் வருகை' என்றார்.

**********

'கனவு முழுவதும் கன்னியவள் வருகை'

அட கவிதை கூட வருமோ, கண்களை சிமிட்டிய படி ரயீஸா வர, வெலவெலத்துப் போனார் நிஸ்தார் நானா.

'காப்பி பொடி தீர்ந்துடிச்சி. வாங்கிக்கிட்டு, நூலகத்தில புள்ளயள் நிப்பாங்க. அழச்சிக்கிட்டு வந்துடுங்க'

நூலகம்!

அது கூட நெஞ்சிலிருந்து அகலவில்லை. எதை மறக்க நினைக்கிறோமோ அது தான் அடிக்கடி நினைவில் வந்து போகும் என்று எங்கோ வாசித்த வரிகள் அவருக்கு ஞாபகம் வந்தது. எத்தனை முறை அவளிடம் பேசவென்று முயற்சித்திருப்பார். ஒரு பார்வை.. ஒரு புன்னகை.. இதையே பார்த்து எவ்வளவு நாள் சீவிப்பது?

ஆனால் நான்கு மாதங்கள் கழிந்து ஒரு கலைவிழாவின் போதே மனம் திறந்து ஒரு வார்த்தை பேசக்கிடைத்தது. நாளிரா கவிதை சொல்வதற்காக மேடை ஏறியபோது பலத்த கரகோஷம். கவிதையே கவிதை சொல்கிறதா? என்று வியந்தார். அதை சாட்டாக வைத்து பாராட்டினார். அவளும் சிரித்தாள்.

நாளிராவுடனான அவரது பார்வை மற்ற ஆண்களிலிருந்தும் வித்தியாசப்படுவதை உணர்ந்தாள் நாளிரா. அவரது காதல் மனம் அவளுக்கு விளங்கியது.

அதன் பிறகு பயிற்சிக் கலாசாலையிலிருந்து அவர் பாடசாலைக்கு மாறினார். இதன்போது தன் தந்தையின் உத்தரவுக்கிணங்க நாளிரா போவது கட்டாயமானது. சந்திப்புகள் யாவும் பிரிவுகள் ஆனதால் கண்ணீருக்கு கைகளை அணையாக்கிப் பார்த்தார்கள். முடியாமல் போகவே பிரிவு என்பது உண்மை என உணர்ந்தார்கள். அவர்களது எதிர்கால கனவுக் கோட்டையை காற்று அடித்துச்சென்று காணாமலாக்கும் என்று யாராவது நினைத்திருப்பார்களா?

ஊருக்குச் சென்ற நாளிராவின் தொடர்பு திடீரென்று குறைய மலை ஒன்று இடம் பெயர்ந்து தன் நெஞ்சில் இருப்பதை உணர்ந்தார். உண்மையாக காதலித்தவர்களுக்கு காத்திருப்பதில் தானாம் சுகம் அதிகம். ஆனால் மானசீகமாக காலித்த நிஸ்தார் நானாவுக்கு பொறுமை என்பது பொய்யாகிப் போனது. எனவே அவர் அவளைப் பார்க்கவென்று புறப்பட்டார். ஒரு வேளை போகாமல் இருந்திருந்தால் நாளிரா அவரை ஏமாற்றி விட்டுப் போயிருக்கிறாள் என்றோ அல்லது பெண்களே பேய் என்றோ பிதற்றித் திரிந்திருக்கலாம்.

ஆனால்....

இதோ அவள் பாதி நிர்வாணத்துடன் பிணமாக கிடந்ததாக ஊரார் பேசிக் கொள்கின்றார்களே. இதைக் கேட்கத்தான் ஓடோடி வந்தாரா? சிறுவயதிலிருந்தே நாளிராவுடன் ஒன்றாக விளையாடிய இனிய கடல் நண்பனா சுனாமியாக வந்து இப்படியான கொடுமையைச் செய்தவன்? மூர்ச்சித்து விழுந்தார் நிஸ்தார் நானா.

இன்றும் அவர் நினைவுகளில் நாளிரா வந்து போவதுண்டு. நாளிராவை மறந்த கயவராக அவர் இல்லை. அதே போல நாளிராவை நினைத்துக்கொண்டு ரயீஸாவுக்கு துரோகமும் செய்யவில்லை. அவரைப் பொறுத்தவரையில் நாளிராவை மறக்க முடியாது ஏனெனில் அந்த நாளிரா.. அவரது காணாமல் போன கவிதை!!!

# 14 கண்ணீர்

காலை ஏழு மணியிருக்கும். மனாஸுக்கு வயிற்றுக்குள் என்னவோ செய்தது. தேனீர் கோப்பையை வைத்துவிட்டு எழுந்து மலசலகூடம் செல்ல நினைத்தான். நினைக்கத்தான் முடிந்ததே தவிர போவதற்கு முடியவில்லை. ஏனெனில் கொழும்பில் பிரபலமான அந்தக்கடையில் சிற்றூழியர்களாய் வேலை செய்யும் இவன் போன்று ஆறு பேர், இவனுடன் இந்த அறையிலேயே தங்கியிருக்கிறார்கள். அவர்கள் நேரகாலத்துடன் எழுந்திருந்ததால் மலசலகூடத்திற்குப் போனவர் திரும்பி வரும்வரை காத்துக்கிடக்க வேண்டிய கட்டாயத்தில் படுத்திருந்தான்.

மலசலகூடம் என்றால் அறையோடு இருக்கும் தொடுக்கப்பட்ட மலசலகூடம் என்றோ, சகல வசதிகளுடன் கூடியதாக இருக்கும் என்றோ எண்ணினால் அதற்கு யாரும் பொறுப்பல்ல. வசதியான இடத்தில் பிறந்து வளர்ந்த அவனுக்கு இப்படியெல்லாம் கஷ்டப்படுவது பெரும் வேதனையாக இருந்தது. கொஞ்ச நேரம் படுத்துக்கொள்ளலாம் என்று சாய்ந்து கொண்டான்.

மனசைக் கல்லாக்கிக்கொண்டு இவனைப் போலவே மற்றவர்களும் இருக்கிறார்கள். சிலர் தம் மனைவி மக்களைப் பார்க்கவிருக்கும் ஆசையை வெளிப்படையாக கவலையுடன் கூறுவதை பல முறை கேட்டிருக்கிறான். வருடத்தில் இரண்டு தடவைகள் போய், நான்கு நாட்கள், இருந்துவிட்டு வருவார்கள். சிலநேரம் போய் இரண்டு நாட்கள் ஆகும்போதே ‘கடையில் வேலை இருப்பதால் வருமாறும், வராவிட்டால் சம்பளம் வெட்டப்படும்’ என்றும் அவர்களுக்கு தகவல் அனுப்பப்படுவதுண்டு.

இந்த வேலையை வீசிவிட்டுப் போவதென்றாலும் முடியவில்லை. வறுமை அவர்களை கட்டிப்போட்டிருந்தது. வேலை தேடுவதென்பது இலகுவான காரியமல்லவே. என்ன வாழ்க்கை? இரண்டு மூன்று வருடங்களாக இதேபோல் அடிமையாக. உடம்புக்கு முடியாமல் படுத்திருந்தாலும் சம்பளம் வெட்டுவார்கள். சாப்பாட்டுக்கு போய் வர நேரமாகினாலும் சம்பளம் வெட்டுவார்கள். இப்படியே நடந்தால் ஊழியர்களுக்கென்று என்ன மிஞ்சப்போகிறது?

முதலாளி என்றால் இஷ்டப்பட்ட நேரத்துக்கு வீட்டுக்குப் போகலாம். சாப்பிடலாம். தூங்கலாம். ஏன் அதிகாரவர்க்கம் என்பதனாலா?

அவர்கள் மட்டும்தான் மனிதர்களா? தமது மனைவி பிள்ளைகளுடன் இரண்டு மாதங்களுக்கொரு முறை சுற்றுலா போவார்கள். ஆனால் கடையில் வேலை பார்க்கும் சிற்றூழியர்கள் ஞாயிறு தினங்களிலும் வேலை செய்து முதலாளிக்கு உழைத்துக் கொடுத்தாலும் ஓரிரு நாளாவது அதிகமாக லீவு எடுத்து பிள்ளைகளுடன் இருந்துவிட்டு வர முடியாது. என்னவொரு கொடுமை!

மனாஸ் பரவாயில்லை. தனிக்கட்டை. எனினும் ஆசாபாசங்கள் உள்ளவன் தானே. சிலருக்கு வயது வந்த பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து அவர்களது தேவைகளைக் கவனிக்கும் பொறுப்பு இருக்கிறது. மனைவிமார் ஒவ்வொரு விடயம் பற்றியும் விம்மலுக்கும் விசும்பலுக்கும் இடையே அறியத்தரும்போது இந்த ஊழியர்கள் எவ்வளவு கவலைப்படுவார்கள்? அப்படி அவர்கள் கவலைப்பட்டு ஒடிந்து போயிருக்கும் நேரங்களிலெல்லாம் இவனது நினைவுகள் வீட்டைச் சுற்றியும் எட்டு மாதங்களுக்கு முன்பு ஹலீமாவைச் சுற்றியுமே ஆரத்தழுவி ஆர்ப்பாட்டம் போடும்.

வாப்பா! கண்டிப்பு, கோபம், அன்பு எல்லாவற்றுக்கும் உறைவிடமானவர். வாப்பா மீது மனாஸுக்கு மிகவும் மதிப்பு அதிகம். ஆனால் ஏழைகளை மதிக்காத அவர் குணம் மட்டும் மனாஸுக்கு பிடிக்காது.

உம்மாவைப்பற்றி கேட்க வேண்டுமா? சிறு தலைவலிக்கும் என்னமாய் துடித்துப் போவார்? உம்மா ரொம்ப அழகானவரும் கூட. ஆனால் ரோஷக்காரி. அடிக்கடி வாப்பாவுடன் சண்டையிடுவாள். அவர்களைப் புரிந்து கொள்ளவே முடியாது. என்ன இவர்கள்? எதற்காகவாவது சண்டை பிடிக்கிறார்கள்.. ஆஸ்ஊஸ் என்கிறார்கள். காலையில் சந்தோஷமாக இருக்கிறார்கள். இப்படி மனாஸ் நினைத்த போது அவனுக்கு ஆறு வயதிருந்திருக்கும். முதலில் புரியவில்லை. அவன் இளைஞனாகும் போதுதான் அன்பின் ஊடுறுவலும் அதன் தாற்பரியமும் புரிந்தது. திருமணம் பற்றி புரியுமளவுக்கு அவனுக்கு படிப்பிருக்கவில்லையா அல்லது அவை மேல் பிடிப்பிருக்கவில்லையா என்று தெரியாது. ஆனால் ஹலீமாவை காணும் போது வாப்பாவின் பணக்கார குணம் தெரிந்தும் மனாஸின் மனம் ஹலீமாவை நாடியது.

'உன் புள்ள செய்திருக்கிற வேலய பாத்தியா? புள்ளய பெத்திருக்காளாம் புள்ள!'

ஆவேசமாக வாப்பா காட்டுக்கத்தல் கத்திய போது,

'ஏன்ட அல்லாஹ்வே' என்று நடுங்கியவாறு ஓடி வந்தார் உம்மா.

'போயும் போயும் ஒரு ஏழையனோட பழகுறான் கழுதை. இவனை இப்படியே விட்டால் நாசமாப் போவான்' என்றார் அதே தோரணையுடன்.

பெற்ற தாயிடமே தன் பிள்ளை நாசமாப் போகும் என்று கணவனே கூறினாலும் தாயுள்ளம் தாங்குமா? வாப்பாவுடன் மல்லுக்கு நின்றாள் உம்மா. வாப்பா ஏழை என்று குறிப்பிட்டது ஹலீமாவின் தம்பியான ரியாஸை என்பது தெரிந்தபோது சுருக் என்றது. அடிக்கடி ரியாஸுடன் பேசும் போதெல்லாம் பள்ளி ட்ரஸ்டி யாராவது கண்டு வாப்பாவிடம் போட்டுக் கொடுத்து விடுவார்கள். என்ன மனிதர்கள்? படைத்தவனுடைய இல்லங்களிலேயே பதவி வகித்துக்கொண்டு அல்லாஹ்வின் படைப்பினங்களை அவமதிக்கிறார்களே.

ஹலீமாவை தன் மனைவியாக்கிக் கொள்ளவென்று அவன் கட்டிய கனவுக் கோட்டைகள் படிப்படியாக சரியத் தொடங்கிற்று. காரணம் பாழாய்ப் போன அவளது வறுமை. அழகையும், அறிவையும் அவளுக்கு அள்ளி வழங்கிய இறைவன், ஏன் அவளை ஏழையாக படைத்தான்?

'ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் ஒவ்வொரு சோதனை உண்டு. எனது உம்மத்தாருக்கு சோதனை செல்வம்தான்'

என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை யாருமே படித்துணர்ந்ததில்லையா? ஏழை எளிய மக்களின் உணர்வுகளைப் புரியாமல் அவர்களிடம் வேலை வாங்குவதும், தொழுவதற்கு கூட அவகாசமளிக்காமல் மிருகங்களாய் நடாத்துவதும் ஏன்? வாப்பாவும் அப்படித்தானே நடந்து கொள்கிறார் என்று நினைவு வரும் போது நெஞ்சுக்குள் நோவெடுக்கும். மனித சமுதாயத்துக்குள் ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டை தோற்றுவித்த அந்த தீய சக்தி எது? அந்த பூதம் இப்போது எங்கு போய் ஒழிந்துகொண்டது?

இந்த கேள்விகளுக்கெல்லாம் விடைத் தேடியே அலுத்துப் போயிருக்கிறான் மனாஸ்.

மனாஸின் வாப்பா இரண்டொரு மாதங்களாய் மிகவும் பதட்ட நிலையில் இருந்தார். அடிக்கடி கோபப்பட்டார். சில நேரம் வழமைக்கு மாறாக பள்ளிவாசலில் அதிக நேரம் தங்கினார். அல்லாஹுத்தஆலா அவரைச் சோதித்தான். அவர் தனது வியாபாரத்தில் நஷ்டமடைந்து

கொண்டிருந்தார். இறைச்சிக்கறியும் மாசிச்சம்பலும் வெறும் நெத்திலிகளாய் மாறிப்போயின. முதலில் வீட்டார் அனைவருக்கும் மிகவும் கடினமாக இருந்தது. வாப்பா இப்படி வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்ததை கண்டறியாதவன் மனாஸ். அவர் தற்போது மனதளவில் உடைந்து போயிருந்ததாலும் வயதாகியிருந்ததாலும் குடும்பப் பொறுப்பு யாவும் மனாஸின் தலை மீது வந்து விழுந்தது.

எனவே பத்திரிகை ஒன்றில் விளம்பரம் பார்த்து கொழும்பில் பிரபலமான ஒரு கடைக்கு வேலைக்குப் போகவிருப்பதாய் வீட்டில் தெரிவித்தான். உம்மா ஓ வென்று கதறியழுதார். தம்பி தங்கையரும்தான். வாப்பா நெஞ்சை அழுத்திப் பிடித்தபடி அமர்ந்துவிட்டார். 'பொஸ்' எனும் அந்தஸ்து மகனை போக விடக்கூடாது என்று தடுத்தாலும் வயிற்றுப் பசி அந்த வரட்டுப் பிடிவாதத்தை விரட்டியடித்தது.

போதாக்குறைக்கு இன்னும் இரண்டு மாதங்களில் நோன்பு வந்தது. நோன்பு வந்தால் பணக்காரர்கள் வீட்டில் எப்படியெல்லாம் விசேஷங்கள் இருக்கும். நோன்புக்கஞ்சி, பெட்டிஸ், ரோல்ஸ், பலூதா.. இந்த ஓரிரண்டு வருடங்களாக மனாஸின் வீட்டில் அப்படியிருக்க சந்தர்ப்பமில்லை. நோன்பு திறப்பதற்காக பள்ளிக்கு வருவோரை தரக்குறைவாக பேசும் வாப்பாவும் சிலநேரம் பள்ளிவாசலுக்கே போயிருக்கக்கூடும்.

புனிதமிகு ஐவேளைத் தொழுகையைக்கூட நேரத்துக்கு தொழ முடியாமல் இப்படி அடிமைத்தனமாக நடாத்தப்படும் என்றும், வெறும் சோற்றையும் பருப்புக்கறியையும் வீட்டார்கள் உண்ண நேரிடும் என்றும் மனாஸுக்கு யாராவது சொல்லி இருந்தால் கருவிலேயே கலைந்து போயிருப்பான். உம்மாவின் வயிற்றிலிருந்துகொண்டு அவருக்கு உதைத்ததற்கு தண்டைதானோ இது என்று பல சந்தர்ப்பங்களில் எண்ணுவதுண்டு. ஆறு மாதங்களுக்கு முன்பு ஒருநாள் தெஹிவளை சந்தியில் வைத்து ரியாஸைக் கண்டு கதைத்தான் மனாஸ். அவன் ஹலீமாவைப்பற்றிக் கேட்டபோது சிறிது நேரம் மௌனம் காத்தான் ரியாஸ்.

ஆம். அவள் மணமுடித்துவிட்டாளாம். மனசு விம்மியது.

வாப்பா மட்டும் சம்மதித்து இருந்தால் அன்றே ஹலீமா தனதாகியிருப்பாளே. வறுமையைக் காரணம் காட்டி அவனுடைய சந்தோஷங்களைத் தீயிட்டாரே. இப்போது நாமும் ஏழைகள்தானே யாஅல்லாஹ்!

'நீ போனதற்கு பிறகு உங்க வாப்பா ரொம்பவே உடைஞ்சு போயிட்டார். உம்மாவுக்கும் டயபெட்டிக். சில நேரம் என் ஆட்டோவில் உங்க வாப்பாவும் உம்மாவும் ஹொஸ்பிட்டலுக்கு போவாங்க. உங்க வாப்பா இப்ப எங்களோட ரொம்ப பாசமா நடந்துக்குறாரு'

ரியாஸ் கூறிக்கொண்டு போனான். ஆனால் மனாஸின் மனது வெட்டுப்பட்ட பாம்பு கிடந்து துடிப்பதைப் போல துடித்தது. என்ன செய்ய? கொடுத்து வைத்தது அவ்வளவுதான். தனக்கு இப்போது முப்பத்திரெண்டு வயதாகிறது. அதுவரை ஹலீமா இருப்பதும் நியாயமில்லைதானே. வாப்பா திருந்தியதை நினைத்த போது சந்தோஷமாக இருந்தது.

எப்படியெல்லாம் வசதியாய் வாழ்ந்தவன். இப்போது மா மூட்டை தூக்க வேண்டும். இரவு பதினொரு பன்னிரெண்டு மணி வரை கடையில் வேலை செய்ய வேண்டும். உணவைப்பற்றி சொல்லத் தேவையில்லை. உப்புமிருக்காது. புளியுமிருக்காது. பொறுமையாளர்களுடன்தானே அல்லாஹ் இருக்கிறான். எனவே சலித்துக் கொள்ளாமல் மிகவும் பொறுமையாக இருந்தான். இந்தப் பெருநாளைக்காவது ஊருக்குப்போய் வாப்பா உம்மாவுடன் சேர்ந்து சாப்பிடணும். அவர்களுக்கு சந்தோஷம் தருமளவுக்கு தம்பி, தங்கையருக்கும் புது ஆடைகள் கொண்டு போக வேண்டும். எப்போதோ வரவிருக்கும் பெருநாளை எண்ணி என்னென்னவோ சிந்தனைகள் அவன் உள்ளத்தில் அலை மோதின.

'என்னடா கனவு காணுறியா?'

இடியப்பத்தால் நிறைந்த வயிறைத் தடவியபடி ரூமுக்கே வந்து கேட்டார் முதலாளி. திடுக்கிட்டு எழுந்த மனாஸ் மெதுவாக நழுவினான். பல் விளக்கி, குளித்துவிட்டுவர குளியலறைக்குச் சென்றான். அவனது கன்னத்தில் கண்ணீர் கோடிட்டது. அது அவனுக்கு நெருப்பு போல சுட்டது. அவன் அடிக்கடி இப்படி களவாக கண்ணீர் சொரிவதுண்டு.

மனாஸின் தேனீர் கோப்பையில் ஈயொன்று விழுந்து இறந்திருந்தது!!!

# 15 சொந்தம்

'ப்ளீஸ் ரவி நான் சொல்றத கேளுங்க'

அவன் அவளை திரும்பியும் பார்க்கவில்லை. முன்பிருந்தவனா இவன்? என்ன நினைப்பு? என தனக்குள்ளேயே கூறிக்கொண்டு திரும்பிய சுகிர்தா ஒரு கணம் அதிர்ந்தாள். அவளருகே நமட்டுச் சிரிப்பை உதிர்த்தபடி சதீஷ் எதிர்ப்பட்டான். சமாளித்துவிட்டு நடக்கத் தொடங்கினாள். அரை மணி நேரத்தில் வீட்டை அடைந்தவள் மெதுவாக குளியலறைக்கு சென்று கதவைத் தாளிட்டுவிட்டு குமுறி அழுதாள்.

சதீஷ் சொந்தமாக ஒரு கம்பனியை நடாத்துகிறான். அழகுக்கு குறைவில்லை. லேசான மீசை தாடியுடன் கம்பீரமாக இருப்பான். இவன் முதன் முதலாக சுகிர்தாவை காணும் போதே இதயத்தை இழந்துவிட்டான். என்றாலும் ஆண்டவன் சித்தம் இருக்க வேண்டுமே? இரண்டு நிமிடம் கழியும் முன்பே இவள் ரவியின் பின்னால் வலிய சென்று பேசுவதை அவதானித்தான். இந்த ஊமை நாடகத்தை சதீஷ் சமீப காலமாக பார்த்துக்கொண்டுதான் இருக்கிறான். அவனுடைய இதயக் கோவிலில் சுகிர்தா என்று குடியேறுவாளோ?

இன்னுமொருவனை அவள் விரட்டி விரட்டி காதலிக்கும் போது அவன் எப்படி தன் காதலைச் சொல்லுவான்? அது நாகரீகமில்லையே? சொல்லி விட்டாலும் சுகிர்தா அதை ஏற்பாளா? அல்லது தெரிந்து தெரிந்து என்னை காதலிக்கிறியேன்னு அவனை தப்பாக நினைக்க மாட்டாளா? அதனால் சதீஷின் காதல் மனசினுள்ளே புதைந்து கிடந்தது.

'அம்மா சாப்பிட்டாச்சா?' என்றபடி புத்தம் புது மலராய் குளியலறையிலிருந்து வந்தாள் சுகிர்தா. மனசோ சலனப்பட்டுக் கொண்டிருந்தது. மனசிலுள்ள கவலைகளை அம்மாவிடம் கூறி அவளை சங்கடத்தில் சிக்க வைக்க நினைக்கவில்லை. என்றாலும் அம்மாவிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது.

'இதோ வந்திடுறேன்மா' என்ற படி அடுக்களையிலிருந்து வந்த அம்மாவுக்கு மகளின் முக மாற்றம் புலப்பட வெகுநேரம் எடுக்கவில்லை.

'என்ன சுகிர்தா ஒரு மாதிரி இருக்கே?'

அம்மாவின் கேள்வி சுகிர்தாவின் கண்களில் நீர் வரச் செய்யவே பதறிப் போனாள் அம்மா. ரவியை கண்டது முதல் சதீஷிடம் அவமானப்பட்டது வரை ஒன்று விடாமல் கூறினாள். அவற்றை எல்லாம் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்து விட்டு நிதானமாக அம்மா கூறிய பதில் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

'வேண்டாம் விட்டுடு. நம்மள மதிக்காதவனை நீ ஏன் தேடிப் போற? நீ ஏன்மா வலியுற?'

சாத்தி வைத்து சவுக்கால் அடித்தது போலிருந்தது. என்ன இந்த அம்மா இப்படி பேசுகிறாள்? மற்றவர்களை விட அம்மா புரிந்துகொள்வாள் என்றல்லவா கூறினேன். இல்லை அது பொய் என்பதைப் போல அம்மா நடந்துக்கிறாளே? இறைவனே! உன் படைப்பினங்களில் யாருமே இதயத்தோடு படைக்கப்படவில்லையோ?

'அம்மா நீ என்ன பேசற? ரவியை மறந்திட்டு எப்படிம்மா?'

சுகிர்தா அப்படி வலிமையாக கூறியபோது தாயுள்ளம் தப்பு செய்ததுபோல தவித்தது. விடிய விடிய நீரை இறைத்து விட்டு கடைசியில் குடத்தை உடைத்துப் போட்டது போன்ற குற்ற உணர்வு அம்மாவை ஆர்ப்பரித்துக் கொண்டது.

மறுநாள் வகுப்பிற்கு போய் வரும்போது பாதையைக் கடக்கையில் பெரியதொரு லொறி தன்னை நோக்கி வருவதைக் கண்டு அச்சத்தால் கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

'என்ன சுகி கொஞ்சம் அக்கம் பக்கமா பார்த்து வரக் கூடாதாம்மா' என்ற சதீஷின் குரலைக்கேட்டு முழுமையாக அவன் வார்த்தைகளுக்குள் சுருண்டு போனாள் சுகிர்தா.

'சுகி' என்றா கூப்பிட்டான்? அந்த வார்த்தையில் எத்தனை இதம்? எத்தனை மென்மை? பட்டாம் பூச்சி சிறகடித்தது. ஒரு கணம் தான். திடீரென மூளைக்குள் சந்தேகப் பொறி தட்டியது. என் பெயர் எப்படி இவனுக்குத் தெரியும்? வெகுவாக குழம்பியவள் அதைக் கேட்க வாயைத் திறந்து ஏமாந்தாள். சதீஷ் எப்போதோ போய்விட்டிருந்தான்.

அந்த சம்பவத்துக்குப்பின் அவளது மனம் அவன் பின்னால் அலை பாயத் தொடங்கியது. இந்த விசித்திரத்தைக் கண்ட அவளுக்கே தன்னை நம்ப முடியாமல் இருந்தது. அவள் அவனை காதலிக்கிறாளா? காதல் என்ற நோய்க்குள் தன்னை பலி கொடுக்கத் தயங்குபவளாச்சே சுகிர்தா. 'என் மனசு எப்பவுமே என் கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்கும்' என்று அடிக்கடி தோழிகளிடம் பெருமை பேசிய இவளுக்கு என்னவாயிற்று? மனம் தடுமாறிற்றா?

ஒரு வாரத்துக்குப் பின்பு வேலைக்கு தெரிவாகி இருப்பதாக அவளுக்கு கடிதம் வந்தது. கடிதம் உட்பட முக்கியமான சில ஆவணங்களை எடுத்துக் கொண்டு மேனேஜர் அறைக்குள் நுழைந்தவளுக்கு தேள் கொட்டியது போலிருந்தது. எதிரில் சதீஷ். அவனோ அவளை தெரியாதது போலிருந்தான். அது அவளுக்கு வசதியாகப் போனாலும் உள்ளுக்குள் என்னவோ செய்தது. அன்றைய மாலைப் பொழுதில் பஸ்ஸுக்காக காத்துக்கொண்டிருந்த போது, எதிர்பார்த்த விதமாக ரவியை தூரத்தில் கண்டாள். இதயத்தில் வெளிச்சம் பரவியது.

'ரவி.. ரவி..!'

ரவியோ சுகிர்தாவைக் கண்டவுடன் நடையின் வேகத்தை அதிகமாக்கினான். உடனே சாரியை சற்று தூக்கி கையால் பிடித்துக் கொண்டு வேகமாக செல்ல முயன்ற போது அவளது தோளை ஒரு கை தொட்டது. சந்தேகமேயில்லை அது சதீஷ்தான்.

'சுகி உன்னை புரிஞ்சிக்காதவன நீ எதுக்கு தேடிப் போகணும்?' என்று அவன் ஒற்றையில் அவளை அழைத்தபோது ஒரு பக்கம் ஆச்சரியம் கலந்த ஆனந்தம். மறுபக்கம் அதிர்ச்சி கலந்த கோபம். ஆனாலும் இவ்வளவு இயல்பாக பேசுபவனிடம் எப்படி கோபப்படுவது? அவள் எதையும் பேசவில்லை.

'என்ன யோசிக்கிற சுகி...?' அவனது குரல் இளகியிருந்தது.

இப்போது சுகிர்தாவுக்கு கோபம் வரவில்லை. தன் மேனேஜர் என்பதால் சற்று நிதானித்து 'ஒன்னுமில்ல சேர்' என்றாள்.

'என்னை பெயர் சொல்லியே கூப்பிட உனக்கு அனுமதிதர மாட்டேனா?' தேக்கி வைத்திருந்த காதல் வெள்ளம், வார்த்தைகளாய் பீறிட்டுப் பாய்ந்தது. சற்று தயங்கியவள் சமாளித்துக்கொண்டு,

'ஓகே சதீஷ்! நீங்க என்ன தப்பா விளங்கிட்டீங்க. நான் அவர் பின்னால அலையவில்லை. யாரையும் நான் காதலிக்கவுமில்லை'

'என்ன சொல்ற சுகிம்மா?' குரலில் உற்சாகம் ஒட்டிக்கொண்டது.

'ஆமா சேர்.. சொரி சதீஷ்! அவர் எங்கள் அண்ணா. அவர் வேற்று மதப் பெண்ணைக் காதலிக்கிறார். அதை அம்மா அப்பா விரும்பவில்லை. அதனால் அண்ணா வீட்டைவிட்டு போயிட்டார். அவரை நான் எங்கு கண்டாலும் கெஞ்சி வீட்டுக்கு கூப்பிடுறேன்' சுருக்கமாக முழுவதையும் கூறியபோது சுகிர்தாவை அவமானப் படுத்திய சம்பவங்கள் சதீஷின் கழுத்தை நெரித்தன. மிகவும் மனம் வருந்தி மன்னிப்புக்கேட்டான்.

ஒரு வாரத்துக்குப்பின் ரவி அண்ணா வீட்டுக்கு வந்தார். அவரைக்கண்டு ஆனந்தமடைந்தவள், அவர் கூறியவற்றைக்கேட்டு பரவசமடைந்தாள்.

'ரவியின்ர விஷயம் சரியாகிட்டு. அவன் விரும்புறபடியே அவனுக்கு திருமணத்தை நடாத்திரலாம்னு தீர்மானிச்சிட்டோம். அத்தோட உன்ர விஷயத்தையும்..' என்ற போது முகம் வெளிறினாள் சுகிர்தா. ஏனோ சதீஷ் மனத்திரையில் வந்துதித்தான். அந்த மாற்றத்தைப் புரிந்த அம்மா,

'சதீசு தம்பி நம்மகிட்ட ஏற்கனவே பேசிட்டாரு. நமக்கெல்லாம் ஓ.கே. நீ என்னம்மா சொல்றே?' என்றாள்.

அவள் வெட்கத்துடன் மௌனித்தாள்!!!

# 16 சிட்டுக்குருவி

ரவீனா உயர்தரத்துக்கு தெரிவாகியிருந்த போது அதே வகுப்பில் படிப்பதற்காக தூர கிராமத்துலிருந்து வந்திருந்தாள் ஷியாமளா. வந்த புதிதில் யாருடனும் பெரிதாக ஒட்டிக் கொள்வதில்லை. தானும் தன் படிப்பும் என்றிருப்பாள். பாடசாலை இடைவேளை நேரத்தில்கூட யாருடனும் கலந்து கொள்வதில்லை. இவளுடைய இந்தப் போக்கு ரவீனாவுக்கு கவலையை ஏற்படுத்தியது. எனவே அவளே வலிய சென்று ஷியாமளாவுடன் பேச்சுக்கொடுத்தாள்.

ஷியாமளாவுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. புதிய பாடசாலைக்குப் போனால் அங்குள்ளவர்கள் முதலில் கதைத்தால் தானே சந்தோஷமாக இருக்கும். அந்த சந்தோஷத்தை ரவீனாவின் நட்பில் உணர்ந்தாள் ஷியாமளா. ஒவ்வொரு நாளும் சோகத்துடனேயே பாடசாலைக்கு வருவதில் உள்ள கஷ்டத்தை ஷியாமளா சொல்லாமலேயே ரவீனா புரிந்து கொண்டாள். ஷியா பிரிதொரு விடுதியிலிருந்தே பாடசாலைக்கு வருவதாய் ரவீனா எண்ணியிருந்தாள்.

'ஏன் ஷியா இங்க உங்கட சொந்தக்காரங்க யாரும் இல்லயா?'

ரவீனாவின் இந்தக் கேள்வி ஷியாவுக்கு உள்ளூர வருத்தத்தை ஏற்படுத்தியது. ஷியாமளா விழித்தாள். விடை சொல்ல முடியாமல் தவித்தாள். ஷியாவின் மௌனம் யாரும் இல்லை என்பதற்கு அறிகுறியாக இருக்கலாம். அல்லது இருப்பவர்கள் பெரிய வசதிக்காரராய் இருந்து அவள் அங்கே தங்குவது பிடிக்காதவர்களாயிருக்கலாம். அதை ரவீனா ஊகித்துக்கொண்டாள்.

**********

ஷியாவுடைய பெரியம்மாவின் மகளான அபி டீச்சர் இந்தப் பிரபலமான பாடசாலையில்தான் தமிழ் மொழி விசேட ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். பாடசாலையில் அவருக்கு செல்வாக்கு அதிகம் என்று அவரே சொல்லித்தான் தெரியும். ஷியாவை எப்படியாவது அந்த பாடசாலையில் சேர்த்து படிக்க வைக்க பேரவா கொண்டார்கள் ஷியாவின் பெற்றோர். தனது சகோதரியின் மகள் தனது மகளுக்கு உதவுவாள் என்ற நம்பிக்கை ஷியாவின் தாயாருக்கு இருந்தது.

அதே போல் தங்கள் வீட்டில் வந்து ஷியாவை தங்கியிருக்குமாறும் டியூஷன் வகுப்பு தேடித்தருவதாயும் அபி டீச்சர் சொன்னதால் அவர் தனக்கு பக்கபலமாக நின்று உதவுவாள் என்று ஷியாவும் எண்ணினாள். ஆனால் அவையெல்லாம் வெறும் பித்தலாட்டங்கள் என்று பிறகே தெரிந்தது.

அம்மா அப்பாவின் ஆசைப்படி நன்றாக படிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் மட்டுமே ஷியாவின் மனதில் படிந்திருந்தது. கிராமத்து பாடசாலையில் இருந்த உயிர்த்தோழிகளை மறந்தது, பசி தாகம் பாராமல் பொறுமையாக இருந்தது எல்லாம் லட்சியங்களை நனவாக்கிக் கொள்ளத்தானே.

ஆனால் அந்த அபி டீச்சருக்கு பாடசாலையில் செல்வாக்கு இருந்ததே ஒழிய அவர் சொல்வாக்கில் தவறியவராகவே இருந்தார். தெரியாத இடத்தில் விடுதி தேடிப்போகுமாறு அடிக்கடி ஷியாவுக்கு கட்டளையிட்டார். தன் பிள்ளைக்கு சுகமில்லை என்றால் ஷியா மேல் எரிந்து விழுந்தார். ஆயிரம் கனவுகளை சுமந்து பறந்து வந்த ஷியா எனும் சின்னச் சிட்டின் சிறகுகள் மாதம் ஒன்று செல்லும் முன்பே கத்தரிக்கப்பட்டன. படிப்பின் மீதுள்ள ஆர்வம் காரணமாக வாய் மூடி மௌனம் காத்தாள் ஷியா.

ஊரிலிருந்து அம்மா தொலைபேசியில் கதைக்கும் போதெல்லாம் தொண்டை அடைக்கும். அழுகை முட்டும். சிரிக்கவே தோன்றாது. அப்பா, தம்பியுடனும் கொஞ்சமாக பேசிவிட்டு வைத்துவிடுவாள். பிறகு தலையணை நனையும். தன் அக்காவுடன் மாத்திரம் ஷியா கூடுதலாக ஒட்டுவதுண்டு. பாடசாலையில் உள்ள மாணவர்கள் ஷியாவுக்கு காதல் மனு போட்டதையெல்லாம் கூறுமளவுக்கு நெருக்கமாகப் பழகினார்கள் அவர்கள்.

ஆனால் இப்போது அருகில் அக்காவும் இருக்கவில்லை. ஓரிரு முறைதான் தொலைபேசியில் கதைத்தார். அப்போதும்கூட தன் பிரச்சனைகளை கூறவில்லை ஷியா. கூறவில்லை என்பதை விட கூறும் வாய்ப்பு இருக்கவில்லை. முதன்முதலாக தான் சந்தோஷமாக இருப்பதாயும் படிப்பதாயும் அக்காவிடம் பொய் சொன்னபோது உள்ளம் பற்றி எரிந்தது ஷியாவுக்கு.

இன்றைய காலத்தில் கல்விக்கு கொடுக்கப்படும் மதிப்பு மிகவும் உச்ச நிலையில் உள்ளது. வறுமைப்பட்டவர்களும் தங்கள் பிள்ளைகளை எப்படியாவது படிக்க வைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். விருப்பம் மட்டும் இருந்தால் போதுமா? கல்வி

மனதில் பதிவதற்கு என்றொரு சூழல் வேண்டுமே. அது கிடைக்காத போது படிபடி என்று சொல்லுவதில் அர்த்தமில்லை.

'ஏய் என்ன யோசிக்கிற?' அவளைப் பிடித்து உலுக்கிய போது சிந்தை கலைந்தாள் ஷியா.

'எங்களுக்கு பெரிய வீடு இருக்கு. 3 பேர் இருக்கோம். அப்பா வியாபாரத்துக்காக வெளிநாட்டுக்குப் போனால் ஒரு மாசம் கழிச்சி வருவாரு. அம்மாகிட்ட சொல்லிட்டா நீயும் வந்து தங்கிக்கலாம். என்ன வர்ரியா?'

ஷியாவுக்கும் உண்மையில் வேறெங்காவது போனால் நன்றாக இருக்கும் என்றே தோன்றியது. உடனே தாயாருடன் தொடர்பு கொண்டு விடயத்தை சொன்னாள் ஷியா. தன் மகள் படிக்கிறாள் என்று எண்ணியிருந்த பெற்றோருக்கு இந்த செய்தி உண்மையை உணரச்செய்தது. அவள் அங்கே படிக்கவில்லை. துடித்துப் போயிருக்கிறாள் என்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.

இப்போது ஷியா தன் தோழி ரவீனாவுடன் மிகவும் சந்தோஷமாயிருக்கிறாள். இரத்த பந்தத்தை விட இந்த உறவுகள் வலிமை கூடியது.

சிறகொடிக்கப்பட்டிருந்த சிட்டுக்குருவி ஷியாவின் ஆசைகள் மீண்டும் சிறகடிக்கத் தொடங்கி விட்டன!!!

# 17 தெளிந்த வானம்

அந்தப் பகல் அகோரமாய் தகித்தது. சூரியன் நிலத்தின் வெடிப்புகளுக்கிடையிலும் தன் கதிர்களை பாய்ச்சிக் கொண்டிருந்தான். கடையில் கணக்கு வழக்குகளைப் பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்த அஸ்லம் எதிர்பாராத விதமாக அக்காட்சியைக் கண்டுவிட்டான். அவனது தந்தை அவளுக்கு கைநீட்டி ஏசிக் கொண்டு இருக்கிறாரே.

முக்கிய தேவைகளின் போது தன்னிடம் பேசுவதற்கு ஒரு கைத்தொலைபேசி வாங்கித்தருவதாக அஸ்லம் அவளை வரச்சொல்லியிருந்தான். காலை பத்தரைக்கு வந்து வாங்கிக்கொண்டு போனாளே. இப்போது இரண்டு மணி கடந்து இங்கென்ன செய்கிறாள்? இந்த மனிதரிடம் வசமாகவே மாட்டிக்கொண்டுவிட்டாளே? மனிதத் தன்மையை மறந்து அவள் மனசை என்ன பாடுபடுத்தி இருப்பாரோ இந்த வாப்பா? ஒரு வேளை அவன் மொபைல் வாங்கிக் கொடுத்ததையும் வாப்பாவிடம் போட்டுக்கொடுத்துவிட்டாளோ, சொல்லியிருந்தால் என்னவாம்? அஸ்லமிடம் கேட்கும் உரிமை அவளுக்கு இருக்கிறது தானே? அவளது தேவைகளை கவனிப்பது அஸ்லமின் பொறுப்பில்லையா? பாவம் ரமீஸா!

தன் வாழ்வுரிமை மீறப்பட்டதால் தானே இப்படியொரு இக்கட்டுக்கு விருப்பமின்றியேனும் தள்ளப்பட்டாள். இப்படி அஸ்லமுக்கு தோன்றி என்ன பயன்? அவளது வாப்பா தாஸீம் ஹாஜியாருக்கல்லவா தோன்ற வேண்டும்? ஏன் வாப்பாவுக்கு புத்தி இப்படிப் போகிறதோ? பௌதீக மாற்றமேனும் நிகழ்ந்துவிட்டதோ? வாப்பாவை எதிர்த்து அவளை இந்த வீட்டுக்கு அழைத்து வரும் தைரியம் அஸ்லமுக்கு இல்லை. அவ்வளவு கையாலாகாதவனா அஸ்லம்? இவர்களை விட்டால் ரமீஸா எங்கு போவாள்? யோசித்தவாறே பகல் சாப்பாட்டுக்கு வந்திருந்த அஸ்லமைப் பார்த்ததும் அவனது தாய் வாஸிலாவுக்கு அவன் இதயம் புரிந்துவிட்டது.

'என்ன ராஜா இன்னிக்கும் ரமீஸாவ கண்டுட்டீங்களா?'

'ஓம் உம்மா. அதுவும் வாப்பாகிட்ட வசமா மாட்டிட்டாளே' என்று கூறியதை கேட்ட வாஸிலாவுக்கும் தூக்கிவாரிப்போட்டது. கண்மண் தெரியாமல் தாஸீம் ஹாஜியார் அவளை ஏசியிருப்பார் என்றே வாஸிலாவும் கவலைப்பட்டாள்.

சற்று நேரத்தில் அஸர் தொழுதுவிட்டு வந்த ஹாஜியார் அஸ்லமை பன்மையில் கூப்பிட்டார். அவர் அப்படி கூப்பிட்டால் ரமீஸாவும், அஸ்லமும் சந்தித்த விடயம் நிச்சயமாக தெரிந்திருக்க வேண்டும். அவளை சந்தித்து பேசிய விடயத்தை கேள்விப்படும் ஒவ்வொரு முறையும் இவனுக்கு பன்மையில் அழைப்பு வரும். பிறகு காதுக்கு அர்ச்சனை நடக்கும். அஸ்லமுக்கும் ரமீஸாவுக்கும் இடையில் இருக்கும் பந்தம் பற்றி இவருக்கு என்ன தெரியும்? காதலித்திருந்தால் தானே ரமீஸாவின் மனநிலையை புரிந்திருப்பாரே? ஏதோ இவர்களின் தந்தைமார்களின் ஸ்நேகிதத்தால் உம்மாவும் வாப்பாவும் மணமுடித்திருக்கிறார்கள். தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும். எத்தனை முறை இப்படி உயிரை வாங்கிவிட்டார்.

அவர் தனது வெறுப்பை அடிக்கடி வெளிப்படுத்துவதாலோ என்னவோ அஸ்லமுக்கு ரமீஸா மீதிருந்த அன்பு அதிகரித்துக் கொண்டே சென்றது. இருபத்திமூன்று வயது வரை அவளுடன் தானே பேசி, சிரித்து வாழ்ந்தான். அவனை விட இரண்டு வயது வித்தியாசம் தானே அவளுக்கு இருந்தது. வாஸிலாவுக்கும் அவளை ரொம்பப் பிடிக்கும். பிடிக்காமல் போகுமா? என்ன தவறு செய்தாலும் பாசம் கண்ணை மறைத்துவிடுமே? அவளை வீட்டுக்கு வந்திருக்க அனுமதிக்குமாறு எத்தனை முறை தன் கணவனிடம் சண்டை போட்டிருப்பாள் வாஸிலா?

வாப்பா மீண்டும் கூப்பிடுவது கேட்டபோது அஸ்லமின் கை கால்களில் உதறல் எடுக்கத்தொடங்கின. என்ன கேட்கப் போகிறாரோ என்று எண்ணியபடி சாரத்தை இருகக்கட்டிக்கொண்டு வாசலினருகே வந்து நின்றான்.

'சொல்லுங்க வாப்பா...'

தன் முன்னால் வந்து நின்ற அவனைப் பார்த்தார் ஹாஜியார்.

'உங்களுக்கு இப்படி ஒரு மகன் கிடைக்க கோடி புண்ணியம் செஞ்சீக்கோணும்'

அடிக்கடி பஸ்லியா மாமி வாப்பாவிடம் கூறுவாள். தன் மகள் சியானாவுக்கு இவனை கணவனாக்கிவிட வேண்டும் என்ற உள் நோக்கம் அவளுக்கிருப்பதை ஹாஜியார் உற்பட அனைவரும் அறிந்திருந்தனர். பஸ்லியா மாமி சொல்வதிலும் தவறில்லையே? உண்மையில் அஸ்லம் போல் ஒருவனை தன் மகளுக்கு கணவனாக்க முடிந்தால் அந்த பெற்றோர் நன்மை செய்தவர்கள்.

பாடசாலையில் உயர்தரம் படிக்கும் போது கூட பெண்கள் பின்னால் வலிய செல்வதும், சைட் அடிப்பதும் நண்பர்களோடு இணைந்து மானம் மரியாதை இழந்து பெண்களை இழிவுபடுத்துவதும் கொஞ்சம் கூட அவனுக்கு பிடிப்பதேயில்லை. தன் தாய் தந்தையர் பார்த்து தனக்கும் அவளைப் பிடித்தால் அவளை மணமுடித்து அதன் பிறகு அவளைக் காதலிக்கலாம் என்று நண்பர்களிடம் கூறுவான். அப்போதெல்லாம் அவனுடைய ஸ்நேகிதர்களின் கேலிப் பேச்சுக்களுக்கு சிறைப்பட்டுத்தவிப்பான்.

கற்பென்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. அதைப் பெண்களுக்கு மட்டுமே உரியதாக இந்தக் குருட்டுச் சமூகம் ஓரங்கட்டிவிட்டதுடன் ஆண்களுக்கு ஆரோக்கியமற்ற சுதந்திரத்தையும் தந்துவிட்டது. காதல் மட்டுமல்ல கலாச்சார ரீதியிலும் கூட மார்க்கம் கூறாத சில சம்பிரதாயங்களை கடைபிடிக்கும் இந்தச் சமூகம் குறித்து அஸ்லம் கவலைப்பட்டிருக்கிறான். அத்தகைய அஸ்லமுக்கு வந்து வாய்த்தாளே உறவாக ஒருத்தி? அவளால் அஸ்லம், தாஸீம் ஹாஜியார், வாஸிலா என்று அனைவருமே சந்தித்த பிரச்சினைகள்? வாப்பா பெருமூச்சுவிட்டார். என்ன சிங்கம் கர்ஜிக்கவில்லை? மனுஷன் மௌனமாக இருக்கிறார் என்றால் அவரை உளரீதியாக ஏதோ ஒன்று தாக்கியிருக்க வேண்டும்? புரியாமல் உம்மாவும், மகனும் தவித்தனர். அதை கண்டுவிட்டவர் போல அவர்களை மாறி மாறி பார்த்த ஹாஜியார் நிதானமாகக் கூறுவதற்காக தொண்டையைச் செருமினார்.

'ரமீஸா கர்ப்பமாக இருக்கிறாளாம்' என்றார் ஹாஜியார்.

அஸ்லமின் நாடி நரம்புகள் ஒரு நிமிஷம் வேலை செய்யவில்லை. கர்ப்பமாக இருக்கிறாளா? தன்னிடம் ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாமே? ஏன் சொல்லவில்லை? என்னிடம் கூறாத அளவிற்கு வைத்திருந்த ரகசியத்தை சட்டப்படி வாப்பாவிடமா கூறுவது? நெஞ்சில் இடி இறங்கினாலும் ஏதோ ஒரு குதூகலம் அதனுள்ளும் எட்டிப்பார்த்தது. உள்மனம் மகிழ்ச்சிக்கூத்தாடியது.

'பிள்ளை ஆணாக இருந்தால் என் மடி மீது ஓடி வந்து உட்காருவானே? பெண் பிள்ளை என்றால் வடிவாக அணிவித்து அழகு பார்த்து... ஒரு வேளை இரட்டையர்கள் என்றால் இருவரையும் மாறி மாறிக் கொஞ்சி..' எத்தனை கற்பனை அஸ்லமுக்கு? திடீரென ஏதோ நினைவு வந்தவன் போல வாப்பாவின் முகத்தை கூர்ந்து ஆராய்ந்தான். அதில் கோபத்தின் ரேகைகள் அறவேயில்லை. ஒரு

வேளை தன் தவறு நினைவுக்கு வந்துவிட்டதோ அவருக்கு? ரமீஸாவின் காதலை தாஸீம் ஹாஜியார் ஏற்காத காரணம், சமூகத்தில் அவருக்கிருந்த செல்வாக்கும் பணமும் தானே? அப்படிப்பட்டவர் காதலுக்காக தம்மை எதிர்த்த ரமீஸாவை எப்படி வீட்டுக்குள் அனுமதிப்பார்? அவர் நிலையிலிருந்து எண்ணும் போது அவர் பக்கம் நியாயம் இருக்கிறது. ஆனால் அஸ்லமுக்கு என்று ஒரு பொறுப்பு இருக்கிறதே? பால்ய காலத்திலிருந்தே ஒன்றாக உண்டு, விளையாடி, படித்து.. காதல் என்ற ஒன்றை காரணம் காட்டி அவனிடமிருந்து அவளை பிரித்தால் அவன் எப்படித்தாங்குவான்? அவனை அவள் பெயர் சொல்லித்தான் கூப்பிடுவாள். அத்தனை உரிமை? எல்லாம் பறிபோய்விடுமா?

'வாஸிலா...'

வாப்பா உம்மாவை சன்னமான குரலில் கூப்பிட்ட போது அஸ்லம் சிந்தனை கலைந்தான்.

'வாஸிலா அவ உண்டாகியிருக்கிறத கேள்விப்பட்ட பின்பும் நான் பிடிவாதமா நின்றால் நான் மனுஷனா பிறந்ததே அர்த்தமில்லாம போயிடும். ரமீஸாட மாப்பிள ஸஜாத் இப்ப ஹோட்டல் வச்சிருக்கானாம். ஸஜாத் உடன் இவ வீட்டவிட்டு போனதுக்கு காரணமே நான் தானே? நல்ல பண்புள்ள ஸஜாத்தை மதிக்காம இழவு.. பணம் பணம்னு என்ட பிள்ளைய பிரிஞ்சி ஒரு வருஷம் எப்படி இருந்தனோ? என் கவுரவத்தை கல்லில் அடிச்சி உடைச்சிருந்தா இன்று இப்படி நடக்குமா? இந்தா இருக்கானே உன் புள்ள அஸ்லம். எப்பப் பாரு தங்கச்சி தங்கச்சின்னு உருகுறான். எனக்குத் தெரியாமலே அவளோட தனியே பேசி உதவிகளும் செய்திருக்கான். இப்படி ஒரு நானாவை விட்டுட்டுப் போக அவளுக்கு எப்படி மனசு வந்திச்சோ?'

'ராஜா.. நீயாவது எங்கள் விருப்பத்துக்கு கல்யாணம் பண்ணிக்கப்பா. என்ன வாஸிலா என் ரத்தத்துல பொறந்தவனுக்கே தங்கச்சி மீது இவ்ளோ பாசம்னா என் மகள் மீது எவ்ளோ பாசம் எனக்கிருக்கும்? ஏதோ விதி வெளயாடிரிச்சி. சரி அஸ்லம் நீ இனி பயப்படாம உன் தங்கச்சி ரமீஸாவுடனும், மச்சானுடனும் பேசு. காலம் கடந்தாலும் என் கண்களை அல்லாஹ் திறந்திட்டான் என்று சொல்லு'

அஸ்லமின் உதடுகள் மௌனமாக 'அல்ஹம்துலில்லாஹ்' என்று இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டன!!!

# 18 என்னை அறிந்த போது

கவின் தேனீரை குடிப்பா!

தயாள் அண்ணா என்னை எழுப்பிய போது நான் திடுக்கிட்டு எழுந்தேன். மணி ஆறைத் தாண்டும் முன் என்னை எழுப்பினால் நேரத்துக்கு வேலைக்கு போகலாம் என்பது அவருக்குத்தெரியும். ஏனெனில் கொஞ்சம் சுணங்கினாலும் எங்கள் மேலதிகாரி வசிட்டராகி விடுவார். ஏதோ என்னுடைய செலவுகளை கொஞ்சமாவது சமாளித்துக் கொள்ளவும் ஆத்திர அவசரமென்றால் லீவு போட்டுவிட்டு போவதற்கும் சுதந்திரம் உண்டு. அதனால் வேறு வேலைகளுக்கு போக நினைத்தாலும் இவற்றை நினைத்து மௌனியாகி விடுவேன்.

தயாள் அண்ணா ஊற்றித் தந்த தேனீரை வைத்துக் கொண்டு மிக்ஷர், பிஸ்கட் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தேன். முடிந்து போயிருந்தது. வீட்டில் அப்பா ஏதாவது வாங்கி வைத்திருப்பார். எனக்கு யோகட், ஆப்பிள் இப்படி ஏதாவது சாப்பிடுவது பிடிக்கும்.

என்றாலும் நான் வீண் செலவுகளை செய்வதில்லை என்றபடியால் எதைக் கேட்டாலும் வசதி இருந்தால் தயாள் அண்ணா வாங்கித் தராமல் இருக்கமாட்டார். இந்த இடத்தில் இன்னொரு சம்பவமும் ஞாபகத்துக்கு வருகிறது. அன்றும் ஒரு நாள் அப்படித்தான். நான் ஏ.எல் செய்து கொண்டிருந்த காலமது. அவசரத்தில் சீசன் டிக்கட்டை எடுக்காமல் போய்விட்டேன். எனவே மீண்டும் வீட்டுக்குப்போய் அப்பாவிடம் காசு இருபது ரூபாயும் கேட்க வேண்டும் என்று எண்ணியவாறு வந்து கொண்டிருந்தேன். வீட்டு வாசலை நெருங்கும் போது...

'அண்ணனைப் பாரு எப்பவாச்சும் காசு கேட்கிறானா... நீயும் வந்து வாச்சிருக்கியே' என்று தம்பிக்கு அப்பா அர்ச்சனை செய்துகொண்டிருந்தார். நான் வந்த சுவடு கூட தெரியாமல் நழுவிப் போய்விட்டேன்.

எனக்கொன்றும் பெரிய வயதில்லை. தயாள் அண்ணா இருக்கும் தைரியத்தில்தான் அம்மா என்னை தலைநகருக்கு அனுப்பியுள்ளார். ஆம் தயாள் அண்ணா இப்போது என் இலக்கிய நண்பன் மட்டுமல்ல. அறை நண்பனும் கூட. அவர் தற்போது தனியார் கம்பனியொன்றில் கணக்காளராக பணிபுரிகிறார்.

கவின் என்ன எழுதுகிறாய்? என்று என் பாடசாலை நண்பனொருவன் கேட்ட போது நான் எழுதியிருந்ததை அவனிடம் கொடுத்தேன். அது பாடல் வரிகளையும் உள்ளடக்கிய எனது கற்பனை. அதற்கு சிறியதொரு அங்கீகாரம் கூட கிடைக்கவில்லை. மாறாக அவன் மற்றவர்களுக்கும் அதைக்காட்டி என்னை ஏளனம் செய்தான். (தற்போது என் கவிதைகளை பத்திரிகைகளில் பார்ப்பதும் அவனுடைய நண்பர்களிடம் என்னுடைய நண்பனென தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதும் வேறு கதை)

எனினும் நான் என் முயற்சிகளை நிறுத்தவில்லை. சில நாட்களில் என் வரிகளை பார்த்துவிட்டு பெரிய கவிஞர்களின் வரிகளை 'காப்பி' பண்ணியிருக்கிறான் என்பார்கள். அப்போதெல்லாம் ஆஹா அந்தளவிற்கு நன்றாகயிருக்கிறதா என்று மனசுக்குள் சிரித்துக் கொள்வேன்.

நான் வாசிப்பில் அதிக ஆர்வம் கொண்டவன் என்று அம்மாவும் கூறுவார். தரம் மூன்றிலிருந்த போதே என் பெற்றோர் பல கதைப் புத்தகங்களை வாங்கித் தந்திருக்கிறார்கள். தரம் ஆறு வரைக்கும் பல போட்டிகளிலும் கலந்து கொண்டிருந்தேன். ஆனால் என்னை அடிக்கடி பாடசாலை மாற்றியதால் ஏதோ ஒரு தாழ்வு மனப்பான்மை என்னை வறுத்தெடுத்து செயலிழக்கச் செய்தது. இப்படி நாம் ஊர் விட்டு ஊர் செல்லக் காரணம் அம்மாவின் இடமாற்றம் என்பதை விட எங்கள் அப்பாவின் சகோதரர்களுடன் ஏற்பட்டிருந்த வாக்குவாதம் என்று பின்னாட்களில் அறிந்தேன்.

என் சிறு பராயத்தில் எல்லாம் முதல் ஐந்து நிலைகளுக்குள் வந்த நான் மற்ற பாடசாலைகளில் ஒன்பதுக்கும் பிற்பட்ட ஸ்தானத்துக்கு வந்தபோது முழங்கால்களுக்கிடையில் முகம் புதைத்து யாருக்கும் தெரியாமல் அழுதிருக்கிறேன்.

அம்மாவைத் தவிர அனைவரும் என்னை குறைத்து மதிப்பிடும் போதெல்லாம் எனக்கென்று அன்பு காட்ட யாராவது இருந்தால்... என்றெண்ணியெல்லாம் உள்ளுக்குள் மருகியிருக்கிறேன்.

ஏதோ வாழ்க்கையை கடந்து கொண்டிருந்த போது என் வகுப்பு நண்பர்களுக்கும் உயர் வகுப்பு அண்ணாமார்களுக்கும் இடையில் பாடசாலையில் சண்டை நடந்தது. ஆனாலும் அதில் கொஞ்சமும் சம்பந்தப்படாத நானும் அம்மாவின் முன்னாலேயே அதிபரால் தண்டிக்கப்பட்டபோது வாழ்க்கை மீதிருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் இல்லாமல் போயிற்று. அம்மாவின் முகம் பார்க்க முடியாதளவுக்கு

வேதனையாயிருந்தது. அதற்கான காரண கர்த்தாக்கள் சில ஆசிரியர்களே என்றபோது அதிர்ச்சியடைந்தேன். அவர்கள் எமது முன்னேற்றத்தில் பொறாமை கொண்டவர்கள் என்றும் உதட்டில் தேனும் நெஞ்சில் விஷமுடனும் பேசுபவர்கள் என்று சொல்லி அம்மா என்னை தேற்றினார்.

எப்படியோ புதிய பாடசாலையில் இருந்த மூன்று வருடங்களும் படிக்க முடியாதவர்களுடனேயே நட்புகொள்ள முடிந்தது. கெட்டிக்காரப் பிள்ளைகள் ஒரு ஆசிரியையின் மகன் என்றுகூட எண்ணாமல் என்னை ஒதுக்கியது ரொம்பவும் வருத்தமாயிருந்தது. பிறகு நான் சாதாரண தரப் பரீட்சைக்கு தயாராகியிருந்ததால் என் சுட்டித் தனங்கள் யாவும் தற்காலிகமாக விடை பெற்றோடின. பின்னே? என் குடும்பத்தார் யாவரும் படித்து பெரியவர்களாயிருக்கும் போது நான் மட்டும் இப்படியே இருப்பதா என்ற சவாலுடன் பரீட்சைக்கு என்னை தயார்படுத்திக் கொண்டிருந்தேன். என் தாயும், தந்தையும், சகோதரர்களும் எனக்கு பேருதவியாய் இருந்தார்கள்.

இந்த நேரம் பார்த்துத்தான் அந்த சந்தோஷமானதும் சங்கடமானதுமான செய்தியை என் சின்னம்மா என்னிடம் கூறினார். என் தங்கை பருவமடைந்திருந்தாள். ஒருவாறு மற்ற அனைத்து அத்தை பெரியம்மாமாருக்கும் சாடைமாடையாக விஷயத்தைச் சொல்லி வீட்டுக்கு வருமாறு கூறினேன்.

பின்பு நான் உயர்தரத்துக்கும் தெரிவாகியிருந்ததுடன் அறநெறி பாடசாலையில் ஆசிரியனாகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். இடைப்பட்ட இந்த காலத்திலேயே என் வாழ்வின் திருப்புமுனை ஏற்பட்டதென்று சொல்ல வேண்டும். மனதில் தோன்றிய அத்தனையையும் கவிதைகளாக மொழி பெயர்த்தேன். அவற்றை பத்திரிகைகளுக்கும் அனுப்புமாறு அம்மா சொன்னார். நன்றாய் இருந்திருக்க வேண்டும். மாதமொன்று செல்லு முன்பே பிரசுரமாகியிருந்தது.

எத்தனை மகிழ்ச்சி! எத்தனை கூச்சல்!! இதையெல்லாம் காட்டிய பின்பு 'இங்க பாருடா கழுதை கவிதை எழுதுது' என்று என்னை கேவலப்படுத்திய நண்பன், தன் காதலிக்கு கொடுப்பதற்காக என்னிடம் கவிதை எழுதி கேட்கத் தொடங்கினான். நான் பெருமைப்பட்டுக் கொள்ளவில்லை. அவன் அசடு வழிந்தான். எனினும் மென்மேலும் என் திறமையை வளர்க்கும் முயற்சிக்கு உத்தரவாதங்கள் இருக்கவில்லை. எப்படி எழுதுவது, எதில் எழுதுவது

என்று தெரியாமல் அவஸ்தை பட்டிருக்கிறேன். அப்படியிருக்கையில் 'கவின் உனக்கொரு கடிதம் வந்திருக்கு' என்று அம்மா கூறினார்.

முக்கியமானதொரு விடயத்தைக் கூற மறந்துவிட்டேன். உயர்தர வகுப்பில் இருந்த காலத்தில் சின்னதாய் ஒரு காதல் அரும்பியது. ஆனால் அவளுக்கு அப்படியிருந்திருக்காது. என்னைப் பார்த்து ஒரு நாளாவது வெட்கப்பட்டதில்லை. நகம் கடித்ததில்லை. நிலத்தில் கால் விரலால் கோலம் போட்டதுமில்லை. எனவே நட்பு ரீதியாகவேனும் கடிதம் போடுவதென்றால் எனக்கு அவளைத்தவிர யாரும் இருக்கவில்லை. அவளே இல்லை என்று ஆன பிறகு இப்போது யாராக இருக்கும்? என்று கலவரமடைந்தேன். கடிதத்தை வாசிக்க வாசிக்க கலக்கமும் சந்தோஷமும் ஒன்றாக உற்பத்தியானது. சாராம்சம் இதுதான்.

**நான் தயாள். எழுத்தாளன்.**

**உங்கள் கவிதைகளின் தரம்பற்றி என் நண்பன் கூற கேட்டேன். கருத்துக்களை பரிமாறிக் கொள்ளலாம். தொடர்பு கொள்க.**

**- தயாள்.**

ஓரிரு மாதங்களுக்குள் என் படைப்புகளுக்கு கிடைத்த அங்கீகாரமா? அல்லது வேறு யாருடைய கவிதை வரிகளாவது தெரியாமல் என் கவிதைகளில் உள்ளடக்கப்பட்டு விட்டதா என்ற பயம் என்னைத் தின்றது. தயங்கிய படியே கோல் பண்ணிய போது தயாள் அண்ணா மிக அன்புடன் கதைத்தார். என் கவிதைகள் பற்றி சிலாகித்து பேசினார். நன்றாக எழுதுவதாக சொன்னார். என் நண்பர்களுடன் அவரை ஒப்பிட்டு வியந்தேன்.

நாட்கள் செல்லச் செல்ல நானும் தயாள் அண்ணாவும் மரியாதை எனும் போர்வையிலிருந்து விலகி அன்பென்ற பந்தலுக்குள் இணைந்து கொண்டோம். நீண்ட ஒரு விடுமுறையின் போது தயாள் அண்ணா எங்கள் வீட்டுக்கு வந்து தங்கியிருந்தபோதே இலக்கியத்தின் சுவை உணர்ந்து அதையே மூச்சாக எண்ணி செயல்பட்டேன் நான். இதைப் பார்த்து இலக்கியம் சோறு போடுமா என்று என்னை பரிகசித்தவர்களும் இருக்கிறார்கள். எனினும் என் இலக்கிய வேட்கைக்கு நல்ல பதிலை தயாள் அண்ணா தந்துகொண்டிருந்தார். அவர் தலை நகரில் வீடெடுத்தவுடனேயே என்னையும் அழைத்துக்கொண்டார்.

இங்கு வந்த பிறகுதான் நான் புதிய உலகமொன்றை கண்டு கொண்டேன். இலக்கியத்தின் நுணுக்கங்களை கற்றுத்தந்தார். என் சிறுசிறு குறைகளை சீர்படுத்தினார். எதிர்மாறான எண்ணங்களிலும் பல சிக்கல்களிலும் துவண்டிருந்த என்னை உற்சாகப்படுத்தினார். 'என் நண்பன் துணிச்சல்காரன்' என்று சொல்லி என்னைப் பாராட்டினார்.

தலை நகரில் நடக்கின்ற பல இலக்கிய விழாக்களையும் நான் தரிசிக்கக் காரணம் அவரே. பிரபலமான எழுத்தாளர்களும், ஊடகவியலாளர்களும் என்னுடனும் பேசும்போது எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருந்தது தெரியுமா? என் குடும்பத்தார்கூட மிகவும் மகிழ்ச்சியடைந்தார்களே.

தற்போது நானும் ஒரு அறியப்பட்ட எழுத்தாளன். முழுக்காரணமும் என் தயாள் அண்ணாதான். அவருடைய மேலீடு இல்லாமல் என்னால் எதையும் சாதிக்க முடியாது. நான் அவரை மிக மதிக்கிறேன். நேசிக்கின்றேன்!!!

# 19 கனவுகள்

இளையராணிக்கு இருப்பு கொள்ளவில்லை. வாழ்வு குறித்து அவள் கண்ட கனவுகள் இனிமேல் நிலைத்திருக்க வேண்டும் இறைவா. மானசீகமாக கடவுளை வேண்டினாள். இன்று அவர் வரப் போகிறார். வந்த பின் குளித்து சாப்பிட்டு குழந்தையை கொஞ்சும் அழகை அவள் இன்று தானே முதன் முதலாகப் பார்த்து ரசிப்பாள்?

கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள்??

தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்ததோ? எந்த ஜாதிமத பேதம் ஒழிய வேண்டும் என நினைத்தாளோ, அதே ஜாதிப் பிரச்சனை இந்தளவுக்கு விசுவரூபம் எடுத்து தன்னையும் தன் கணவனையும் ஏழு வருடங்கள் பிரித்து விட்டிருக்கிறதே? இத்தனை வருடங்களிலும் வேட்கை மிகுந்து திரியும் கயவர்களை சமாளிக்க எத்தனை போராட்டங்களை நடாத்த வேண்டியிருந்தது. தாலியிருந்தும் வேலியில்லாத பயிர் போல் தன்னைத் தானே எண்ணி அந்தரப்பட்டாளே. தத்தமது மனைவியருடனேயே வந்து பிள்ளையை தூக்கும் சாட்டில் இவளை திருட்டுத்தனமாக ரசிக்கும் எத்தனை பேர்? இளமை வாட்டத்தில் கணவனது படம் பார்த்து எத்தனை இரவுகள் ஏக்கமாய் இருந்திருப்பாள்?

**********

இளையராணி இளம் பராயத்தில் இருந்தபோது பசு தோலுரிக்கப்பட்ட மனிதர்களின் முகங்களை முழுமையாகக் கண்டு அதிர்ந்து போனாள். உலகத்தில் யாருமே செய்யாத ஒன்றை அவள் செய்தாளா? இல்லையே. ஆனால் உலகத்தில் அரங்கேறும் மிகப் பிரதான குற்றமும் இதுதானே?

காதல்!

இந்த மந்திர வார்த்தையின் சுகத்தை முழுமையாய் உணருமுன்பே காலம் அதன் கை வரிசையை எப்படியெல்லாம் காட்டிப் போயிற்று? ஊருக்குள்ளேயே எப்பேர்ப்பட்ட அவமானங்கள்? உண்மையில் இவற்றுக்கெல்லாம் காரணம் அவளுடைய காதலா? காலம் தொட்டு பேசப்பட்டு வரும் ஜாதிகளுக்கிடையிலான வேறுபாடா?

பாடசாலை காலத்திலிருந்தே வாளிப்பான அவளது உடலமைப்பு மேல் மையல் கொண்டிருந்தவன் சரவணன். காதலை காரணம் காட்டி அவளை அடையும் அவனது நோக்கம் புரியாதளவுக்கு இவளென்ன முட்டாளா? எக்காரணம் கொண்டும் அவனது காதலை ஏற்க அவள் தயாரில்லை. அதையும் விட அவளுக்குள் ஓர் உணர்வு சதாவும் ஓடி ஓடி உயிரை வதைத்துக் கொண்டிருந்ததே? மனசுக்குள் போட்டு பூட்டி வைத்திருந்த காதல் புகையை மறைக்க அவளால் முடியாமல் போன போது சாடைமாடையாக குமரனிடம் ஒப்பேற்றினாள். அவன் வரும்போது நாணிச் சிவந்தாள்.

ஆதிகால சமூகம் தொட்டு குலம் கோத்திரம் பார்த்து மக்கள் தங்களுக்குள் பிரிவினைப்பட்டுப் போவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒரே இறைவனின் படைப்பு, ஒரே நிற இரத்தம். இது தான் மனித இனம் என்று அவள் எண்ணினாள்.

வண்ணாண் அழுக்ககற்றி கழுவும் ஆடையை ஆடம்பரமாய் உடுத்தும் அவளது தந்தை, வீட்டு வாசலுக்குத் தானும் அவர்களை வரவிடாது படலை வரை மட்டுமே அனுமதித்து காசு கொடுப்பதை பார்த்து மனம் வெதும்பியிருக்கிறாள். மா இடிக்க வருகிற கூலிக்காரியையும் கொல்லைப் புறத்தில் நிற்க வைத்து வேலை வாங்குவதைப் பார்த்துப் பொறுக்காமல் பெற்றோரிடம் வாதாடியிருக்கிறாள். தமது இனங்களுக்கு இடையிலேயே ஏன் இத்தகைய வேறுபாடுகள் என எதிர்வாதம் புரிந்து இருக்கிறாள்.

அப்போதெல்லாம் 'நீ சின்னப் பொண்ணு இதையெல்லாம் பற்றி நீ பேசக்கூடாது' என்று அதட்டப்பட்டாள். இயற்கையிலேயே இரக்க குணம் கொண்ட அவள் இப்படிப்பட்ட அரக்க குணங்களை அடியோடு வெறுத்தாள். அதன் காரணமாகவோ என்னவோ குமரனை விரும்பினாள். ஆனால் அவனோ தப்பித் தவறியேனும் அவள் பக்கம் பார்ப்பதேயில்லை. எதேச்சையாக கண்டுகொண்டாலும் கூட திரும்பிக் கொண்டு போய்விடுவான். அப்போதெல்லாம் பச்சைப் புண்ணில் மிளகாய்பட்டது போல அவளது உள்ளம் துடிக்கும்.

எனினும் இளையராணி தளர்ந்து போய்விடவில்லை. புற்றீசல் போல் வெளிப்பட்ட அவள் காதல், குமரனின் இதயத்தில் புற்றை அமைக்க அவா கொண்டது. காலம் அதன்பாட்டில் ஓடிக்கொண்டிருந்தது. நான்கு மாதங்களின் பின் அவளது முயற்சிக்கு பலன் கிடைத்தது போல் அவனது புன்னகை கிட்டியது. விட்டில் தானாய் வலிய வலம் வந்தால் எந்த விளக்கு விரட்டியடிக்கும்? என்றாலும்

வேண்டுமென்று அவள் விழுந்து அல்லல் படுவதை குமரன் விரும்பவில்லை. பக்குவமாக எடுத்துச் சொன்னான். அவளும் அவன் மட்டுமே வேண்டும் என்று உறுதியாகவே நின்றாள்.

ஆறு மாதங்கள் ஆனந்தமாய் கழிந்தன. அதற்குப் பிறகு புயலடிக்கும் என்று யார் கண்டது? இந்த விவகாரத்தை முதலில் எதிர்த்த சரவணன் குமரனை மிரட்டினான். அவளை இனி சந்திக்கவே கூடாது என்றான். ஆனால் இளையராணியின் அன்பு நதியில் நீச்சலடித்துக்கொண்டிருந்த குமரன் இவற்றையெல்லாம் துளியளவும் பொருட்படுத்தவில்லை. எதற்காகவும் இந்த காதல் ஜோடி அஞ்சவில்லை.

தம் காதல் மூலமாகவேனும் சமூகத்தில் நிலவி வரும் ஏற்றத் தாழ்வுகள் ஒழிந்து போகட்டும் அல்லது நம்முடன் சேர்ந்தே இந்த ஜாதிப் பிரச்சனைகள் அழிந்து சாகட்டும் என சபதம் எடுத்துக் கொண்டனர். எதிர்ப்புகள் காதலை மேலும் வலுவடையத்தானே செய்கின்றன. இவர்களும் தம் காதலில் இன்னும் உறுதியானார்கள்.

இது இளையராணியின் பெற்றோரின் காதுகளுக்கு எட்டிய போது பதை பதைத்துப் போனார்கள். சமூக கட்டுப்பாட்டிலிருந்து அவர்கள் என்றுமே விலகி நடந்ததில்லை. அப்படி ஏடாகூடமாய் எதுவும் நடந்தால் ஊர் தம்மை தள்ளி வைத்துவிடுமே எனப் பயந்தார்கள். முழு ஊருக்கும் தெரியும் முன்பே இளைய ராணியையும் அழைத்துக் கொண்டு எங்காவது கண்காணாத தேசத்துக்கு ஓடிவிட அவர்கள் முடிவெடுத்தார்கள்.

இருபது வருடமாய் வளத்த வளர்ப்புக்கு அவள் தேடித்தந்த வெகுமதியா இது? ஒரே பெண் என்று எப்படியெல்லாம் பாசத்தை ஊட்டி வளர்த்தார்கள் அவளது பெற்றோர். அவளுக்கு குறை வைக்கக் கூடாதென்று இன்னொரு குழந்தையை பெற்றுக் கொள்ளத் தேவையில்லை என்று கூட அவர்கள் தங்களுக்குள் கலந்து ஆலோசித்தார்களே. அத்தகைய அன்பிற்கு இந்த தண்டணை போதுமா? எத்தனை பெற்றோர்கள் இன்று இந்த பாட்டைப் படுகிறார்கள்? கார்ணமென்ன காதலா? சாதி மத பேதமா?

அவளாவது யோசித்திருக்கலாமே? தன்னைக் கேட்காமல் படிக்க வைத்து, தன்னைக் கேட்காமல் சாப்பிடத் தந்து, தன்னைக் கேட்காமல் ஆடை அணிகலன் தந்த பெற்றோர் தனக்குத் தேவையான வயதில் வரன் தேடித்தராமல் இருப்பார்களா? காதல் இவ்வளவு வலிமையானதா? எப்படியோ ஊரை விட்டு போகும் முடிவை இளைய ராணியே நிறைவேற்றிவிட்டாள். ஆம்! அவள் குமரனுடன் ஓடிப்

போனாள். ஊரார்களுக்கு முன்னே நின்று தலைவிரி கோலமாய் அவளது அம்மா அவளை திட்டிக்கொண்டிருந்தாள். தான் பெற்ற பிள்ளையை ஒரு தாய் இப்படி திட்டுவாளா என்று ஊர் வம்பை அவல் தின்னும் பெண்களே மனம் கலங்கினர். ஆனால் அதன் உள்நோக்கம் மற்றவர்கள் திட்டுவதைவிட தானே திட்டுவது போல நடித்ததுதான் என்பது யாருக்குத் தெரியப் போகிறது?

இந்த சம்பவம் சரவணனை மிருகமாக்கி விட்டிருக்கும் என்று யாருமே நம்பியிருக்கமாட்டார்கள். சாதி வெறி பிடித்தலையும் ஒருவன் என்றே இளையராணி போன்றோர் நினைப்பார்கள். சமூக கட்டுப்பாடு மீறாதவன் என ஊரார் எண்ணுவார்கள். தன்னை ஏமாற்றிவிட்டு இன்னொருவனுடன் போய்விட்ட அந்த அவமானத்தை அவன் ஏற்றுக் கொள்ள திக்கித் திணறினான். நண்பர்களிடம் கேலிக்காளானான்.

இவனைப் போன்றே அவள் மீது காதல் கொண்டவர்கள் 'அவங்களை சும்மா விடக் கூடாது' என கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த தீயில் எண்ணெய்விட்டு வேடிக்கை பார்த்தனர். ஒரு குழுவாக இயங்கி அவர்களை கண்டுபிடித்துத் தருவதாக அவள் பெற்றோரிடம் வாக்களித்தனர். இனிமேலும் இந்த ஊரில் இப்படிப்பட்ட தவறுகள் இடம் பெறக் கூடாதென்று மேடை அமைத்துப் பேசினர்.

எதுவுமே தெரியாமல் குமரனுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தாள் இளையராணி. தாய் தகப்பனை விட்டுவிட்டு வந்த சோகம் குடிகொண்டிருந்தாலும், குமரனின் அணைப்பில் அவளது கவலைகள் கட்டுப்பட்டிருந்தன. இல்லற வாழ்வின் இனிமை இத்தனை சுகமா என அவள் எண்ணியிருந்தாள். அதற்கு கண் வைத்தாற் போல இவர்களின் வாழ்க்கையில் மீண்டும் பேரிடியாக வந்தான் சரவணன்.

தான் மணமுடிக்க இருந்த பெண்ணை கூட்டிக் கொண்டு வந்ததற்காக முதலில் சரவணன் வசை பாடினான். பிறகு கையோங்கினான். கீழ் சாதியான் தனக்கு பயப்படுவான் என்று எண்ணியே அவன் அப்படி நடந்து கொண்டிருக்க வேண்டும். முதலில் செய்வதறியாமல் பின்னே நகர்ந்தான் குமரன். அதை கண்ட சரவணன் உடனே இளையராணியை நெருங்கி பிள்ளை வயிற்றுக்காரி என்று கூட பாராமல் சட்டையை கிழித்து மானபங்கப்படுத்தினான்.

காதல் தந்த தைரியமோ என்னவோ வெறி கொண்டவனாய் எழுந்து சரவணனை தாக்கினான் குமரன். இந்த திடீர் தாக்குதலால் சரவணன் நிலை குலைந்து போனான்.

ஒரு நிமிடத்துக்குள் தனக்கு நடக்கவிருந்த அவமானத்தை எண்ணி உயிர் நடுங்கிய இளையராணி குமரனின் வெறியைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். எல்லாவற்றிற்கும் அவள் தான் முதலில் அத்திவாரம் போடுவாள். அவன் திறமையாக கட்டி முடிப்பான். அவனாக ராகமிசைத்து அவளை வழிக்கு எடுப்பதில்லை.

அப்படிப்பட்டவன் இவ்வாறு வெறித்தனமாக நடந்துகொண்டால் யாருக்கு ஆச்சரியமிருக்காது? ஒரு நிமிடம்.. ஒரே ஒரு நிமிடம் ஆனந்தப்பட்டவளுக்கு தன் கண் முன்னே நொடிப் பொழுதில் அரங்கேறிய அந்தக் கோரக் காட்சி ஈரலை குளிரச் செய்தது. கடவுளே.. கத்தியில் இரத்தம் சொட்டச் சொட்ட அவள் கணவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தான். அருகில் சரவணண் இரத்த வெள்ளத்தில் மூழ்கியிருந்தான்.

**********

ஏழு வருடங்களின் பின் இன்று குமரன் விடுதலையாகி வருகிறான். நீண்ட காலமாக குமரனைப் பிரிந்திருந்த இளையராணி அவனது வருகைக்காக ஆவலுடன் காத்திருக்கிறாள்!!!

# 20 ஓயாத நினைவலைகள்

என் உள்ளம் உள்ளூர அழுது கொண்டது. இத்தனை வருடங்களுக்குப் பிறகு டீச்சரை பார்க்கும் பாக்கியம் கிடைத்ததை எண்ணி அல்லாஹ்வுக்கு நன்றி சொன்னேன். இன்று லீவு போடுமாறு கணவருக்கும் சொல்லிவிட்டு உம்மாவையும் அழைத்துக்கொண்டு டீச்சரைப் பார்க்க புறப்பட்டோம். ஆனால் என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை எப்படியிருந்த டீச்சர்? இன்று இப்படி உருக்குலைந்து...

**********

நசீமா டீச்சர்!

பாடசாலை வாழ்க்கை பற்றிய எண்ணங்களின் போதெல்லாம் இந்த நசீமா டீச்சரின் ஞாபகம் வரத் தவறியதேயில்லை. அவர் மீது அளப்பரிய அன்பு எனக்கு. சின்ன வயதில் நான் படு சுட்டியாக இருந்தேன் என்று அடிக்கடி என் உம்மா கூறி சிரிப்பதுண்டு. டீச்சரும் என் குறும்புத் தனங்களை கூறி 'இவள் ரொம்ப திறமைசாலியா வரணும்' என்று துஆ கேட்டது இன்னமும் எனக்கு நினைவிருக்கிறது. உம்மாவின் உயிர்த் தோழியான ஆதிலா மாமியை விடவும் நசீமா டீச்சரை ரொம்பப் பிடிக்கும் எனக்கு.

நான் முதலாம் ஆண்டுக்கு செல்லும் போதே அவர் அங்கிருந்தார். எங்கள் 'பெரிய சேரின்' மனைவி தான் அவர். சேருக்கும் என் மீது பிரியம் அதிகம். மொண்டசூரி போகும் போதும் உம்மா அந்த பாடசாலைக்கு என்னை கூட்டிச் சென்றிருப்பதால் பெரிய சேரை நானும் அறிந்திருந்தேன். அவர் எனக்கு சொக்கலேட் தராத நாட்களில் அவருடன் பேசாமல் வந்ததை நினைத்தால் இப்போதும் எனக்கு சிரிப்பு வருகிறது. அன்றும் அப்படித்தான். சேருடன் கதைத்துக் கொண்டிருந்த போது டீச்சர் வந்தார்.

'டீச்சர் கொஞ்சம் வெளியில போங்க சேருடன் தனியா பேசணும்' என்றேன்.

கோபம் வந்திருக்காது தானே? சிரித்து விட்டு பேசாமல் பைலை பார்த்துக் கொண்டிருந்தார் டீச்சர். எனக்கோ கோபம் தலையுச்சிக்கு

ஏறியது. மேசைக்கு முன்னால் சுவாரசியமாக என் கதைகளை கேட்டுக் கொண்டிருந்த பெரிய சேரிடம்,

'சேர் இவங்கள வெளிய போக சொல்லுங்க' என முறையிட்டேன்.

சேரும் என்ன நினைத்தாரோ 'நசீமா டீச்சர் கொஞ்சம் அங்கால போங்க' என்று கதவு இருந்த பக்கத்தைக் காட்டினார்.

எனக்கோ மிகவும் சந்தோஷம். மழலை மொழியில் மிச்ச மீதியிருந்த கதைகளை சொல்லிவிட்டு உம்மா படித்துக் கொடுத்துக் கொண்டிருந்த ஏழாம் வகுப்புக்கு ஓடிவிட்டேன். டீச்சர் என்னை வாஞ்சையோடு அணைத்துக் கொள்வார். பல கதைகள் சொல்லித் தருவார்.

வீட்டில் செய்து கொண்டு வரும் சிற்றுண்டிகளையும் எனக்குத் தருவார். ஸ்டாப் ரூமில் அனைத்து ஆசிரியைகளும் சாப்பிடும்போது சிலநேரம் என்னையும் உம்மா கூப்பிட்டுக் கொள்வார். அப்போது நசீமா டீச்சர், தான் செய்து கொண்டு வந்த உணவுகளையும் தந்து என்னை சாப்பிடச் சொல்வார்.

கொஞ்சம் என் சுட்டித் தனங்கள் குறைந்தது தெரிந்த போது, உம்மா டீச்சரின் வீட்டுக்கு அழைத்துப் போயிருக்கிறார். அங்கு அவரது இரண்டு மகன்மார் இருந்தார்கள். நளீர் நானா மீதுதான் நான் அதிகமாக இரக்கம் வைத்திருந்தேன். அவர் என்னைவிட இரண்டு வயது மூத்தவர். பழகுவதற்கு இனிமையானவர். மற்றவர் காமில். அதிகம் பேசமாட்டார். கழுவும் மீனில் நழுவும் மீனைப் போல சிரித்தும் சிரிக்காமலும் சென்றுவிடுவார்.

உம்மாவுக்கு அப்போது என் தம்பி பிறந்திருக்கவில்லை. அதனால் ஆண் பிள்ளையின் கனவை டீச்சரின் மகன்மாரிடம் நனவாக்கிக் கொண்டிருந்தார். உம்மா. டீச்சருக்கு பெண் பிள்ளைகள் இல்லை. நான் தான் நானாமார் இருவருக்கும் தங்கை என கூறி மகிழ்வார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்தவுடனேயே நானும் வேறு பாடசாலைக்கு போய்விட்டேன். அதன் பிறகு டீச்சர் பென்ஷன் போயிருக்க வேண்டும். விடுமுறை நாட்களில் ஊருக்கு வரும் போது டீச்சரின் தரிசனம் பெறாமல் போவதில்லை. நானும் சிறுமி என்ற ஸ்தானத்தில் இருந்து ஒரு படி உயர்ந்திருந்ததால் எனக்கும் பெரிய சேருக்கும் இடையில் இடைவெளி அதிகமாகி இருந்தது.

என் உம்மாவுக்கோ டீச்சருக்கோ நானும் நானாமாரும் முன்போல் பழகுவதில் சங்கடங்கள் இல்லாதிருக்கலாம். ஆனால் நாம் யௌவன வயதுடையவர்கள் என்பதால் எம்மிடையே வேரூன்றப்பட்ட சகோதர உறவு கூட ஒரு சிரிப்புடன் மாத்திரம் மட்டுப்பட்டுவிட்டது.

காலச் சக்கரம் வேகமாக சுழன்றது. சாதாரண தரப் பரீட்சை முடிந்து ஊருக்கு வந்திருந்தபோது நளீர் நானா வேலை கிடைத்து கொழும்புக்கு போயிருப்பதாய் சொன்னார்கள். காமில் ஏ.எல் செய்து கொண்டிருந்தார். எனக்கு நல்ல வரன் அமைய வேண்டும் என்று தினமும் அல்லாஹ்விடம் வேண்டுவதாக டீச்சர் சொல்லும் போதெல்லாம் என் காதோரம் சிவத்துப் போகும்.

**********

நானும் தற்போது திருமணம் செய்து தலைநகரம் வந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. என் திருமணத்துக்கும் டீச்சர் வரவில்லை. 'என்னை பார்க்க வராமல் என்ன செய்தாராம்' என்று நான் அழுதேன். இதற்கிடையில் டீச்சரும் குடும்பம் சகிதம் மட்டக்குளியில் இருப்பது தெரிந்தது. நளீர் நானாவின் திருமணம் முடிந்துவிட்டது.

ஒரு மணித்தியாலத்துக்கும் மேல் இடம் தேடியலைந்து வீட்டைக் கண்டு பிடித்தபோது பெரியதொரு சாதனையை செய்துவிட்டது போல இருந்தது. போதாத குறைக்கு மதிய உணவுக்கு அழைப்பு விடுத்திருந்தார் டீச்சர். அங்கு போய் டீச்சரைப் பார்த்த முதல் வினாடியே மனசைப் போட்டு பிசைவது போல வலித்தது. ஏன் வந்தோம் என்று எண்ணினேன். டீச்சர் முகம் வெளுத்து தலை நரைத்து, வேறு யாரோ போல் இருந்தார்.

கடந்த இரு வருடங்களுக்கு முதல் டீச்சருக்கு சுகவீனம் ஏற்பட்டதாம் அதனாலேயே என் திருமணத்துக்கு வரவில்லை என்றபோது என் முகத்தை வேறெங்காவது கொண்டுபோய் வைக்க முடிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் எனத் தோன்றியது.

நாம் வரும் மகிழ்ச்சியில்தான் இன்று இந்த அளவுக்காவது எழுந்து நடமாடுவதாக சேர் சொன்னபோது ஆனந்தம் பரவினாலும் சமையல்காரியின் உதவியுடன் எமக்காக அனைத்தும் தயாரித்ததை அறிந்து துடித்துப் போனேன். செல்லமாக கோபித்தேன். உம்மாவும் வெகுவாக கலங்கித்தான் போனார்.

உம்மாவுக்கும் டீச்சருக்கும் தேநீர் கொடுப்பதற்காக டீச்சரின் அறைக்கு நுழைந்தபோது, தாம் இளம் ஆசிரியைகளாக இருந்தபோது பாடசாலையின் அபிவிருத்திக்காக பட்டபாட்டை இருவருமாக கதையளந்து கொண்டிருந்தனர். நானாமாரும் வெளியில் போயிருந்ததால் பெரிய சேர்தான் என் கணவருக்கு பிஸ்கட், தேனீர் முதலியவற்றை கொடுத்துக்கொண்டிருந்தார்.

நிறைய நேரம் உம்மாவையும் டீச்சரையும் பேசவிட்டு நாம் முன் அறையில் இருந்தோம். வீட்டுக்கு வர வேண்டிய நேரம் நெருங்கவே டீச்சருக்கு தெரிவித்துவிட்டு அவரின் நலனுக்காக ப்ரார்த்தித்தவாறு வெளியே வந்தோம். பெரிய சேரின் கண்கள் கலங்கியதை காணத் தவறவில்லையாயினும் காட்டிக்கொள்ளவில்லை. கேட்டை விட்டு வெளியே வந்ததும் பீறிட்டுப் பாய்ந்த கண்ணீரை கணவருக்குத் தெரியாமல் துடைத்துக்கொண்டேன்!!!

# 21 கானல் நீர்

தேவாவின் மனைவி முதலில் அதிர்ச்சியடைந்தாலும் கணவனது உள்ளம் குழுந்தைகளுக்காக ஏங்குவது கண்டு தலையாட்டினாள். அதனால் நாளை காலை கேட்டுவிட வேண்டும் என திடசங்கற்பம் பூண்டவனாக உறங்கினான் தேவா. அவன் கனவில் அந்தக் குழந்தையை தூக்கி முத்தமிட்டு, விளையாட்டுப் பொருட்களாய் வாங்கி அடுக்கி.. எத்தனை ஆசைகள்? எத்தனை கற்பனைகள்?

**********

மக்கள் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்தனர். பிச்சைக்காரப் பெண்ணை திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தனர். அந்த பிஞ்சு முகம் இன்று நிர்ச்சலமாக இருந்தது. சதாவும் முகத்தை சுருக்கிக்கொண்டு சிணுங்கும் அந்தக் குழந்தை இன்று இப்படி அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதை எல்லோருமாக பார்த்துக் கொண்டு இருந்தார்கள். குழந்தை அழவில்லை என்பதற்காக அதைப்போட்டு அடித்த அடியில் மூர்ச்சையாகி...

பிச்சைக்காரியின் முகத்தில் சிறிதும் சலனமிருக்கவில்லை. அவளைப் பார்க்கும் போது தாய்ப் பாசம் என தரணியில் பேசப்படும் யாவும் பிழைத்துப் போனது போல் தோன்றிற்று. தாயின் சேலையை சப்பிக்கொண்டும் அடம் பிடித்தழுது கொண்டும் வலம் வரும் அந்த குழந்தை.. தாயைப் போலவே எப்போதுமே கையை விரித்து பணம் கேட்டவாறு வரும் அந்தக் குழந்தை இப்படி பேச்சு மூச்சற்று கிடக்கிறதே!

அன்றும் அப்படித்தான். தேவா அலுவலகம் செல்வதற்கு வழக்கமாக ஏறும் பஸ்ஸில் ஏறிக் கொண்டான். அயன் பண்ணிய நீளக் கை ஷேர்ட், பேர்ப்யூம் வாசனை என அழகனாகச் செல்லும் அவன் வசதியாக ஓரிடத்தில் அமர்ந்து கொண்டான்.

கழிந்து போன இளமையின் நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த அவன் அக்குழந்தை அவனது தோற்பட்டையை தொடும் வரை சுய நினைவுக்கு வரவில்லை. திரும்பிப் பார்த்தான். அவன் கண்களில் அனல் தெரித்தது. இளையான்கள் மூக்கைச் சூழ்ந்திருக்க ஏதோ மிச்சம் மீதிகளை சாப்பிட்ட கையுடன் அவனைத் தொட்டதால்

ஷேர்ட் அழுக்காகி இருந்தது. குழந்தையை கொஞ்சிக் கொண்டிருக்கும்போது அது உதைத்தால் நாம் மீண்டும் குழந்தையை உதைக்கிறோமா? இல்லையே. அவனும் அந்தரப்பட்டுப் போனான். ஒரு கணம் முறைத்துப் பார்த்தான். இவன் முறைக்கிறானா சிரிக்கிறானா என அறியாத குழந்தை அவனைப் பார்த்து அழகாய் சிரித்தது. அதைப் பார்த்தவனுக்கு உள்ளுக்குள் சுரீர் என்றது.

'ச்சீ... பச்ச புள்ளய போய் கோவிச்சிக்கிறமே?'

அப்படியே பாசம் வந்து கொட்டினாலும் தூக்கிக் கொஞ்சத்தான் முடியுமா? பஸ்ஸிலுள்ளவர்கள் இவனை வினோதமாக பார்க்க மாட்டார்களா? பேசாமல் திரும்பிக்கொண்டான். அன்றைய நாள் முழுவதும் அந்த குழந்தை அவனது நினைவுகளில் வந்துபோனது. வேலை முடிந்து வீட்டுக்குப்போகையில் வழக்கம் போலவே அன்றும் மனைவி அழுது கொண்டிருந்தாள்.

ஆண்டவா! இந்த பிரச்சினைக்கு முடிவு எப்போது வருமோ? சில வேளைகளில் நேரம் கெட்ட நேரத்தில் அழுது கொண்டிருக்கும் மனைவியை பார்த்து கோபம் வரும். என்றாலும் இவளை சதாவும் குறை சொல்லும் அயல் வீட்டுப் பெண்களையும் எத்தனை முறை கண்டித்தாயிற்று? இவனிலும் அவளிலும் எந்தக் குறையுமில்லை. ஏனோ ஆண்டவன் குழந்தை பாக்கியத்தை இவர்களுக்குக் கொடுக்கவில்லை. இவளது தங்கையின் பிள்ளைகளை வாரியணைத்து இருவருமாக கொஞ்சும் போது அதைப் பார்ப்பவர்களுக்கும் இயற்கை மீது கோபம் கோபமாய் வரும்.

கவனிப்பாரற்று கிடப்பதால்தானே அந்தக்குழந்தை இப்படி இருக்கிறது? ஒழுங்காக குளிப்பாட்டி அழகாய் அணிவித்தால்? இவன் ஆசைப்பட்டு என்ன பயன்? மனைவியும் அம்மாவும் சம்மதிக்க வேண்டுமே? அது சாத்தியப்படக் கூடிய ஒன்றா? பலவாறு சிந்தித்தான். தினமும் அழுது கொண்டே பஸ் ஏறும் பிச்சைக்காரியிடம் என்னவென்று போய் பேசுவது? வாய்க்கு வந்தது போல அவள் ஏதாவது சொல்லி விட்டால் பெருத்த அவமானமாக போய் விடுமே.

அன்றொருநாள் கூட யாரோ ஒரு பெண் தன் பிள்ளைக்கு வைத்திருந்த பிஸ்கட்டை இந்தக் குழந்தைக்கு கொடுத்ததற்காக எப்படியெல்லாம் வசைபாடினாள் இந்தப் பிச்சைக்காரி? அந்த பெண்ணின் முகம் வெட்கத்தால் அப்படியே சிவந்து போயிற்றே. அப்பேர்ப்பட்ட இவளிடம் போய் 'உன் பிள்ளையை தத்தெடுக்கவா?'

என்று கேட்க முடியுமா? இன்னொரு நாள் வழக்கமாக அவள் அந்த குழந்தையுடன் பஸ்ஸில் ஏறினாள். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது குழந்தை. அதை தட்டியெழுப்பினாள் அந்தத்தாய். பார்த்துக் கொண்டிருந்த இவனுக்கு பெரும் ஆச்சரியமாய் போயிற்று.

வேலையில்லாத நாட்களிலும் அவன் நேர காலத்துடன் எழும்பினால் இன்னும் கொஞ்சம் தூங்கி எழுமாறு கூறும் இவனது அம்மா எங்கே? தூங்கும் பச்சைப் பிள்ளையை எழுப்பி விடும் அவள் எங்கே? மீண்டும் கவனித்தான். குழந்தை மீண்டும் அவளது தோளில் சாயும் போது அவள் அங்குமிங்கும் நோட்டம் விட்டாள். இவன் பார்ப்பதை அவள் காணவில்லை போலும். யாரும் அறியாத வண்ணம் குழந்தையின் தொடையில் கிள்ள, குழந்தை வீறிட்டுக் கதறி அழுதது. அவன் மலைத்துப் போனான். அழும் குழந்தையை காட்டி அவள் பணம் பெற்றுக்கொண்டிருந்தாள்.

வேலை விட்டு ஒரு தினம் வந்து கொண்டிருந்தான். கையில் வைத்திருந்த டொபி மனதை என்னவோ செய்தது. அவன் ஒரு முடிவுக்கு வந்தான். மனைவியிடம் பேசி அவள் சம்மதம் பெற்று நாளைக்கு எப்படியாவது இந்த பிள்ளையை தனக்கு தர முடியுமா என இவளிடம் கேட்டுவிட வேண்டும். எனினும் ஒரு பிச்சைக்காரியின் பிள்ளை என்றால் யாரும் விரும்பப் போவதில்லை என்பதை நன்கறிவான். அதனால் தனது அலுவலக நண்பனுடைய தோழியின் பிள்ளை என கூறியே வீட்டாரிடம் சம்மதமும் வாங்கிக்கொண்டான்.

**********

இப்போது குழந்தையும் தாயும் வழமையாக நடமாடும் இடத்திற்கு தேவா வருகின்றான். பொலிசார் ஏதோ விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அழ வைப்பதற்காக தாய் அடித்த அடியால் திணறிய குழந்தை இறந்து கிடக்கின்றது!!!

Jaffna Central College Library

## தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா பற்றி

பரந்த அனுபவங்களும், அவற்றை மனதில் தக்க வைத்து இரைமீட்டு, அசை போடும் மென்னுள்ளமும் கொண்ட ஒருவரால்தான் சமூக அக்கறையுள்ள படைப்பாளியாக தன்னை இனங்காட்ட முடியும். தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா அவர்களுக்கு மலையகம், நகர்புற வாழ்வு, முஸ்லிம் சமூகப் பின்னணி என முற்றிலும் மாறுபட்ட சூழல்களுக்குள் நனைந்தூறும் வாய்ப்பு இளவயதிலேயே வாய்த்துள்ளது. இதனால்தான் நீதி மறுக்கப்பட்ட சகமனிதர்களின் அவலங்களை அவரால் தனது படைப்புகளில் யதார்த்தமாகச் சித்தரிக்க முடிந்திருக்கிறது.



குழந்தைத் தொழிலாளர், பெண்களின் பாடுகள், சீதனக் கொடுமை, போர் அவலம், மலையகப் பிரச்சனை போன்ற பலவற்றையும் தனது சிறுகதைகளில் பாடுபொருளாகக் கொண்டு, உணர்வுபூர்வமாகச் சித்தரிப்பதை அவதானிக்க முடிகிறது. மனதுறையும் அக உணர்வுகளை மறைபொருளாய் வெளிப்படுத்தும் திறன்மிக்கவர். நூலாசிரியர் அலங்கார வார்த்தைகளால் வாசகனிடமிருந்து அந்நியப்படாது, பேசு தமிழை வசப்படுத்தி உருவேற்றி வாசகனுடன் உறவாடுவதில் கைதேர்ந்தவர்.

ஜனசங்கதய இலக்கிய அமைப்பின் சிறுகதைப் போட்டி, மலை நாட்டு எழுத்தாளர் மன்ற சிறுகதைப் போட்டி, யாழ் முஸ்லிம் வலைத்தளத்தின் கவிதைப் போட்டி போன்றவற்றில் பெற்ற பாராட்டுகளும், பரிசுகளும் இவரது படைப்பாற்றலைப் பரந்துபட அறியச் செய்திருக்கின்றன.

வீரகேசரி, தினக்குரல், தினகரன் உட்பட இலங்கையின் முன்னணிப் பத்திரிகைகளிலும், மல்லிகை, ஞானம், செங்கதிர், ஜீவநதி உட்பட இலங்கையின் முக்கிய சஞ்சிகைகள் அனைத்திலும் இவரது படைப்புகள் தொடர்ந்து வெளியாகின்றன. இணையத்தில் தனது வலைப்பதிவுகள் ஊடாகவும், இணைய சஞ்சிகைகள் ஊடாகவும் பதிவிடுகிறார். ரீவி, வானொலி ஊடகங்களிலும் தடம் பதிக்கிறார். இவ்வாறு வேகமாகவும், பரபரப்பாகவும் இயங்கும் அதே நேரம் படைப்பில் ஆழத்தை அவாவியும் படைக்கிறார்.

300ற்கு மேற்பட்ட கவிதைகள், 40ற்கு மேற்பட்ட சிறுகதைகள் என குறுகிய காலத்திற்குள் பெரும் அறுவடை செய்துள்ளார். பல நல்ல நூல்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் வண்ணம் நூல் விமர்சனங்களும் செய்கிறார். இதனால் இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில் உலா வரும் இன்றைய வாசகர்கள் தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவின் ஆக்கங்களில் நனைந்து திளைத்து மகிழாதிருக்க முடியாது. 'இன்னும் உன் குரல் கேட்கிறது' என்ற கவிதை நூலை ஏற்கனவே வெளியிட்டிருக்கும் இவர் குறிஞ்சி நிலா என்ற புனைப் பெயரிலும் எழுதுவது குறிப்பிடத்தக்கது.

Vaiharai
ISBN 978-955-52975-0-9
9789555297509

இவரது படைப்பாளுமைக்கு கட்டியம் கூறும் நூலாக இச்சிறுகதைத் தொகுப்பு வெளிவருகிறது. நெடும்பயணமாகத் தொடரப்போகும் இவரது இலக்கியப் பயணத்தில் வளமும், புகழும், சித்திகளும் கிட்ட வாழ்த்துகிறேன்.

**டொக்டர். எம்.கே. முருகானந்தன்**
**குடும்பநல மருத்துவர்**